மஞ்சரி

விஜய - வைகாசி

மே, 1953

மாயமாய் மறைந்த நிபுணர்
வருவதைச் சொல்லலாம்
ருஷியாவின் புதிய தலைவர்கள்
மீண்டும் மனோவசியம்
திக்கு வாயன் (எகிப்தியக் கதை)

-6- அணா

தெய்வம் எங்கே?

நான் எங்கே போனால் என்ன? எங்கே இருந்தால் என்ன? என் உள்ளத்தில் இருக்கும் தெய்வம் என்னை விட்டு நீங்காது.

— ஞானி மார்க்கஸ் அவுரீலியஸ்.

மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர்: என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர்: தி. ஜ. ரங்கநாதன்

பாஷை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன்
த. நா. ஸேனாபதி
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி
சீதா தேவி
கௌரி அம்மாள்
கா. ஸ்ரீ. ஸ்ரீ.
கி. தாமோதரன்
கி. சாவித்திரி அம்மாள்
'ஆர்வி'
மோ. ஸ்ரீ. செல்லம்

ஓவியர்கள்: ஸாமி, மகான், சுசி, சுப்பு.

மஞ்சரி, தபாற் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை 4. பிரதி மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 6 அணா. வருஷ சந்தா ரூ. 4/8. கலைமகள் சந்தாதார்களுக்கு மட்டும் ரூ. 4/-. சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புக. விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள்.

மஞ்சரியிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

ஆண்டு 6] விஜய-வைகாசி :: :: மே 1953 [இதழ் 6

மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

ஊரும் உலகமும்

★

இலங்கை இந்தியர் துயரம் தீரவில்லை. மனு செய்து இந்தியர் அங்கே பிரஜா உரிமை பெற வேண்டும் என்று சட்டம் வந்தது. இந்தியர் அதை எதிர்த்துச் சத்தியாக்கிரகமெல்லாம் செய்தார்கள். ஏதோ ஒரு விதமான சமரசம் ஏற்பட்டது. எட்டு லட்சம் இந்தியர் பிரஜா உரிமை வேண்டி இலங்கையில் மனுப் போட்டார்கள். கடைசி மனு தாக்கலாகிச் சுமார் 18 மாதம் ஆகிறது. இதுவரைக்கும் 17 ஆயிரம் இந்தியர்தான் பிரஜா உரிமை பெற்றிருக்கிறார்கள். இதற்கிடையில் இந்தியப் பிரதம மந்திரி நேரு, இலங்கைப் பிரதம மந்திரி ஸேனநாயகா இரண்டு பேரும் சந்தித்து, இரு நாட்டுக்கும் இடையே யுள்ள பல பிரச்னைகளையும் பேசித் தீர்த்துக்கொள்ளக் கூடும் என்று ஒரு செய்தி வந்தது. உண்மையிலே நட்பு முறையில் அவர்கள் சந்திப்பதானால், அதற்கு உரிய சூழ்நிலை வேண்டும். இலங்கை இந்தியக் காங்கிரஸ் தலைவர் தொண்டைமான் பேரம் பேசத் தயாராயிருக்கிறார். அவருடன் முதலில் இலங்கை சர்க்கார் பேசி, இலங்கை இந்தியர் பிரஜா உரிமைபற்றி ஒரு சமரச வழியை வகுத்தால்தான், இரு நாட்டுக்கும் உரிய பிற பிரசனைகளை நட்பு முறையில் தீர்த்துக்கொள்ள முடியும். இலங்கை சர்க்கார் இன்னும் வீணே பசப்பிக்கொண்டிருப்பதில் பயனில்லை.

* * *

பாகிஸ்தான் மந்திரி சபையை அதன் கவர்னர்-ஜெனரல் குலாம் முகமது திடீரென்று டிஸ்மிஸ் செய்துவிட்டார். அது நாஜிமுத்தீன் மந்திரி சபை. இப்போது முகம்மதலி மந்திரி சபை அமைந்திருக்கிறது. நாஜிமுத்தீனும் அவருடைய தோழர் நாலு பேருந்தான் போனார்கள். அவருடைய மந்திரி சபையில் இருந்த மற்றவரெல்லாம் புதிய மந்திரி சபையிலும் இருக்கிறார்கள். உணவு நெருக்கடியையும் வேறு சில கஷ்டங்களையும் சமாளிக்க நாஜிமுத்தீன் மந்திரி சபை சக்தியற்றது என்று கண்டதாலேயே அதைத் தாம் டிஸ்மிஸ் செய்ததாகக் கவர்னர்-ஜெனரல் கூறினார். பக்கத்து நாடான - அதுவும் நேற்று வரைக்கும் நம்மோடு நாமாக இருந்த - பாகிஸ்தான் அவ

திப்படாமல் சௌக்கியமாயிருப்பதில்தான் நமக்குச் சிரத்தை. அதோடு, நமக்கும் பாகிஸ்தானிகளுக்கும் உள்ள தகராறுகள் அனைத்தும் தீர்ந்து நட்பு உண்டாக வேண்டும். அதற்குப் புதிய மந்திரி சபை முயலும் என்றே தோன்றுகிறது. அது எப்படியானாலும் சரி, பாகிஸ்தான் கவர்னர்-ஜெனரல் செய்த காரியம் மிகவும் தீரமானது; ஆயினும், ஜனநாயகப் பயிருக்கு ஊறு செய்யக் கூடியது. ஏதோ துருக்கி போன்ற ஒன்றிரண்டைத் தவிர உலகெங்குமே மற்ற முஸ்லிம் நாடுகளிலெல்லாம் இன்று இந்த மாதிரி விபரீதங்கள் தான் நிகழ்கின்றன. ஒளிக்காமல் சொன்னால், முஸ்லிம் பெரு மக்கள் எது சம்பந்தமாகவும் மத வெறி கொண்டுவிடுவதே காரணம். அதை அரசியல்வாதிகள் தங்கள் சூழ்ச்சிகளுக்குப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். மதம் வேறு, அரசியல் வேறு என்ற உணர்வு முஸ்லிம் மக்களுக்கு உண்டானால் தான், அவர்களுக்கும் நல்லது; மற்றவர்களுக்கும் நல்லது.

* * *

கொரியாவில் யுத்தக் கைதிகளைப் பரிமாறிக் கொள்வது பற்றிச் சமரசம் ஏற்பட்டுவிட்டது மகிழ்ச்சிக்குரிய விஷயம். ஐ. நா. கைதிகளையும் கம்யூனிஸ்ட் கைதிகளையும் பரஸ்பரம் பரிமாறிக் கொள்ளத் தொடங்கிவிட்டார்கள். இனிப் போர் நிறுத்தம் பற்றிய பேச்சை மீண்டும் தொடங்க, ஐக்கிய நாடுகளின் சபை சம்மதித்துவிட்டது. போர் நிறுத்தம்பற்றிய ராஜிப் பேச்சு ஏற்கனவே பல மாதங்களுக்கு முன்பு நடந்து முறிந்து போயிற்று. யுத்தக கைதிகள் பரிமாற்றம் பற்றிய விஷயத்தில் உடன்பாடு ஏற்படாததுதான் அது முறிந்ததற்குக் காரணம். இப்போது மீண்டும் தொடங்கும் யுத்த நிறுத்தப் பேச்சுப் பயன் தர வேண்டுமானால், ஐக்கிய நாடுகளின் சபைப் பிரதிநிதிகள்-முக்கியமாக அமெரிக்கர் - தங்கள் சந்தேகங்களை விட வேண்டும். கம்யூனிஸ்டுகள்-முக்கியமாகச் சீனர் - அதே போல் நடக்கவேண்டும். இரு தரப்பினரும் நட்பு முறையில் சந்தித்து, மனம் விட்டுப் பேசி, பரஸ்பரம் விட்டுக் கொடுத்து ராஜி காண வேண்டும். இதற்காக எந்த நாட்டையும் பலி கொடுக்கக் கூடாது; கொரியாவைத் துண்டாடியபடியே வைத்திருக்கவும் கூடாது. துண்டு பண்ணிய ஜெர்மனியும் கொரியாவுமே உலக அபாய ஸ்தலங்களாக இன்று விளங்குகின்றன. நியாயமோ இல்லையோ, ஒன்றாயிருந்த நாடுகளை அப்படியே வைத்து ஐக்கிய பாவத்தை வலுப்படுத்தாமல் பிளவு செய்து, அல்ஸ்டர், பாலஸ்தீனம், பாகிஸ்தான் இவைகளைச் சிருஷ்டித்ததால் ஏற்பட்டிருக்கும் தொல்லைகளையும் உலக ராஜதந்திரிகள் இங்கே நினைவு கூரவேண்டும்.

* * *

சென்னை நகரில் சுமார் 60-வருஷ காலமாக ஓடிக்கொண்டிருந்த ட்ராம் வண்டிகளைச் சென்ற மாதம் 12-ஆம் தேதியிலிருந்து ட்ராம் கம்பெனியார் நிறுத்திவிட்டார்கள். மாதம் ஒன்றுக்குச் சுமார் 40 ஆயிரம் ரூபாய் நஷ்டம் வந்ததே காரணமாம். இதுபற்றிக் கம்பெனியின் கமெர்ஷியல் மானேஜர் ஜே. பி. பியர்ட்

ஸெல், தற்போதைய ரிஸீவர் பி. ஜி. ப்ரூக்ஸ் இருவர்மீதும் சென்னை சர்க்கார், கிரிமினல் வழக்குத் தொடுத்திருக்கிறார்கள். ட்ராம் கம்பெனிக்கும் தொழிலாளருக்கும் இடையே இருந்துவந்த தகராறுகள் சம்பந்தமாகத் தொழிலாளர் கொடுத்த மனு, ட்ரிப்யுனல் என்ற பஞ்சாயத்தாரின் முன்பு விசாரணையில் இருக்கிறது. ஆகவே, விசாரணையில் இருக்கும் விஷயங்கள்பற்றி நாம் இப்போது ஒன்றும் சொல்வதற்கில்லை. வேறு சில அம்சங்களைக் குறிப்பிட விரும்புகிறோம். கீழ் நாட்டிலேயே முதல் முதலாக எலெக்ட்ரிக் ட்ராம் ஏற்பட்டது சென்னையில்தான். 1877-இல் குதிரை கட்டி இழுத்த ட்ராம் சென்னையில் தண்டவாளத்தின்மீது ஓடியதாம். 1895-மே மாதந்தான் எலெக்ட்ரிக் ட்ராம் சென்னையில் ஓடத் தொடங்கியது. சென்னை ட்ராம் பாதைகளின் மொத்த நீளம் $16\frac{1}{4}$ மைல். ஓடிய கார்கள் 103. ஒவ்வொன்றிலும் முன்னும் பின்னுமாக இரண்டு மோட்டார்கள் உண்டு. கார்கள் தினம் ஓடிய மொத்த தூரம் 7,000 மைல். சவாரி செய்த பிரயாணிகள் 1,25,000 பேர். ஸீஸன் டிக்கட் வாங்கியவர் சராசரி 6,000 பேர். வேலை பார்த்த ட்ராம் ஊழியர் 1,650 பேர். ட்ராம் நின்றது பற்றி நமக்குக் கவலையில்லை. பல அம்சங்களைக் கவனிக்கும்போது, ட்ராம் இனித் திரும்பாமல் இதோடு போய்விட்டாலே நலம் என்றுகூடத் தோன்றுகிறது. ஆனால், அதனால் 1650 பேருக்கு வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படும். அதைச் சமாளிப்பது அவசியம். இது போக, இன்னொரு விஷயத்தைக் குறிப்பிட்டாக வேண்டும். ட்ராம் நின்றதால், போக்குவரத்துத் தொல்லையும் அவதிகளும் ஏற்படாதபடி, உடனடியாகப் பல பஸ்களை விட்டுச் சமாளித்ததற்காக ராஜாஜி சர்க்காரை - முக்கியமாக மந்திரி ஸ்ரீ கிருஷ்ண ராவை - நாம் பாராட்டத்தான் வேண்டும்.

ரகஸ்யத் திருமணம்

ஹாலிவுட் நடிகை ஒருத்தியின் ரகஸ்யத் திருமணத்துக்கு ஆயிரமே ஆயிரம் விலாசங்களுக்குத்தான் அழைப்பிதழ் அனுப்பினார்களாம்.

—ஏகிரியென் ஆண்டர்ஸன்

வம்பளப்பது பிடிக்காதவர் யார்?

எந்த ஜனங்களுக்கும் வம்பளப்பது பிடிக்காதிருக்கும் சமயம் ஒன்றே ஒன்றுதான்; தங்களைப்பற்றிய வம்பளப்பு நடக்கும் சமயம்.

—வில் ரோகர்ஸ்

வம்பளப்பது எனக்குப் பிடிக்கும் என்று எவரும் ஒப்புக்கொள்வதில்லை; ஆனால் எல்லா ஜனங்களுமே அதை ரசிக்கிறார்கள்.

—ஜோஸஃப் கான்ராட்

சர்வாதிகாரத்துக்கு வழிகாட்டி

ப்ளூடார்க் சித்திரித்த லைக்கர்கஸ்

மனித வாழ்க்கையில் இன்பங் காணக் கருதிய கற்பனை உலகங்கள் பலவிதம். 'பிராணி சுகமே முக்கியம்' என்று எண்ணும் சர்வாதிகார ஆட்சிக்கு வழிகாட்டிய ஒரு பழைய கற்பனையை இங்கே விளக்குகிறார் அன்பர் ரா. ஸ்ரீ. தேசிகன்.

ஸ்பார்ட்டா குடியரசை நினைக்குந்தோறும் அந்த நாட்டின் சட்டத்தை அமைத்த லைக்கர்கஸ் (Lycurgas) என்ற சான்றோனின் உருவம் நம் முன் உலவாமற் போகாது. கிறிஸ்து பிறப்பதற்கு முன் முதல் நூற்றாண்டில் திகழ்ந்த ப்ளூடார்க் (Plutarch) என்ற உலகப் பிரசித்தமான சரித்திர ஆசிரியர் சித்திரித்த உருவந்தான் நம் முன் நிற்கிறது. எதன்ஸ் நகரம் பிளேட்டோவின் 'குடி அரசை' நமக்கு நினைவூட்டும்; ஸ்பார்ட்டா குடியரசு லைக்கர்கஸை நம் சிந்தைக் கோயிலில் எழுப்பும். ப்ளூட்டார்க்கும் அவரைப்பற்றி ஐயமற ஒன்றும் கூறிவிடவில்லை. மேலும் இரண்டு லைக்கர்கஸ்கள் இருந்தார்கள் என்று சரித்திர ஆசிரியர்கள் கருதுகிறார்கள்.

இந்த உருவங்கள் சரித்திர உண்மைகளின் அஸ்திவாரங்கள் மீது எழுந்தவையா? அல்லது ப்ளூடார்க்கின் கற்பனை உலையிலிருந்து வார்த்தெடுக்கப் பெற்றவையா? எதும் சொல்வதற்கில்லை. உண்மை எப்படி இருந்தாலும் சரி; அதைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. ஸ்பார்ட்டாவில் அமைந்து கிடந்த சட்டதிட்டங்கள், ஐந்நூறு வருஷகாலம் அரசு செலுத்தின என்ற உண்மையை மட்டும் எவராலும் மறுக்க முடியாது.

க்ரீட், எகிப்து முதலிய நாடுகளில் லைக்கர்கஸ் சஞ்சரித்ததாகக் கூறுகிறார்கள். தம்முடைய பழுத்த அநுபவத்தைக் கொண்டு ஒரு புதிய அரசை நிர்மாணம் செய்தார் என்று சொல்கிறார்கள்.

லைக்கர்கஸ் பதவிக்கு வந்த விஷயத்தைப்பற்றி ப்ளூட்டார்க் பகர்ந்த விஷயம் இங்கே நோக்கத் தகுந்தது. ஒரு நாடகச் செய்தி போல அது காட்சி அளிக்கிறது. கீழ்வானம் வெள்ளென வெளுக்கு முன் நாட்டில் பிரபலமாயுள்ள 28 நகர மாந்தர்களை ஆயுதபாணிகளாய்ச் சந்தை கூடும் இடத்தில் நிற்கும்படி அவர் செய்துவிட்டார். அங்கே ஆண்டு வந்த இரண்டு வேந்தர்கள் இதைக் கண்டு அஞ்சிச் சரணம் புகுந்தார்கள். இந்த முப்பது மனிதர்களும் இவருக்கு உதவியாய் நின்றார்கள். இந்த முப்பது பேரையும் கொண்ட ஸெனேட் (Senate) என்ற குழு ஒன்றை இவர் நிறுவிவிட்டார். இடம் காலி விழுமானல், அறுபது

ஆண்டு நிறைந்த ஒரு நபரை, கூடியிருக்கிற ஜனங்கள் தேர்ந்தெடுத்து இந்த ஸெனேட்டுக்கு அனுப்புவார்கள்.

முன்பு ஒரு வரம்புக்கும் அடங்காமலிருந்த வேந்தர்கள், இப்போது ஓர் ஒழுங்குக்கு வந்துவிட்டார்கள். இந்த ஸெனேட் ஒரு நடுநிலையில் நின்றது.

மக்கள் வேந்தர்களை எதிர்க்க நேருமானால், வேந்தர்களுக்கு இது உதவி அளிக்கும்; வேந்தர்கள் மக்களை வருத்தத் தொடங்கினால், அவர்கள் பக்கம் இது சாயும். நியாயத்தை நிலை நாட்டுவதே இந்த ஸெனேட்டின் நோக்கம்.

இந்த ஸெனேட்டுக்குச் சகாயமாய் இருந்தது மக்களின் சபை (The Assembly of the People). மக்களின் சபைக்கு விஷயங்களை நேரே கவனிக்க அதிகாரம் இல்லை. ஆனால் ஸெனேட்டும் அரசர்களும் சேர்ந்து முடிவுக்கு வந்த விஷயத்தை ஆமோதிக்கவோ நிராகரிக்கவோ இடம் உண்டு. வெட்ட வெளியில் மக்கள் தங்கள் சபைகளை வைத்துக்கொள்ள வேண்டும். விஷயங்களை ஆராய்ச்சி செய்ய மண்டபங்கள் பயன்பட மாட்டா. மக்களுடைய கவனம் அற்ப விஷயங்களை நாடிற்று. சிலைகளையும் ஓவியங்களையும் அழகான விதானங்களையும் அவர்கள் பார்த்துக் களித்தார்கள்.

ஒருவாறு அரசியலை அமைத்த பிறகு சமுதாயப் பிரச்னைகளை லைக்கர்கஸ் கவனிக்கத் தொடங்கினார். ஏழை மக்களுக்கும் செல்வம் படைத்தவர்களுக்கும் உள்ள வித்தியாசத்தைப் பார்த்து அதை அகற்ற ஓர் உபாயத்தை நாடினார். ஏழை மக்களிடம் வைத்த இரக்க உணர்ச்சி இவரை இந்தத் துறையில் தூண்டி விடவில்லை. பணக்காரர்கள் வரம்பு கடந்த ஆற்றலை அடைந்துவிட்டால், அரசியலுக்கு ஆபத்து வந்துவிடுமோ என்ற அச்சந்தான் இவரை இந்த நெறியில் இறங்கும்படி செய்தது.

அடிமைகளைப்பற்றி இவர் கவலை கொள்ளவில்லை. ஹெலட்ஸ் (Helots) என்ற பெயரைத் தாங்குகிற அடிமைகளுக்கு யாதோர் உரிமையும் இல்லை.

அரசியலைத் தாங்குகிற மக்களிடையேதான் இவர் சம சொத்துரிமை ஒன்றை நிலைநாட்டப் பார்த்தார். நிலத்தை 9,000 துண்டாகப் போட்டு அவைகளை மக்களிடையே பிரித்துக் கொடுத்தார். அறுவடையான சமயத்தில் வயலில் குவிந்து கிடந்த தானியங்களைப் பார்த்து, "சகோதரர்களுக்குச் சமபாகம் செய்தது போல நம் நாட்டில் கிடக்கிற செல்வத்தைப் பாருங்கள்" என்று இவர் சிலரிடம் சொன்னாராம். இப்படிச் சமமாய் நிலம் இருக்குமானால் அதிகார தோரணையில் எழும் இறுமாப்பும் அழுக்காறும் பேராசையும், செல்வத்தில் உழல்கிற தன்மையும் தலையெடுக்குமா? உன்னிப் பாருங்கள்.

தாவர (Immovable) சொத்தைப் பிரித்தது போல ஜங்கம (movable) சொத்தையும் சமமாகப் பிரிக்கப் பார்த்தார். இந்த விஷயத்தில் அதிகமான வெற்றி கிடைக்கவில்லை. ஆனால் வேறு முறையில் ஒரு பரிகாரம் தேடினார். தங்க வெள்ளி நாணயங்களை நிறுத்திவிட்டார். இரும்பு நாணயம் அமலுக்கு வந்தது. இரும்பு நாணயத்துக்கு மதிப்பு அதிகம் இல்லை. அதை நிறையச் சேர்த்தால் ஓர் அறையை

நிறைத்துவிடும். இந்த நிலையில் யார் திருடுவார்கள்? யார் லஞ்சம் கொடுப்பார்கள்? யார் ஏமாற்று வார்கள்? இந்த இரும்பை வைத்துக்கொண்டு செருக்கடைய முடியாதல்லவா? இதை வெட்டினுல் என்ன பயன் தரும்? தவிர, தேவையில்லாதவையும், பயனற்றவையுமான கலைகளை இவர் அகற்றிவிட்டார்.

வெளிநாட்டுச் சாமான்கள் உள்நாட்டுக்கு வர முடியாது. இரும்புக்காக யார் பொருள் தருவார்கள்? தேவையான சாமான்களைத்தான் மக்கள் தயார் செய்தார்கள். போகத்துக்கு (Luxury) அங்கே இடமில்லை. வீட்டுக் கூரைகளை அழகு பெறச் சமைக்க அவர் இடந்தரவில்லை. எப்பமினுண்டாஸ் (Epaminondas) என்ற வீரன் தன் சாதாரண உண்டியைத் தாங்கும் மேஜையைப் பார்த்து, "இத்தகைய ஆடம்பரமற்ற மேஜைக்கு அடியில் துரோகம் கரந்து நிற்குமோ?" என்று கூறினுனும். ஆடம்பரமற்ற ஸ்பார்ட்டா வீரர்களின் இல்லங்களில் ஒருவிதமான போகத்துக்கும் இடமில்லை என்று சொல்லலாம்.

மிதத்தைப் போற்றிப் பேசினுர் பிளேட்டோ. எப்போதும் போர் புரிகிற நிலையிலேயே ஸ்பார்ட்டா வீரர்கள் இருந்தபடியால் போகத்தை அவர்களுடைய உள்ளம் நாடவில்லை.

பலர் சேர்ந்து சாப்பிடுவதற்குப் பொதுப் போஜனசாலைகளை லைக்கர்கஸ் அமைத்தார். ஒவ்வொரு மேஜையிலும் 15 பேர் உண்டி அருந்தலாம். ஒவ்வொருவரும் மாதந்தோறும் ஒரு புஷல் ஆகாரம், எட்டு காலன் சாராயம், 5 பவுண்டு பாலாடைக் கட்டி, 2½ பவுண்டு அத்திப்பழம் இவைகளோடு, மாமிசமும் மீனும் வாங்கச் சிறு நாணயமும் கொண்டு வரவேண்டும். முதல் முதலில் ஒருவர் தம் வீட்டில் தெய்வத்துக்குப் பலி (Sacrifice) இட்டுப் படைத்தால், அன்றைய தினம் எல்லாரும் அவர் வீட்டில் உண்டி அருந்தலாம். அந்தப் பலியில் படைத்த பொருளின் ஒரு பாகத்தைப் பொதுப் போஜனசாலைக்கு அனுப்பிவிட வேண்டும்.

தொட்டிலிலிருந்து சவக்குழி வரையிலும் மக்களை அரசியல் விதிகள் தொடர்ந்தன. போஜனசாலைகளுக்குக் குழந்தைகளும் வரும். அங்கே அரசியல் சம்பாஷணைகள் நடைபெறும். சகல மக்களும் எளிய வாழ்க்கையே வாழ்ந்தார்கள்; சமுதாய நலனுக்காகவே வாழ்ந்தார்கள். இந்த இரண்டு அம்சங்களும் சிறுவர்களின் பசிய மனத்தில் நன்ருய்ப் பதிந்துவிடும்.

மனம் போனவாறு மணம் புரிந்துகொள்ள முடியாது. சமுதாயத்தின் நன்மைக்காகவே மணவினையை முடிக்கவேண்டும். சம உரிமையால், அழுக்காறு அகன்றுவிட்டது. நல்ல மக்களைத் தரக்கூடிய ஆடவர்களிடம் தம் மனைவிகளை அனுப்பலாம். மணம் ஆன பிறகுங்கூட, தனித்த வாழ்க்கையை ஒருவன் மேற்கொண்டு பொது அறைகளில் துயிலலாம். மனைவியைச் சேர்வதற்காகச் சில சமயம் சந்திக்கலாம்.

வயது சென்ற ஒரு மனிதன் தன் இளம் மனைவியை அழகு வாய்ந்தவனிடம் விட்டு அவன் மூலமாகக் கிடைக்கும் மகனைத் தன் மகன்போலக் கருதலாம்.

ஆண்மகனைக் கவரும் பொருட்டுப் பெண்கள் அலங்காரம் செய்து கொள்ள வேண்டும் என்றார் லைக்கர்கஸ். ஆடைகளில்லாமல் ஆண்களின் முன்பு அவர்கள் நடனம் செய்வார்கள். இப்படி நடனம் புரிவதால், அதிகமான மென்மை அவர்களுடைய உடல்களிலிருந்து நீங்கிவிடும். மேலும் இத்தகைய நடனங்கள் மணத்துக்கு ஒரு தூண்டுகோலாகவும் அமையலாம். இப்படி நடனமாடியும் ஆண்கள் மனம் மாருவிட்டால், சந்தை கூடும் இடத்தைச் சுற்றி அந்த ஆண்களைக் கடுங்குளிரில் உடையில்லாமல் துரத்திச் செல்வார்கள் அதிகாரிகள். தங்களுக்கு விரோதமான பாடல்களை அவர்கள் பாடிக்கொண்டே செல்ல வேண்டும். சட்டத்தை எதிர்த்ததற்காக இந்தத் தண்டனையை அவர்கள் அநுபவித்தாக வேண்டும்.

மணமகன் மணமகளைப் பலவந்தமாகத் தூக்கிச் செல்வான். சிறு வயதிலே அவளை யாரும் வரிக்க மாட்டார்கள். அவள் வயது வந்தவளாய் இருக்க வேண்டும். வரித்த பெண்ணின் தலைமயிரை மணமகன் ஒட்ட வெட்டி விடுவான். ஆண்கள் அணியும் உடையை அவன் அவளுக்கு உடுத்துவான். ஒரு வெறும் பாயில் அவளை இருட்டில் விட்டுவிட்டு அப்புறம் அகன்று விடுவான். பிறகு அவளை மற்ருேர் அறைக்கு அழைத்துச் செல்வான். சற்று நேரம் அங்கே தங்கிவிட்டுத் தன் நண்பர்களோடு மீண்டும் உறங்கப் போவான். இப்படிக் கள்ளத்தனமாய்த்தான் கூட வேண்டும். இதனுல் அவர்களின் ஆசை மழுங்காமல் கூர்மை அடைகிறது. லைக்கர்கஸ் மக்களுக்குச் சிறிது சுதந்தரமாவது அளித்திருக்கிருர். இந்தச் சுதந்தரங்கூட ப்ளேட்டோவின் குடியரசில் கிடையாது.

மக்கள் தாங்களே தக்க மனைவிகளையோ, புருஷர்களையோ தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம். ஆனுல் பிறக்கிற குழந்தையை லெஸ்கி (*Lesche*) என்ற இடத்துக்கு எடுத்துச் செல்லவேண்டும். அங்கே கூடியிருக்கிற பெரியோர்கள் பார்த்து ஆமோதித்தால், அந்தக் குழந்தைக்கு வேண்டிய கல்வி, நிலம் எல்லாம் கிடைக்கும். அந்தக் குழந்தை பலவீனமாய்த் தோன்றுமானுல் டேகிடஸ் (*Taygetus*) என்ற மலைக்குப் பக்கத்திலுள்ள ஆழமான ஒரு குகைக்குள் அதை எறிந்துவிடுவார்கள். இத்தகைய குழந்தையினுல் தமக்கும் பயனில்லை, சமுதாயத்துக்கும் பயனில்லை என்று ஸ்பார்ட்டா மக்கள் கருதினுர்கள்போல் தோன்றுகிறது.

பெற்ருேர்கள் தங்கள் விருப்பப்படி தங்கள் குழந்தைகளுக்குக் கல்வி அளிக்க முடியாது. பையனுக்கு எழு பிராயம் வந்ததும், ஒரு குழுவில் அவன் சேரவேண்டும். முற்றும் அதிகாரத்தின் கீழேதான் அவன் வளரவேண்டும். எந்த ஒரு பையன் தைரியமும் ஆற்றலும் காண்பிக்கிருனே அவனே குழுவின் தலைவனுகி விடுவான். மற்றவர்கள் அவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும்.

எது தேவையோ அதைத்தான் அவர்கள் கற்ருர்கள். சமுதாயத்துக்காக உழைக்க வேண்டும். அதிகாரம் செய்ய அவர்கள் கற்ருர்கள். கடுமையான வேலையைச் சகித்துக்கொண்டு, செய்ய நேரிடும். போரிடவே அவர்கள் தயாரானுர்கள்.

தலைமயிரை அவர்கள் ஒட்ட வெட்டிக்கொண்டார்கள். உடை இல்லாமலே குழந்தைகள் விளையாடினார்கள். காலுக்குக்கூட ஒன்றும் அணிவதில்லை. பன்னிரண்டாம் பிராயத்தில் அவர்களின் இடுப்புடையை அகற்றி விடுவார்கள்.

வருஷத்துக்கு ஒரு முறை அவர்களுக்கு மேலாடை அளிப்பார்கள். அவர்கள் குளிக்க மாட்டார்கள்; உடம்பு சுத்தமாக இராது. ஏதாவது விசேஷ தினங்களில்தான் எண்ணெய் மேலே படும். சேர்ந்தே தூங்குவார்கள். தாங்களே கொய்த நாணல் படுக்கைகளில் படுப்பார்கள். குளிர் காலத்தில் சற்று வெப்பத்தைத் தருகிற செடி கொடிகளை அவர்களுக்கு அதிகாரிகள் அளிப்பார்கள்.

வயது வந்த பையன்களுக்கு இன்னும் கடுமையான நிபந்தனைகள் உண்டு. தோட்டங்களில் புகுந்து அவர்கள் கொள்ளை அடிப்பார்கள். சிக்கினால்தான் அவர்களுக்குத் தண்டனை. சிக்காத வரையில் அதை ஒரு சாமர்த்தியமாகவே மக்கள் கருதினார்கள். சிக்கினால் சாட்டை அடி கிடைக்கும்; பட்டினி போட்டுவிடுவார்கள்.

அதிகாரிகள் பெண் கல்வியைக் கவனிக்காமலில்லை. அவர்களின் உடல் நலத்தைப் பேணினார்களே தவிர, அகவுயிர் வளர்ச்சியைக் கவனிக்கவில்லை. ஓட்டம் குஸ்தி முதலிய உடற் பயிற்சிகளில், கல்யாணமாகாத கன்னிப்பெண்கள் இறங்கினார்கள். வீரத் தாய்மார்களை ஸ்பார்ட்டா படைத்துத் தந்தது. இவர்களுக்குப் பிறக்கிற குழந்தைகள் வீரர்களாய்த்தான் திகழ்வார்கள். அரசியல் அலுவல்களில் அவர்கள் அமர்ந்தார்கள் என்று சொல்லுவதற்கில்லை.

சமுதாயத்தின் தேவைப் பொருள்களை ஹெலட்ஸ் என்ற அடிமைகளே படைத்துத் தந்தார்கள். ஸ்பார்ட்டா மக்களோ, படிப்பு, போர்ப்பயிற்சி இவைகளில் காலத்தைப் போக்கினார்கள். அடிமைகளின் உழைப்பு என்ற அஸ்திவாரத்தின்பேரில் ஸ்பார்ட்டாவின் அரசியல் நின்றது. இதை நாம் மறக்கவே முடியாது. விளையாட்டுக்காகவே அடிமைகளை ஸ்பார்ட்டா மக்கள் வேட்டையாடிக் கொன்றார்கள் என்றால், இதைவிட வேறு தீய செயலும் வேண்டுமோ? அடிமைகளைக் குடிக்கச் செய்வார்கள். குடித்தால் இந்த நிலைக்கு மனிதன் வந்துவிடுவான் என்று இளைஞர்களுக்குக் காண்பிப்பார்கள். இழிவான பாடல்களைப் பாடச் செய்வார்கள். ஆபாசமான கூத்துக்களை ஆடும்படி செய்வார்கள். இத்தகைய அலுவல்களை நோக்கினால் மனித இனத்தை இரண்டு விதமாய்ப் பிரித்த கொடுமை நன்கு புலனாகும்.

ஸ்பார்ட்டா மக்களைச் சுதந்தரம் படைத்தவர்கள் என்று ப்ளுடார்க் சொல்லுகிறார். அடிமைகளைத் துன்புறுத்துகிறவர்களிடம் என்ன சுதந்தரம் இருக்கப் போகிறது?

ஸ்பார்ட்டா மக்கள் தங்கள் நாட்டிலேயே சுதந்தரமற்றவர்களாக இருந்தார்கள். அவர்கள் வெளிநாட்டுக்குப்போகக் கூடாது. அந்நியர்களும் அவர்களுடைய நாட்டுக்கு உள்ளே வரக் கூடாது. துயூஸிடிடீஸ் (Thucydides) என்பவர் அந்நியரைத் தம் நாட்டுக்கு உள்ளே விடப் பயந்த காரணம் வேறு. ஒரு வேளை தம்முடைய நாட்டின் அரசியல் தன்மையைப்

பார்த்து இதைப்போல வேறு ஒன்றை அமைத்து அந்நியர் பெருமை ஒன்றை அடைவதில் அவருக்கு உடன்பாடில்லைபோல் இருக்கிறது. லேக்கர்கஸ் அஞ்சின விஷயம் இதுதான்: அந்நியர் தம் மக்களைக் கெடுத்துவிட்டால் என்ன செய்வது என்ற கேள்வியே அவர் மனத்தைச் சஞ்சலமடையும்படி செய்தது.

அந்த நாட்டில் மனிதனுக்குச் சுதந்தரம் இல்லை. சமுதாயத்துக்காகவே அவன் வாழ்ந்தான். லேக்கர்கஸ் நிறுவிய அரசியலில், இப்போது மாண்ட ஸ்டாலினுடைய குரலை நாம் கேட்கிறோமென்றால், அதில் வியப்பு அடையாமல் இருக்க முடியுமோ? நீண்ட காலக்கூடத்தில் லேக்கர்க்ஸின் குரல் இன்னும் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

எந்தப் புஸ்தகத்தில் இருக்கிறது?

ஜார்ஜ் வாஷிங்டன் கார்வர் என்ற நீக்ரோ ஒரு ரசாயன சாஸ்திரி. சிறந்த கல்விமான். நிலக் கடலை சம்பந்தமாக அவர் செய்த ஆராய்ச்சிபற்றி செனேட் கமிட்டி ஒன்றின் முன்பு அவர் பதில் சொல்ல வேண்டி வந்தது.

கமிட்டியார்: இந்த நிலக்கடலையின் ரகஸ்யங்களை நீங்கள் எங்கே கற்றீர்கள்?

நிபுணர்: ஒரு பழைய புஸ்தகத்திலிருந்து.

கமிட்டி: அது என்ன புஸ்தகம்?

நிபு: பைபிள்.

கமிட்: நிலக்கடலை பற்றி, பைபிள் என்ன சொல்கிறது?

நிபு: ஒன்றும் சொல்லவில்லை. ஆனால், நிலக் கடலையைச் சிருஷ்டித்த கடவுளைப்பற்றி அது சொல்கிறது. அதை என்ன செய்வது என்பதை எனக்குக் காட்டிக் கொடுக்கும்படி அவரை நான் வேண்டிக்கொண்டேன். அவர் அப்படியே காட்டிக் கொடுத்தார்.

—இர்விங் ஹாஃப்மான்

'நான் ராஜா ஆகவேணுமா?'

ஸ்வீடன் தேசத்து ஆறுவது கஸ்டவ் மன்னர், ஏதோ ஒரு விசேஷ நாளில் மாடி வராந்தாவில் நின்று தம் குடிகளுக்குக் காட்சி அளித்துக்கொண்டிருந்தார். அப்போது, அவர் தம் பேரன் கார்ல் என்ற ராஜகுமாரனை நோக்கி, "கார்ல், இங்கே வராந்தாவுக்கு ஓடி வா. என்னோடு நில். நீயும் ஒரு நாள் ராஜாவாகப் போகிறாய்" என்று கூப்பிட்டார்.

சிறுவன் முகத்தைச் சுளித்துக்கொண்டான். ஸோபாவில் தன் தாத்தா அமர்ந்து காட்சியளிக்கும் சமயங்கள் அவனுக்கு ஞாபகம் வந்திருக்கவேண்டும். "தாத்தா, நானும் ராஜா ஆகத்தான் வேணுமா? ராஜா ஆகி ஸோபாவில் சாய்ந்து இருமித்தான் ஆகவேணுமா?" என்று கவலையோடு அவன் கேட்டான்.

—'காரொனெட்'

ரமணர்

வாழ்வும் வாக்கும்

ஆத்மஞானத்துக்கு முன் மற்ற ஞானமெல்லாம் அற்பம் என்பதைத் தம் வாழ்க்கையால் நிரூபித்துக் காட்டியவர் மகரிஷி ரமணர். இவர் வாக்கு ஸ்வாநுபவம் பொதிந்தது.

குளவி கொடுத்த தண்டனை: ரமண முனிவர் விரூபாட்ச குகையில் சிலகாலம் தங்கியிருந்தார். அந்தக் காலத்தில் ஒரு நாள் காலை ஐந்து மணிக்கு அவர் ஒரு குறிப்பும் இல்லாமல் புறப்பட்டார். மலைமேல் மெல்ல மெல்லப் போய்க்கொண்டிருந்தார். இடையில் அங்கங்கே கால்மணி, அரை மணி உட்காருவது, மறுபடியும் கொஞ்ச தூரம் நடப்பது இப்படி நிதானமாகப் போனார். ஒரு பெரிய ஆலமரம் மலைச்சாரலில் உண்டு. பத்து மணி இருக்கும்; பகவான் அந்த ஆலமரத்தைக் கண்டார். அது மலையின் நடுவில், உச்சிக்கும் அடிவாரத்துக்கும் இடையே இருந்தது.

ஆலமரத்துக்குச் சற்றுத் தூரத்தில் வரும்போதே அதன் பரப்பும் நிழலும் கண்ணைக் கவர்ந்தன. பகவான் அதை நோக்கிச் சென்றார். குளிர்ந்த நிழலைத் தந்த அது பல மக்கள் தங்கும் பெரிய மண்டபத்தைப் போல இருந்தது. அந்த மரத்தைப் பகவான் அணுகிக் கொண்டிருந்தார். இன்னும் மரத்தின் அடிக்கு வரவில்லை. அதற்குள் அவர் தம்மை அறியாமலே அங்கிருந்த குளவிக் கூட்டில் காலை வைத்துவிட்டார். அப்படி வைத்தது இடக்கால். உடனே அதில் இருந்த குளவிகள் எல்லாம் ஒரேயடியாக அந்தக் காலை மொய்த்துக்கொண்டு கொட்டத் தொடங்கின. பகவான் தம் காலைச் சிறிதும் அசைக்கவில்லை. குளவிகள் வலக்காலையோ, உடம்பின் மற்றப் பகுதியையோ அணுகவில்லை. எந்தக் கால் தங்கள் இருப்பிடத்தைக் கலைத்ததோ அந்தக் காலையே கொட்டின.

குளவி கொட்டினால் எப்படி இருக்கும்! அந்த வேதனையை நினைத்தாலே மனம் நடுங்கும். இந்த முனிவர்பிரானோ சிறிதும் அசையாமல், நடுங்காமல் அப்படியே நின்றுகொண்டிருந்தார். "குளவிகளுக்குத் தீங்கு இழைத்தாய் அல்லவா? படு, படு: நன்றாகப் படு. உனக்கு இது வேண்டும்" என்று சொல்பவரைப்போல அந்தக் காலை நோக்கியபடியே நின்றார். உடம்பை வேறாகக் காணும் உயர்நிலை பெற்ற மகா ஞானியாதலால், உடம்பிலே வேதனை உண்டாகியும் அதைச் சாட்சியாக இருந்து அநுபவித்தார்.

இப்படிச் சிறிது பொழுது நின்றார். குளவிகள், "போதும் தண்

டனே" என்று நினைத்தவை போலப் போய்விட்டன. அவை அபராதத்துக்கு ஏற்றபடி தண்டித்துவிட்டன என்ற உணர்வோடு பகவான் காலை எடுத்து வைத்தார். கால் முழுதும் வீங்கி விட்டது. நடக்க முடியவில்லை. மெல்ல மெல்ல மரத்தடி போய்ச் சேர்ந்தார். அங்கிருந்து பச்சையம்மன் கோவிலுக்குப் போய்த் தங்கினார். மறுபடி விருபாட்சக் குகைக்கு வர மாலை ஐந்துமணி ஆகிவிட்டது. அதுவரையில் அவர் உணவுகூடக் கொள்ளவில்லை.

(வாழ்வு)

உபாசனை மூர்த்தி: ஒருநாள் அமெரிக்கர்கள் சிலர் பகவானைப் பார்க்க வந்தார்கள். அவர்களில் ஒருவர் பகவானைப் பார்த்து, "இஷ்டதெய்வம் என்று சொல்கிறார்களே; அப்படி ஒருவர் உண்டா?" என்று கேட்டார்.

அதற்குப் பகவான், "ஆம்; ஈசுவரன் இருக்கிறானே" என்றார்.

அந்த அமெரிக்கர் வியப்படைந்தவராய், "என்ன? கண், மூக்கு, காது, கால், கை இவற்றோடா?" என்று கேட்டார்.

"ஆம். அதில் என்ன தவறு? உங்களுக்கு அந்த அங்கங்களெல்லாம் இருக்கும்போது கடவுளுக்கு இருக்கக் கூடாதா?" என்று பகவான் சொன்னார்.

"இந்துக்களின் நூல்களில் கடவுளுக்கு இப்படி அவயவங்கள் இருக்கின்றன என்று எழுதியிருப்பதைப் படிக்கும்போது எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது."

"அப்படியா? அப்படியானால் உங்களுக்கு அவயவங்கள் இருக்கின்றனவே; அவைகளைப் பார்த்து உங்களுக்கு என் சிரிப்பு வரவில்லை?" என்று பகவான் கேட்டார்.

அருகில் உள்ளோர் யாவரும் சிரித்தார்கள். (வாக்கு)

வந்த வழியே போ: 1940-இல் ஓர் அன்பர் ஆசிரமத்துக்கு வந்தார். பகவான் முன்னிலையில் அரை மணிநேரம் உட்கார்ந்திருந்தார்.

"ஸ்வாமி, நான் மேல்நாட்டுத் தத்துவ சாஸ்திரங்களையெல்லாம் படித்திருக்கிறேன். அப்படியும் உண்மையை அறிய ஒன்றும் பிரயோசனப் படவில்லை. நம்முடைய ரிஷிகளோ ஒருவர் சொன்னமாதிரி ஒருவர் சொல்கிறதில்லை. சங்கரர், 'அகம் பிரம்மாஸ்மி என்று சொல்லிக் கொண்டேயிரு; நீ பிரம்மமாகி விடுவாய்' என்கிறார். மத்வாசாரியரோ பிரம்மம் எப்போதும் ஆத்மாவினின்றும் பிரிந்து வேறாகவே இருப்பது என்று சொல்கிறார். தாங்களோ, 'நான் யார் என்று விசாரித்தால் சரியான இடத்தை அடையலாம்' என்று சொல்கிறீர்கள். இப்படியே வேறு பல பெரியவர்கள் வெவ்வேறு வழிகளைச் சொல்கிறார்கள். இவையெல்லாம் ஒரே குழப்பமாக இருக்கின்றனவே; எது சரி?" என்று கேட்டார்.

பகவான் பேசாமல் மௌனமாகவே இருந்தார். அந்த அன்பர் ஐந்து நிமிஷம் சும்மா இருந்துவிட்டு மறுபடியும் சற்றே உரத்த குரலில், "ஸ்வாமி, நான் எந்த வழியிலே போகிறது?" என்று கேட்டார்.

பகவான் மிகவும் அமைதியாகக் கையை மெல்ல அசைத்து, "வந்த வழியே" என்று சொன்னார். **(வாக்கு)**



நூருண்டு வளர்ந்த ரெயில்

★

இந்திய ரெயில்வேக்களின் நூற்ருண்டு விழாவைச் சமீபத்தில் கொண்டாடினுர்கள். அவைபற்றிய ரசமான விவரங்கள் பலவற்றை இங்கே திரட்டித் தந்திருக்கிறேம்.

உலகத்திலேயே முதல் முதலாகத் தங்கள் நாட்டு ரெயில்வேக்களின் நூருண்டு விழாவைக் கொண்டாடியவர் ஆங்கிலேயர் தான். அது 1925-இல். இந்த 1953 எப்ரல் 16-இல் இந்தியா அந்த விழாவைக் கொண்டாடியது.

* * *

1853-எப்ரல் 16-இல் முதல் இந்திய ரெயில் வண்டி பம்பாய் நகரிலிருந்து தாணு என்னும் இடத்துக்குச் சென்றது. இரண்டுக்கும் இடையே 21-மைல் தூரம். ஓடிய நேரம் 57 நிமிஷம். நான்கு சக்கரம் போட்ட 12 கோச்சுகளும் மூன்று எஞ்சின்களும் கொண்டது அந்த வண்டி. அதில் சென்ற பிரயாணிகள் 500 பேர். ராஜாங்க மரியாதை, பீரங்கி முழக்கங்களுடன் வண்டி புறப்பட்டது.

* * *

இன்று இந்திய ரெயில்வேக்களின் மொத்த நீளம் சுமார் 34,000 மைல். இதுவரைக்கும் போட்டிருக்கும் மூலதனம் 830 கோடியே 50 லட்சம் ரூபாய். நம் ரெயில்வேக்கள் ஒவ்வொரு வருஷமும் சுமக்கும் பிரயாணிகளின் எண்ணிக்கை 130 கோடி; சாமான்களின் நிறை 9 கோடியே 60 லட்சம் டன். அவற்றில் வேலை செய்யும் சிப்பந்திகளின் எண்ணிக்கை சுமார் 10-லட்சம்.

* * *

ஏற்கனவே 19-ரெயில்வேக்களாக இருந்ததை, ஐக்கியப்படுத்தி ஆறே ஆறு மண்டலங்களாக இந்திய சர்க்கார் இரண்டு வருஷங்களுக்கு முன் வகுத்துவிட்டார்கள்.

வடக்கு ரெயில்வே: பாதை நீளம் 6,007 மைல்; பிரதேச நிலப்பரப்பு 1,46,000 சதுரமைல்; ஜனத்தொகை 5 கோடியே 70 லட்சம்; தலைமை ஸ்தலம் டில்லி.

வடகிழக்கு ரெயில்வே: பாதை நீளம் 4,787 மைல்; நிலப்பரப்பு 1,26,000 சதுரமைல்; ஜனத்தொகை 5 கோடியே 60 லட்சம்; தலைமை ஸ்தலம் கோரக்பூர்.

ஆதாரம்: (1) ஹிந்து, சென்னை; (2) அமிர்தபஜார் பத்திரிகை, கல்கத்தா.



கிழக்கு ரெயில்வே: பாதை நீளம் 5,667 மைல்; நிலப்பரப்பு 2,00,000 சதுர மைல்; ஜனத் தொகை 6 கோடியே 70 லட்சம்; தலைமை ஸ்தலம் கல்கத்தா.

மத்திய ரெயில்வே: பாதை நீளம் 5,428 மைல்; தலைமை ஸ்தலம் பம்பாய்.

மேற்கு ரெயில்வே: பாதை நீளம் 5,631 மைல்; நிலப்பரப்பு 1,50,000 சதுர மைல்: தலைமை ஸ்தலம் பம்பாய்.

தெற்கு ரெயில்வே: பாதை நீளம் 6,017 மைல்; நிலப்பரப்பு 2,00,000 சதுர மைல்; ஜனத் தொகை 8 கோடியே 40 லட்சம்; தலைமை ஸ்தலம் சென்னை.

* * *

1950-51-இல் மட்டும் 22,418 ரெயில் விபத்துக்கள் நேர்ந்தன. அவற்றில் 4,117 பேர் இறந்தார்கள்; 31,712 பேர் காயம் அடைந்தார்கள்.

* * *

1951-இறுதியில் இருந்த என்ஜின்கள் 8,439. காரியேஜ்கள் 21,296; வாகன்கள் 2,94,636. இன்றுள்ள நிலவரப்படி இவைகளின் மொத்த விலையை 800 முதல் 900 கோடி ரூபாய் வரைக்கும் மதிப்பிடுகிறார்கள். பொதுவாக என்ஜின், காரியேஜ், வாகன் இவைகளின் வாழ்வு முப்பது வருஷந்தான். இப்போது நமக்குப் புதிய என்ஜின் முதலியவை வருஷந்தோறும் 250 வேண்டியிருக்கின்றன. இவைகளுக்கு 30 கோடி ரூபாய் வருஷந்தோறும் செலவாகிறது.

* * *

ஆரம்பத்தில் பிரிட்டிஷ் கம்பெனிகளே இந்திய ரெயில்வேக்களைப் போட்டன. 1925-இல் தான் முதல் முதலாக இ. ஐ. ரெயில்வே, ஜி. ஐ. பி. ரெயில்வே இந்த இரண்டையும் இந்திய சர்க்கார் எடுத்துக்கொண்டது. 1944-இல் சுதேச சம்ஸ்தான ரெயில்வேக்களைத் தவிர மற்ற எல்லா ரெயில்வேக்களையும் இந்திய சர்க்கார் எடுத்துக்கொண்டது. 1950-ஏப்ரல் 1-இல் சுதேச சம்ஸ்தானங்களெல்லாம் இந்திய யூனியனில் சேர்ந்ததால், அவற்றின் 7,000 மைல் நீளப் பாதைகளும் இந்திய ரெயில்வேக்களோடு சேர்ந்துவிட்டன.

ரெயில்வேக்கள் இந்திய சர்க்காரின் கைக்கு வந்ததும், அவற்றின் நிர்வாகக் கொள்கையை வகுக்க, பழைய ரெயில்வே போர்டை விரிவுபடுத்தினார்கள். நிதி சம்பந்தமாகவும் புதிய சம்பிரதாயம் ஒன்றை ஏற்படுத்தினார்கள். ரெயில்வே பட்ஜெட்டை, இந்திய சர்க்காரின் பொது பட்ஜெட்டிலிருந்து தனியாகப் பிரித்தது தான் அந்தச் சம்பிரதாயம்.

(3) இந்தியன் இன்ஃபர்மேஷன், சென்னை.

ரெயில்வே மூல தனத்துக்குரிய வட்டியையும் உபரி லாபத்தில் ஐந்தில் ஒரு பகுதியையும் இந்திய சர்க்காரின் பொது வருமானத்தில் சேர்த்துக்கொண்டு, மீதியை ரெயில்வேக்களின் இருப்பு நிதியில் வைத்துக்கொள்வது என்று விதி வகுத்துக் கொண்டார்கள். இதே சம்பிரதாயத்தை இப்போது சற்று மாற்றிப் புதிய சம்பிரதாயம் ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்திய ரெயில்வேக்களின் பங்குதார் என்ற அந்தஸ்தை வரி செலுத்தும் இந்தியப் பொது மக்களுக்கு இந்தச் சம்பிரதாயம் அளிக்கிறது. ரெயில்வேக்களுக்கு இந்திய சர்க்கார் போட்ட மூல தனத்துக்கு 4 சதவிகிதம் லாபம் அளிக்க இது உத்தரவாதம் வழங்குகிறது. அதாவது, வருஷந்தோறும் இந்தியசர்க்காரின் பொது வருமானத்தில்,இந்த நிர்ணயமான விகிதப்படி ரெயில்வே பட்ஜெட்டிலிருந்து பணம் சேர்கிறது. இதைத் தவிர ரெயில்வேக்களின் இருப்பு நிதிக்கு 15 கோடி ரூபாய் சேர்ப்பது கட்டாயமாகும். உபயோகமற்றுப் போன வண்டி முதலியவற்றைப் புதுப்பிப்பதற்காகும் முழுச் செலவையும் ரெயில்வேக்கள் பொறுத்துக்கொள்ள வேண்டும். பிரயாணிகளுக்கு - முக்கியமாக மூன்றும் வகுப்புப் பிரயாணிகளுக்கு - அதிக வசதிகள் செய்வதில் 1950-51 முதல் ஐந்து வருஷ காலம் வருஷந்தோறும் 3 கோடி ரூபாய் வரை ரெயில்வேக்கள் செலவிட வேண்டும்.

* * *

நீராவி எஞ்சின்களைத் தவிர, 72 எலெக்ட்ரிக் எஞ்சின்கள் 17 டீஸல் எலெக்ட்ரிக் யூனிட்டுகள், 5 நீராவி ரெயில் கார்கள், 27 டீஸல் ரெயில் கார்கள், 112 எலெக்ட்ரிக் மோட்டார்க் கோச்சுகள் இவையும் இருக்கின்றன.

சென்னையிலிருந்து தாம்பரத்துக்கு முதல் முதல் எலெக்ட்ரிக் ட்ரெயின்கள் ஓட ஆரம்பித்த போது,நாள் ஒன்றுக்கு90ட்ரெயின்கள் ஓடின. இன்று 202 ட்ரெயின்கள் ஓடுகின்றன. இன்னும் 6 ட்ரெயின்களுக்கு ஆர்டர் கொடுத்திருக்கிறார்கள். அவை ஒவ்வொன்றிலும் 4 கோச்சு இருக்கும். 1931-32-இல் இந்த எலெக்ட்ரிக் ட்ரெயின் பிரயாணிகளின் எண்ணிக்கை 33,19,478 ஆக இருந்தது, 1950-51-இல் 3,07,36,245 ஆகஉயர்ந்துவிட்டது. 1938-39-இல் 7-லட்சம் ரூபாயாக இருந்த வருமானம், இப்போது 37 லட்சம் ரூபாயாக அதிகரித்திருக்கிறது.

சென்னை, திருவாங்கூர்-கொச்சி ஹைட்ரோ-எலெக்ட்ரிக் திட்டங்கள் அபிவிருத்தியடைந்திருப்பதாலும், நீராவி எஞ்சின் செலவைவிட எலெக்ட்ரிக் எஞ்சின் செலவு ஆரம்பத்திலும் சரி, பராமரிப்பிலும் சரி குறைவாயிருப்பதாலும், எலெக்ட்ரிக் ட்ரெயின் ஸெர்வீஸ் இன்னும் அதிக தூரத்துக்கும் அதிக அளவிலும் வெகு விரைவில் ஏற்படலாம்.

தெற்கு ரெயில்வேயில் எலெக்ட்ரிக் விளக்குகள் போட்டிருக்கும் 398 ஸ்டேஷன்களின் விவரம் வருமாறு:

1939 வரையில்	115
1939-47-இல்	49
1947-52 ,,	137
1952-53 ,,	59
1953-54 ,,	38
மொத்தம்	398

ஆரம்பத்தில் புழங்கிய இந்திய ரெயில்வே காரியேஜ்கள் முற்றும் மரத்தினால் செய்தவை. சுமார் 20 முதல் 30 அடி வரைக்கும் நீளம் உள்ளவை. வண்டிகளில் கக்கூஸ் கிடையாது. 1863-இல் மேலும் கீழுமாக இரண்டு தளங்கள் உள்ள மூன்றாம் வகுப்பு வண்டிகளைப் பம்பாய் பரோடா அண்டு ஸென்ட்ரல் இந்திய ரெயில்வேயில் உபயோகித்துப் பார்த்தார்கள். மேல்தளத்தில் பெஞ்சிகள் இல்லை; கீழேதான் உட்கார வேண்டும். இந்த இரண்டு தள வண்டிகள் சௌகரியப்படாததால் சீக்கிரமே போய்விட்டன.

ஏற்கனவே புழங்கிய காரியேஜ்கள் எல்லாவற்றிலும் பிரேக்குகள் இல்லை. முதல் காரியேஜ், கடைசிக் காரியேஜ் இரண்டிலும் பிரேக் அமைத்திருந்தார்கள். தவிர, புழங்கிய பிரேக்குகளும் கை பிரேக்குகளே. 1900-இல்தான் 'வாக்குவம் பிரேக்' புழக்கத்துக்கு வரத் தொடங்கியது.

ஆரம்பகாலத்து வண்டிகளில் திருட்டுப் பயம் காரணமாகவே விளக்குகள் போட்டார்கள்: மெழுகுவர்த்தி அல்லது எண்ணெய் விளக்குகள்தான். சில பிரயாணிகள் தங்களுக்குத் தேவையான விளக்குகளைத் தாங்களே கொண்டு வருவார்கள். 1900-இல் காஸ் விளக்குகள் வந்தன. 1920 வரைக்கும் அவை நீடித்தன. ஆனால், அதற்கு முன்பே சில வண்டிகளில் எலெக்ட்ரிக் விளக்குகள் போடத் தொடங்கிவிட்டார்கள்.

தொடக்கத்தில் அக்குமுலேட்டர், பாட்டரி இவைகளே எலெக்ட்ரிக் கரண்ட் ஸப்ளைக்கு உபயோகப்பட்டன. இவைகளை அடிக்கடி 'சார்ஜ்' செய்யவேண்டியிருந்தது. வண்டி ஓடிக்கொண்டிருக்கும்போதே வேலை செய்து 'பாட்டரி'களுக்குச் 'சார்ஜ்' செய்துவிடும் 'டைனமோ'க்களைப் பின்னால்தான் அமைத்தார்கள்.

சமீபவருஷத்தில் பிரகாசமான ஃப்ளோரஸண்ட் விளக்குகளைப் பம்பாயில் சில வண்டிகளில் அமைத்திருக்கிறார்கள்.

* * *

மரக் காரியேஜ்களைச் சென்ற நூற்றாண்டிலேயே இந்தியாவில் கட்டத் தொடங்கிவிட்டார்கள். 1885-இல் இரும்பு அடிச் சட்டம் போட ஆரம்பித்தார்கள். காரியேஜ் கட்டும் தொழில் இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலேயே இந்தியாவில் மிகவும் விரிவடைந்துவிட்டது.

இன்று பிராட்கேஜ் மூன்றாம் வகுப்புக் காரியேஜ் ஒன்றைக் கட்ட 1,17,000 ரூபாய் ஆகிறது; இரண்டாம் வகுப்புக் கோச்சுக்கு 1 லட்சத்து 47 ஆயிரம் ரூபாய்பிடிக்கிறது. 'ஏர்கண்டிஷன்' செய்த கோச்சுக்கு 2 லட்சத்து 71 ஆயிரம் ரூபாய் செலவாகிறது.

மரவண்டி போய், மரமும் எஃகும் சேர்ந்த வண்டிகள் வந்தன. முற்றும் எஃகாலேயே செய்த 50 வண்டிகள் பிரிட்டனிலிருந்து 1925-இல் இந்தியாவுக்கு வந்தன. யுத்த காலத்தில் இருந்த முழு எஃகு வண்டிகளை ஹிந்துஸ்தான் ஏர் க்ராஃப்ட் லிமிடெட் என்ற கம்பெனி செய்யத் தொடங்கியது.

இப்போது பெரம்பூர் வொர்க்ஷாப்புக்கு அருகே ஒரு தொழிற்சாலை அமைக்கத் தொடங்கியிருக்கிறார்கள். இதற்கு ஸ்விட்ஜர்லாந்து எஞ்சினீர்கள் உதவி

செய்கிறார்கள். இந்தத் தொழிற்சாலை 1955-இல் பூர்த்தியாகி விடும். இதில் புது மாதிரியான முழு எஃகு வண்டிகள் செய்யப் போகிறார்கள். ஆபத்து நேரும் போது அந்த வண்டிகள் ஒன்றோடொன்று மோதி நொறுங்க மாட்டா. மிகவும் உறுதியானவை. லேசாகவும் இருக்கும். ஓடும்போது குலுங்க மாட்டா.

* * *

முதல் வகுப்பை எடுத்துவிடவும் ஏர்கண்டிஷன் செய்த மூன்றாம் வகுப்புக் காரியேஜ்களை நேராய்ச் செல்லும் (த்ரூ) வண்டிகளிலெல்லாம் அமைக்கவும் இந்திய சர்க்கார் தீர்மானித்திருக்கிறார்கள். ஆகவே, ஏர்கண்டிஷன் செய்த காரியேஜ்களை ஏராளமாக இந்தியாவில் இனிக் கட்டப் போகிறார்கள்.

இண்டோனீஷிய சர்க்கார் தங்கள் நாட்டுக்கு ஏர்கண்டிஷன் செய்த மூன்றாம் வகுப்புக் காரியேஜ்கள் 70 வேண்டும் என்று ஆர்டர் கொடுத்திருக்கிறார்கள். சாமான்ய மக்களின் நலத்தில் அந்த இளங் குடியரசுக்கு எவ்வளவு அக்கறை இருக்கிறது என்பதற்கு இது ஓர் அத்தாட்சியாகும்.

* * *

காரியேஜ்களை இந்தியாவிலேயே கட்ட வெகு நாளைக்கு முன்பே தொடங்கிவிட்டாலும், எஞ்சின்களெல்லாம் வெளிநாடுகளிலிருந்தே வந்துகொண்டிருந்தன. இப்போது இந்தியாவிலேயே அவற்றை அமைக்கத் தொடங்கிவிட்டார்கள்.

மேற்கு வங்காளத்தில் அஸன்ஸோல் என்னும் இடத்தில் அமைந்துள்ள சித்தரஞ்சன் வொர்க்-ஷாப், சிங்பூம் என்னும் இடத்தில் அமைந்து வரும் டாட்டா எஞ்சினீரிங் அண்டு லோகமொட்டிவ் கம்பெனி இவை இரண்டும் அடுத்த சில வருஷங்களுக்குள் பூர்ணமாக வேலை செய்ய ஆரம்பித்துவிடும். சித்தரஞ்சனில் 120, டாட்டாவில்



ஆரம்ப காலத்து ரெயில் வண்டியின் தோற்றம்

100 ஆக 220 எஞ்சின்களை வருஷந்தோறும் அப்போது கட்டிவிடுவார்கள். அவை இந்திய ரெயில்வேக்களின் தேவையை முற்றும் பூர்த்தி செய்துவிடும்.

* * *

சில ரெயில் வண்டிகளுக்குக் குஷியான பெயர்கள் உண்டு. பிரிட்டனின் ஃப்ளையிங் ஸ்காட்ஸ்மென், அமெரிக்காவின் ஸ்டேட் எக்ஸ்ப்ரஸ் இரண்டும் உலகப் பிரசித்தம். இந்தமாதிரி இந்தியாவிலும் பம்பாய்-பூனா டெக்கான் க்வீன், டில்லி-சென்னை க்ராண்டு ட்ரங்க் எக்ஸ்ப்ரஸ், டில்லி-கல்கத்தா தூஃபான் எக்ஸ்ப்ரஸ், பம்பாய்-டில்லி - பெஷாவர் ஃப்ராண்டீர் மெயில், பம்பாய்-ஸூரத் ஃப்ளையிங் ராணி, சென்னை-மங்களூர் ஜனதா எக்ஸ்ப்ரஸ் ஆகிய வண்டிகள் உண்டு. இந்தியா - பாகிஸ்தான் பிரிவினைக்கு முன்பு பத்திரம், வேக வசதி இவைகளில் உலகிலேயே முதல் தர வண்டிகளுக்குச் சம அந்தஸ்தும் கீர்த்தியும் பெற்றிருந்தது ஃப்ராண்டீர் மெயில்தான். இப்போது பெஷாவர் பாகிஸ்தானுக்குச் சொந்தமாகிவிட்டதால், இதன் பெருமை மங்கிவிட்டது. ஆயினும் இப்போதும் பம்பாயிலிருந்து, டில்லியைத் தாண்டி வடக்கே செல்லும் இதுதான் இந்தியாவுக்குள்ளேயே வெகு நீளமான பாதையில் ஓடும் வண்டி. மிக வேகமும் மிகச் சுருக்கமான தூரமும் ஓடும் முதல் தர வண்டி டெக்கான் க்வீன். வழியில் உள்ள சின்ன ஊர்களில் நிற்காமல் 45-மைல் வேகத்தில் இது ஓடுகிறது. டன்னல் வழியாக இது செல்லும்போது, பயம் உண்டாகாது; மிகவும் குஷியாக இருக்கும். ஜனதா எக்ஸ்பிரஸ் புதிதாக ஏற்பட்டது. அதற்கு இப்போதே ஓரளவு நற்பெயர் கிடைத்திருக்கிறது.

* * *

இந்தியாவில் விசேஷமான மலை ரெயில் வண்டிகள் சில இருக்



இரண்டு தளம் உடைய ஒரு பழைய காரியேஜின் சித்திரம்

கின்றன. நீலகிரி என்கிற உதக மண்டலப் பாதை 1909-இல் பூர்த்தியாயிற்று. ஸ்விட்ஜர்லாந்து ஆல்பைன் பிரதேசத்தில் மலை ரெயில் பாதை போட்டுக் கீர்த்தி பெற்ற எம். ரிக் கன்பாச் என்பவரிடம் இந்தப் பாதை போடுவதை ஒப்படைத்தார்கள். இது சரிவான பாதை. இரண்டு முக்கியத் தண்டவாளங்களுக்கும் இடையிலே ஸ்லீப்பர் கட்டைகள்மீது இரும்புப் பாளங்கள் ஜோடி ஜோடியாகப்பொருத்தியிருக்கிறார்கள். அவைகளில் பல் இருக்கிறது. இந்த இரும்புப்பாளங்களில் பொருந்தக்கூடிய ஒரு ஜோடி பல் சக்கரங்கள், இங்கே ஓடும் எஞ்சின்களில் இருக்கின்றன. வண்டி சரிந்து விழாமல் இருக்கவே இந்த ஏற்பாடு. இந்தப் பாதை $28\frac{3}{4}$ மைல் நீளந்தான். இதற்குள் 16-டன்னல்களும் எண்ணற்ற பாலங்களும் இருக்கின்றன. டன்னல்களில் மிக நீளமானது 451 அடி; மிகக் குட்டையானது 50 அடி. பாலங்களுள் மிக நீளமான இரண்டில் ஒன்று 320 அடி; மற்றது 232 அடி.

சுமார் 13 மைல் நீளம் உள்ளது மாதெரன் மலை ரெயில் பாதை. மாதெரன் என்ற குன்று பம்பாய்க்கு 60 மைல் தூரத்தில் இருக்கிறது. இதில் ஒரே ஒரு டன்னல்தான் உண்டு.

கல்கா-ஸிம்லா ரெயில்வே, மிகவும் சரிவானது. இதில் செல்லும் பிரயாணி ஸிம்லாவை நெருங்கும் போது, அவன் கண்முன் கொஞ்சங் கொஞ்சமாய் விரியும் பனிப் படலக் காட்சியை ஒரு நாளும் மறக்க முடியாது.

வங்காளத்தில் உள்ள ஸிலிகுரி-டார்ஜீலிங் ரெயில்வே இன்பக் களிப்பூட்டும் மற்றொரு பாதை. கல்கத்தா நகரத்துக்கு 369 மைல் தூரத்தில் இருக்கிறது, டார்ஜீலிங் குன்று. இந்தப் பாதை 1881 ஜூலையில் பூர்த்தியாயிற்றும். மிகவும் சரிவான பாதை. இதில் சில மைல் தூரம் போகும் வரைக்கும் 8 என்ற எண்ணின் உருவம் போல் ரெயில் பாதை அமைந்திருப்பது ஒரு விநோதம். சரிவைச் சுலபமாய்க் கடப்பதற்காக 'லூப்ஸ்-டைவர்ஷன்ஸ்' என்ற பல வளைவுகள் உண்டு; இவைகளை 'கும்ப்டீஸ்' என்று ஜனங்கள் சொல்லுகிறார்கள். இந்தப் பாதைக்கென்று பிரத்தியேகமாய்ச் செய்த எஞ்சின்களும் காரியேஜ்களும் இருக்கின்றன. இதில் பல டன்னல்களும் பாலங்களும் உண்டு.

* * *

ஏராளமான ரெயில் வண்டிகள் பல பாதைகளில் ஓடும்போது, ஒன்றுக்கொன்று இசைபடவும் எதிலும் ஜனக்கூட்டம் அதிகமாகாமல் பிரவிச் செல்லவும் ஏற்றவாறு கால அட்டவணைகளைத் திட்டமிட்டுத் தயாரிப்பதற்கென்றே பல அதிகாரிகள் இருக்கிறார்கள். ஒவ்வொர் அதிகாரியும் ஒவ்வொரு பிரதேசத்துக்கு ஒவ்வொரு குறிப்பிட்ட நேர அளவுக்குத் திட்டமிட வேண்டும். எல்லாத் திட்டங்களும் ஒன்றை ஒன்று அநுசரித்திருக்கவேண்டும்.

சதுரக்கட்டங்கள் போட்ட பெரிய 'க்ராஃப் பேப்பர்' என்ற தாள் ஒவ்வொன்றில் ஒவ்வோர் அதிகாரியும் தங்கள் அட்டவணைத் திட்டத்தைத் தயாரிப்பார்கள். இடமிருந்து வலம் செல்லும் குறுக்குக் கோடுகள் நேரத்தையும், கீழிருந்து மேலே செல்லும் செங்குத்

துக் கோடுகள் தூரத்தையும் காட்டும். நேரத்தை மணி நிமிஷங்களாகக் குறிப்பார்கள். 'மார்ஜின்' என்ற ஓரத்தில் தூரப்பகுதியில் ஸ்டேஷன்களையும் ஸிக்னல் பெட்டிகளையும் குறிப்பார்கள். ரெயில் வண்டிகளைக் காட்ட மெல்லிய கோடுகளைச் சதுரக் கட்டங்களுக்குள் இழுப்பார்கள். ஒரு தாளில் 60 அல்லது அதற்கு மேற்பட்ட கோடுகளைக் குறுக்கே இழுத்திருப்பார்கள். இத்தனையும் வண்டிகளைக் குறிப்பவை. இப்படி இவர்களெல்லாம் தயாரித்த தாள்களைச் சேர்த்து வைத்துக் கொண்டே ரெயில்வே கால அட்டவணைகளை அச்சிடுகிறார்கள்.

* * *

இந்திய ரெயில்வேக்களில் இன்னும் எத்தனையோ வசதிகள் செய்தாக வேண்டும். ஐக்கிய அமெரிக்க ரெயில்வேக்களை ஒப்பிட்டுப் பார்த்தால் இது விளங்கும். அங்கே ரெயில் பாதைகள் சர்க்காருக்குச் சொந்தமில்லை. 700 கம்பெனிகளே அவற்றை நிர்வகிக்கின்றன. அமெரிக்க ரெயில்வண்டிகள் நலுங்குவதில்லை. அவைகளில் கோச்சு, உறங்கும் வண்டி, உண்ணும் வண்டி, 'க்ளப்' என்ற விளையாடும் வண்டி, சாய்மான ஆசனங்கள் போட்ட வண்டி, உச்சியிலே தலை நீட்டி உட்கார்ந்து அக்கம் பக்கம் காட்சிகளைப் பார்த்துக்கொண்டே செல்லக்கூடிய கண்ணாடிக் கூண்டு வண்டி - இப்படிப் பலவகை உண்டு. பெரும்பாலான வண்டிகளில் 'ஃப்ளோரஸெண்ட்' என்ற பிரகாசமான விளக்குப் போட்டிருக்கிறார்கள். டெலிஃபோன் வசதியும் அமைத்திருக்கிறார்கள். ரேடியோ அமைத்த வண்டிகள் கூட உண்டு.

ஐக்கிய அமெரிக்காவின் 'ஸ்டேட் எக்ஸ்ப்ரஸ்' என்ற வண்டி சுமார் கால்மைல்நீளம் இருக்கிறது. ஆனால் அதில் செல்லக்கூடிய பிரயாணிகளின் எண்ணிக்கை 567 தான். அதில் விளையாடவும் உணவுண்ணவும் 174-ஸீட்டுகள் இருக்கின்றன. சக்கரம்போட்ட ஹோட்டல் என்றே அந்த வண்டியை வேடிக்கையாகக் குறிப்பிடுகிறார்கள். நிமிஷத்துக்கு ஒரு மைல் வேகத்துக்கு மேலேயே அது ஓடுகிறது.

* * *

இதெல்லாம் போகட்டும். இந்திய ரெயில்வேக்கள் சம்பந்தப்பட்ட ஒரு விஷயத்தைக் கட்டாயம் இங்கே குறிப்பிட வேண்டும். டிக்கட்டில்லாமலே பிரயாணம் செய்து அகப்பட்டுக்கொண்டவர் ஜாபிதா இதோ இருக்கிறது:

வருஷம்	பிரயாணிகள் லக்ஷக் கணக்கில்	அவர்களிடம் வசூலித்த ரூபாய் லக்ஷக் கணக்கில்
1948-49	60	ரூ. 150
1949-50	78	,, 173
1950-51	87	,, 171
1951-52	79	,, 165

கண்டுபிடித்தது இவ்வளவு. அகப்பட்டுக்கொள்ளாமலே எத்தனை பேர் தப்பித்துக்கொண்டார்களோ! அவர்களால் நம் ரெயில்வேக்களுக்கு நஷ்டம் ஒரு புறம். அநாவசிய ஜன நெருக்கடி மறு புறம். இப்படி டிக்கட்டில்லாமல் பிரயாணம் செய்பவரைத் தடுப்பதில் ரெயில்வே அதிகாரிகளும் பிரயாணிகளும் ஒத்துழைப்பது மிகவும் அவசியமாகும்.



வைஸிராய் அழைத்த ஆசிரியர்

ஜோன்று ரிச்சர்ட்ஸன்

சுமார் 70 வருஷங்களுக்கு முன்பு இந்தியாவில் சுற்றி இந்தியக் காட்சிகளைச் சித்திரித்த ஓர் ஆங்கில ஓவியரின் ரஸமான சில அநுபவங்களைக் கூறுவது இது. இங்கே உள்ள சித்திரங்களெல்லாம் லீயர் என்ற அந்த ஓவியரே வரைந்தவை.

1874. ஜனவரி மீ ஒரு நாள் மாலை வேளை. அலாஹாபாதில் கெல்னெர்ஸ் ஹோட்டலில் சாப்பாட்டுக்காக ஓர் ஆங்கிலக் கிழவர் காத்துக் கொண்டிருந்தார். மூக்கிலே கண்ணாடி. நீண்ட தாடி. பார்வைக்கு மகா விகாரம். ஓட்டல் முதலாளியின் சின்னஞ்சிறு பெண்ணுக்காகச் சித்திரங்கள் வரைந்துகொண்டே இந்தக் கிழவர் உட்கார்ந்திருந்தார்.

சில பட்சிகளை வரைந்தார். அடுத்தாற்போல, ஆந்தைப் படம் வரையப் போகிற சமயம். மற்றொரு சிறுமி அங்கே வந்து சேர்ந்தாள். அவள் இவரை அழைத்து, "தாத்தா, பூனைக் குட்டி ஒன்று வந்தது; அஞ்சு பவுன் நோட்டை எடுத்தது; தேனும் பணமும் வைத்து மடித்தது; படகிலே ஏறிக் கடலிலே போச்சு. இல்லையா? இந்தப் பூனைக் குட்டியின் படம் வரையுங்கள்" என்றாள்.

இந்தப் பூனைக் குட்டி பற்றிய வேடிக்கைப் பாட்டை, அந்தச் சிறுமி போன பள்ளிக்கூடங்களிலெல்லாம் அவளுக்குச் சொல்லிக் கொடுத்தார்களாம். இந்த விஷயத்தைக் கேள்வியுற்றதும், கிழவர் பெரிதும் மகிழ்ச்சி அடைந்தார். ஏனென்றால், இந்தப் பாட்டை எழுதியவரே அவர்தான்.

கிழவர் எழுதிய நூலுக்குப் 'பொருளில்லாப் புஸ்தகம்' (புக் அவ் நான்ஸென்ஸ்) என்று பெயர். இதற்கு முன் முப்பது வருஷங்களாகவே அந்தப் புஸ்தகம் திரும்பத் திரும்பப் பிரசுரமாகி வந்தது. இதற்குப் பின் ஒரு நூற்றாண்டுக்கு மேல் ஆகியும், லீயரின் புகழ் குன்றவில்லை. அவருடைய கடிதங்கள் பிரசுரமாயின. அவருடைய ஜீவிய சரித்திரத்தை எழுதி வெளியிட்டார்கள். அவர் எழுதிய டயரிகளை ஒன்றொன்றாகப் பிரசுரித்தார்கள். இந்தியாவுக்கு அவர் வந்திருந்தபோது எழுதிய தினசரிக் குறிப்புகளையும் வரைந்த சித்திரங்

மூலம்: ஜான் அவ் லண்டன் வீக்லி (ஆங்கிலம்; 6-8-'58), லண்டன்.



களையும் ரே மர்ஃபி என்பவர் தொகுத்திருக்கிறார். 'இந்தியன் ஜர்னல் 1873-1875' என்ற பெயருடன் அதை 42 ஷில்லிங் விலையுள்ள புஸ்தகமாக ஜர்ரால்ட்ஸ் என்ற பிரசுரகர்த்தர்கள் வெளியிட்டிருக்கிறார்கள்.

ஈச்ச மரங்கள், யானைகள், நதிக்கரையில் சிற்ப வேலைப்பாடுகள் அமைந்து நிற்கும் கோயில்கள் இவையெல்லாம் நீர் வர்ணம் தீட்டப்பெற்று அழகுடன் விளங்குகின்றன. எழுதியுள்ள விஷயங்களுக்கு நடுநடுவே பல இடங்களை இந்திய வேலைக்காரரின் உருவப் படங்களும் கேலிச் சித்திரங்களும் அலங்கரிக்கின்றன. சண்டையில் பாயும் யானைமீது இருந்து கொண்டு தாம் சித்திரம் வரையும் காட்சி ஒன்றையே லீயர் ஒரு படம் வரைந்திருக்கிறார். இந்தப் படங்கள் எல்லாமே இல்லாமல், அவர் எழுதியுள்ள குறிப்புகள் மட்டுமே இந்தப் பிரசுரத்தில் அடங்கியிருக்குமானால்கூட, இது ஒரு கலைஞன் எழுதிய நூலாகவே துலங்கும். பின்னால் தாம் வரையப் போகிற வர்ண ஓவியங்களுக்கு உதவியாக அவர் தயாரித்து வைத்துக் கொண்ட குறிப்புகளைப் போல இவை தோன்றுகின்றன:

"சிறிதும் மேடுபள்ள மற்ற மட்டமான சமவெளி: மஞ்சளும் பழுப்பும் கலந்த நிறம்; அல்லது பயிர்கள் நிறைந்து பச்சையும் மஞ்சளும் கலந்த நிறம். எங்கே பார்த்தாலும் கொன்றை மரங்கள் அங்கொன்று இங்கொன்றாக நிற்கின்றன. லேசாக இலைகள் அசையப் பச்சைப் பசேல் என்று அவை நிற்பது கண்ணுக்கினிய காட்சியாகும். மினுமினுக்கும் நீலக் குருவிகள்...." என்று அவர் எழுதுகிறார்.

ஆயிரம் இந்தியர் காசியில் குளிக்கும்போது, வானவில் போல் நதிக்கரை பல வர்ணக் காட்சியளிப்பதாக அவர் குறிப்பிடுகிறார். மண்ணின் சிவப்பும் மலைகளின் நீலமும் ஒன்றோடொன்று போட்டியிடுகின்றன; பல வர்ணக் குடைகளின்மீது சூரிய ஒளி வீசுவது பார்க்கத் தக்க காட்சி; விதம் விதமான பறவைகள் பளபள என்று ஜொலிக்கின்றன; வெள்ளித் தந்தச் சிற்பம்போல் மசூதிகள் துலங்குகின்றன; செக்கச் செவேலென்று ஒளிர்கின்றன வாடா மல்லிகைப் பூக்கள்- இப்படியெல்லாம் அவர் வர்ணிக்கிறார்.

எங்கே பார்த்தாலும் ஒளி; எங்கே பார்த்தாலும் பல வர்ணக் காட்சிகள்! இவைபற்றிய வர்ணனைகளே இந்தப் பிரசுரத்தில் அடங்கியிருப்பது நம் மனத்துக்கு ரம்மியமாயிருக்கிறது. அதுவும் பிரிட்டனில் வானம் கறுத்து ஒரே மப்பும் மந்தாரமுமாயிருக்கும் ஒரு நாளில் இதைப் படிக்கிற

போது, நம் சுவாரஸ்யம் பல மடங்கு அதிகரிக்கிறது.

லீயருக்கு இந்திய வைஸிராயான நார்த்ப்ரூக் ஒரு நண்பர். இந்தியாவுக்கு வரும்படி லீயரை நார்த்ப்ரூக் 1872-இல் அழைத்தார். "இந்தியா வெங்கும் ஒரு வருஷ காலம் சுற்றிப் பல காட்சிகளையும் நீங்கள் பார்க்கலாம். உங்களுக்காகும் பிரயாணச் செலவு முழுவதையும் என் சர்க்கார் ஏற்றுக்கொள்ளும். இதற்குப் பதிலாக நீங்கள் ஒரே ஒரு காரியம் மட்டும் செய்ய வேண்டும்; அதாவது, இந்தியக் காட்சிகள் பலவற்றைச் சித்திரம் வரைந்துவிட வேண்டும்" என்றார் வைஸிராய். "இந்த ராஜ பரிவாரங்களும் கட்டுத் திட்டங்களும் எனக்கு வேண்டாம்" என்று சொல்லிவிட்டார் லீயர். வைஸிராய் கோஷ்டியுடன் கப்பலேறி யாத்திரை செய்ய அவர் மறுத்துவிட்டார். ஒரு வருஷ காலம் வீணாயிற்று. பிறகு ஜியார்ஜியோ என்ற ஒரு வேலையாளுடன் கப்பலில் புறப்பட்டார். 1873-நவம்பர் இறுதியில் பம்பாய் சேர்ந்தார்.

"ஆஹா! என்ன புதுமையான ஈச்சைகள்! புதுமையான மலர்கள்! புதுமையான பிராணிகள்! புதுமையான விலங்குகள்! இவைகள் நம்மை ஒரேயடியாய்ப் பிரமிக்க வைக்கின்றன. இவைகளைவிட வியப்புத் தரும் வேறு எதுவுமே இருக்க முடியாது. எத்தனை வித வர்ணங்கள்! எத்தனை வித ஆடைகள்! நினைக்க முடியாத அழகுடன் விதம் விதமாய் இவையெல்லாம் துலங்குகின்றன" என்று, லீயர் பம்பாயைக் கண்டதும், குதூகலமடைகிறார்.

அங்கேயிருந்து கான்பூருக்கு அவர் புறப்பட்டுச் செல்கிறார். "வர்ணக்கிளிபோல் துலங்கும் மக்கள்; அழகழகான ஆடைகள்!" என்று அதை வர்ணிக்கிறார். ஆனால், அங்கே லீயரின் கைப்பெட்டி எங்கேயோ தவறிவிட்டது. அந்தக் கவலையினால் அவருக்கு ஒன்றுமே ஓடவில்லை; வைஸிராயின் ஆடம்பரம், ராணுவ அணிவகுப்பு, அடுத்த நாள் தர்பார் எதிலும் அவருக்கு மனம் செல்லவில்லை. பாவம்! இது மாத்திரமா? அவருடைய இந்தியச் சுற்றுப்பிரயாணத்தில், சரியான போக்குவரத்து வசதியோ, தங்குமிடமோ, போதிய உணவு வசதியோ கிடைக்காமல் அவர் பட்டிருக்கும் அவதிக்கு நாம் அநுதாபப்பட வேண்டியதுதான். இதெல்லாம் போக, அவருக்குத் திடீர் திடீரென்று தேக அசௌக்கியம் வேறு வந்துவிடும்.

கல்கத்தாவில் சில காலம் தங்கியபின், நல்ல வேளையாகச் சர்க்கார் மாளிகையின் படாடோபங்களையெல்லாம் உதறிவிட்டுத் தாஜ்மகலைப் பார்ப்பதற்காக அவர் புறப்பட்ட போது, இந்த அவதியெல்லாம் அவருக்குத் துளியும் தோன்றவில்லை. பழம் பசலியான ஒரு ரெயில் வண்டியில் ஸாஹிப்

கஞ்ஜூ என்னும் இடத்துக்குச் சென்றார். ஆக்ராவில் அவர் கண்ட காட்சியழகை அவருடைய வர்ண ஓவியந்தான் காட்ட முடியும். மனத்தை மயக்கும் பல வர்ணச் சேலை உடுத்த பெண்கள், வெள்ளை வெளேர் என்று ஆடை அணிந்த ஆண்கள், இந்தக் கூட்டத்துக்கு நடுவே தகதகவென்று ஜொலித்துக்கொண்டு அழகொளிரப் பிரம்மாண்டமாய் நிற்கும் தாஜ்மகல் கட்டிடம்-இதைப் பார்க்கும்போது அவருக்கு ஆத்ம பரவசம் ஏற்பட்டுவிட்டது. "இனிமேல் உலகத்து மக்களை யெல்லாம் இரண்டே இரண்டு பிரிவாய்ப் பிரித்துவிட வேண்டியதுதான். ஒரு பிரிவு, தாஜ்மகலைக் கண்டவர்; மறு பிரிவு, தாஜ்மகலைக் காணாதவர்; அவ்வளவுதான்" என்று அவர் குறித்திருக்கிறார்.

இந்தியாவின் பற்பல காட்சிகளை லீயர் சித்திரித்திருக்கிறார். பேனாவையும் தூலிகையையும் மாற்றி மாற்றி அவர் உபயோகித்திருக்கிறார். பேரீச்சந் தோட்டங்களுக்கு மேலே ஓங்கி நிமிர்ந்த ஹிமாலயமலைத் தொடர்கள், காலை இளங்கதிரில் பங்களூரின் தோற்றம், மாஹி நகரின் நீல ஸ்படிகம் போன்ற மலைகள் இவைகளை யெல்லாம் அவர் வரைந்திருக்கிறார்.

நம்மை மகிழ்விக்கும் இந்தியரும் ஆங்கிலோ - இந்தியரும் அவருடைய குறிப்புகளுக்கு இடையிலே அணியணியாக வருகிறார்கள். சிடுமூஞ்சி ராஜா, தொண தொணக்கும் க்ரே க்ராஃப்ட் என்ற அம்மாள், கர்னல் வில்லோபி ஆஸ்பர்ன் என்பவரின் மனைவி இவர்களையெல்லாம் நாம் சந்திக்கிறோம். கர்னலின் மனைவி

வட்டித்த வேகாத கறியும் வெங்காயமுங் கூட அவளுடைய வசீகரத்தால்ருசி மிகுந்துவிட்டன.

லீயர் விருந்துக்குச் சென்ற ஒரு வீட்டுக்குப் பெருஞ் செவிடான ஓர் அம்மாளும் விருந்தாளியாக வந்திருந்தாளாம். காது கேட்பதற்கு உதவியாக, 'ட்ரம்பெட்' என்ற ஒரு குழாயை அவள் வைத்திருந்தாள். அதை ஏதோ ஒரு குவளை என்று வீட்டுச் சிப்பந்தி நினைத்துவிட்டான். பனிக்கட்டி போட்டு ஜில்லிட்ட சாம்பெயின் சாராயத்தை மடமட என்று அதில் அவன் ஊற்றினான். செவிடிக்கு வந்தது பாருங்கள் கோபம். அப்படியே வீட்டுக்காரிமீது அதை விசிறிவிட்டாள். வீட்டுக்காரியின் ஸாட்டின் அங்கி நாசமாயிற்று. அதிலிருந்து கொஞ்சநேரம் ஒரே அமளிதான். இந்தமாதிரி கட்டங்கள் வரும்போது, லீயரின் குறிப்புகள் மிகவும் ரசமாயிருக்கின்றன.

ஒரு ரெயில்வே ஸ்டேஷனில் லீயர் காத்துக்கொண்டிருந்தாராம். அப்போது கன்னங்கரய ஆசாமி ஒருவர் அங்கே வந்தார். அவர் ஏதோ அதிகப்பிரசங்கித்தனமாகத் தம்மிடம் நடந்துகொள்வதாக எண்ணி, அவரை லீயர் கோபித்துக் கண்டித்துவிட்டார். பிறகு பார்த்தால், அந்தக் 'கறுப்பர்' ஒரு பெரிய முஸ்லிம் சமஸ்தானத்தின் அதிபதி என்று தெரியவந்தது. இந்த மாதிரி சம்பவங்களை விவரிக்கும் லீயரின் பிரயாணக் குறிப்புகள் படிப்பதற்கு இனிப்பாக இருக்கின்றன.

கார்ட்டூன் கதம்பம்



பட்ஜெட் பள்ளத்தைச் சரிக்கட்டும் பாலம்.

—'பம்பாய்க் கிரானிக்கிள் வீக்லி'



சுசீலா நையார் தொடங்கிய சுகாதார வாரம்.

—'சங்கர்ஸ் வீக்லி'



—'சிக்காகோ ஸன் டைம்ஸ்'

—'சிக்காகோ டெய்லி ந்யூஸ்'

கர்நாடக சங்கீதத்தின் மூல புருஷரான இந்த மகானின் வாழ்க்கை வரலாறு உருக்கமூட்டுவது.

புரந்தரதாசர்

கே. சுபாசந்திர செணை

புரந்தரதாசர் கர்நாடக சங்கீதத்தின் சிருஷ்டி கர்த்தா. கீதங்கள் முதலாகக் கீர்த்தனைகள் வரையில் இவர் பாடியிருக்கிறார். சங்கீதத்துக்கு அடிப்படை இவருடைய கிருதிகளே. இன்று தென்னாட்டில் புரந்தரதாசர் திருநாளை எல்லோரும் விமரிசையாகக் கொண்டாடுகிறார்கள்.

இவர் மகா லோபி என்றும், யாசகத்துக்கு வந்த பிராம்மணருக்கு இவர் ஒன்றும் கொடுக்காமல் விரட்டியதாகவும் கதை ஆரம்பிக்கிறது. வந்த பிராம்மணர் சாட்சாத் விட்டலர். அவர் விடாக்கண்டராகப் புரந்தரதாசருடைய மனைவியிடம் சென்று, "பிள்ளைக்குப் பூணூல் போடவேண்டும்: ஏதாவது கொடுத்து உதவ வேண்டும்" என்றார். கணவனுடைய லோபித்தனத்தைக் கண்டு வெறுத்த அந்த உத்தமி தன் மூக்கிலிருந்த வைர மூக்குத்தியைக் கழற்றிப் பிராம்மணருக்குத் தானம் செய்தாள். அந்தப் பொல்லாத பிராம்மணர் நேராகப் புரந்தரதாசரிடம் தாம் தானம் பெற்ற விஷயத்தைச் சொல்லிவிட்டார். தாசருக்கு எல்லையில்லாத கோபம் வந்தது. மனைவியிடம் வந்து, "மூக்குத்தியைக் காட்டு" என்றார். அவள் பயந்து அரிசிப் பானைக்குள் வைத்திருப்பதாகச் சொல்லி விட்டலரைத் தியானித்தவண்ணம் பானையில் கையை வைத்தாள். என்ன ஆச்சரியம்! அங்கே அவள் மூக்குத்தியை விடப் பல மடங்கு சிறந்து ஒளி வீசும் ஒரு மூக்குத்தி கிடைத்தது. உண்மையை அறிந்த பின் புரந்தரதாசர் விட்டலரின் அடியாராய், சொத்தையெல்லாம் தானம் செய்து பக்திப் பெருக்கால் நூற்றுக்கணக்கான கிருதிகளைப் பாடி உருகலானார். இப்படியே கொஞ்ச காலம் சென்றதும், இவருடைய செயல்கள் மனைவிக்குச் சகிக்க முடியாமல் போய்விட்டன.

"நீ ஏன்? உன்னுடைய தடபுடல் எதற்கு? உன் நாமத்தின் பலம் ஒன்றிருந்தால் போதுமே, தேவா" என்று புரந்தரதாசர், பாடத் தொடங்கினார். உடனே மனைவியின் புலம்பலும் தொடங்கி விட்டது.

"ஆயிற்று. பொழுது விடிந்தவுடன் ஆரம்பித்து விடுகிறார்! தேவா, தேவா, தேவாதான்! தேவனுக்குப் பெயர் வைக்கிறாரோ என்னவோ; கேட்டுக் கேட்டுக் காது செவிடாகிவிட்டது. சொல்லிச் சொல்லி வாய்க்கும் வலி எடுத்துவிட்டது. நாற்பதாம் படி தாண்டியும் இவருக்குப் புத்தி வரவில்லையே! கல்யாணம் செய்தபின்

காப்பிரைட், பிரஜாமதம் (கன்னடம்; 18-1-'53), பங்களூர்.

சுகப்படுவோமென்று நான் மனப் பால் குடித்தது ஊமை கண்ட கன வாகிவிட்டது. பிறந்த வீட்டுக்குப் போவோமென்றால் அவர்கள் பாடும் திண்டாட்டமே.''

"சபையில் மங்கையின் துகிலை உரியும்போது கிருஷ்ணா, கிருஷ்ணா என்ற பெயரே காப்பாற்றியது" என்று பாடினார் புரந்தரதாசர்.

"போதுமே! வீட்டுக்கு வேண்டிய சாமான்கள் தீர்ந்து மூன்று நாட்களாயின. குழந்தைகளின் ஓலம் நெஞ்சைப் பிளக்கிறது. என் பாவம், நான் சாகும் வரையில் கஷ்டப்படத்தான் வேண்டும்! நான் எத்தனை முறை என் குறையை எடுத்துச் சொன்னாலும் இவர் காதில் போட்டுக்கொள்வதில்லை. தினந்தோறும் இவர் சொன்னதைச் சொல்லும் கிளிப் பிள்ளை போல் 'தேவா, தேவா' என்று சொல்லிக்கொண்டிருந்தால் மேலே நடக்கும் வழியென்ன? குழந்தைகளின் கதி என்ன ஆவது?''

"உன் நாமத்துக்குச் சமமானதை உலகிலே காணேன். அளவற்ற மகிமை பொருந்திய புரந்தர விட்டலா!" என்ற அடியைப் புரந்தரதாசர் பாடி முடித்தார்.

உள்ளே மனைவி, "இப்படியே இவரை விட்டால் ஒன்றும் உருப்படாது. சொன்னாலும் தெரிவதில்லை. தெய்வ பக்தி சிறந்தது; மனித குலத்தின் அஞ்ஞானத்தைப் போக்க வல்லது என்று எனக்கு விளங்காதவற்றைச் சொல்லுகிறார்" என்று பொருமினாள். மறுபடி புரந்தரதாசர் பல்லவி பாடி முடித்துவிட்டுத் தியானத்திலிருந்து எழுந்து மனைவியைத் தீர்த்தப் பிரசாதம் வாங்கிக் கொள்ளக் கூப்பிட்டார். பல முறை அழைத்தும் வராததால் தாமே சமையலறைக்குப் போனார். அங்கே கண்களில் கோபக் கனல் பறக்க நின்ற மனைவியைக் கண்டு திடுக்கிட்டார்.

அதை வெளிக் காட்டாமல் சாந்தமாகவே, "உத்தமியே, ஏன் நீ இப்படிக் கோபிக்கிறாய்? குழந்தைகளுக்குத் தாயாகிய நீ இப்படி நடந்துகொள்வது நியாயமா? மனத்தைச் சுத்தமாக வைத்துக்கொண்டு கோபத்தை அழித்துவிடு. மனத்தைப் பகவானிடம் லயிக்கச் செய்; இந்தா, பகவானுடைய பிரசாதம்'' என்றார்.

"போதும், உங்கள் உபதேசம்! கொஞ்சமாவது வெட்கம் வேண்டாமா? நீங்கள் ஆண் பிள்ளையாகப் பிறந்து என்ன பயன்?'' என்று கோபமாகவே எதிர்க் கேள்வி போட்டாள் மனைவி. புரந்தரதாசர் பின்னும் சாந்தமாகவே, "பிரியே, பொறு. நான் உன்னை என்ன செய்துவிட்டேன்?'' என்று கேட்டார்.

"இன்னும் என்ன செய்ய வேண்டும்? உங்கள் தெய்வம் உங்களுக்குக் கண்ணைக் கொடுக்கவில்லையா? அரிசி, பருப்பு, சாமான்கள் இல்லாமல் எவ்வளவு நாள் திண்டாடுவது? என்னிடம் இரக்கம் கொண்டு அக்கம் பக்கத்தார் கொடுத்து உதவுகிறார்கள். அண்டை அயலாரிடம் கெஞ்சிக் கெஞ்சிப் போதும் போதுமென்றாகிவிட்டது. உங்கள் பெயரைச் சொன்னாலே, 'போதும். நீங்கள் திருப்பிக் கொடுப்பதாகச் சொன்னால் சாமான் கொடுக்கிறோம்; அவருக்கென்றால் கொடுக்க முடியாது' என்று தாட்சிண்ணியம்

இல்லாமல் சொல்லிவிடுகிறீர்கள்'' என்றாள்.

''என்மேல் என் கோபித்துக் கொள்கிறாய்? பயப்படாதே! கஷ்டப்பட்டால் சுகம் கட்டாயம் உண்டாகும்'' என்று சிரித்துக் கொண்டே புரந்தரதாசர் சொன்னார்.

''சுகமாம் சுகம்! நன்றாக யோசியுங்கள். வயிற்றுப் பாடு தீர்ந்த பிறகு வேண்டுமானால் தெய்வ பஜனை நடக்கட்டுமே! உங்களால் சம்பாதிக்க முடியாவிட்டால் என் புடைவையை உடுத்துக் கொள்ளுங்கள்; வீட்டு வேலையைக் கவனித்துக்கொள்ளுங்கள். நான் சம்பாதிக்கிறேன். பெண்ணின் திறமையை அறிந்துகொள்ளலாம்'' என்று கோபத்துடன் அந்த அம்மாள் வெளியே புறப்பட்டாள்.

தம் மனைவியின் கொடுஞ் சொற்களைக் கேட்ட புரந்தரதாசருக்குத் துக்கமும் வெறுப்பும் தோன்றின. ''தேவா! இவளுக்குக் கொஞ்சமாவது அறிவைக் கொடுக்கக் கூடாதா?'' என்று நினைத்து வெளியே புறப்பட்டார்.

அவர் 'தேவரநாமா'க்களைப் பாடிக்கொண்டு புறப்பட்டவுடன் அக்கம் பக்கத்துக் குழந்தைகள் எல்லாரும் அவரைப் பின் தொடர்ந்தார்கள். புரந்தரதாசர் சந்தைக்குப் போனார். ஓரிடத்தில் கரும்புத் துண்டங்களை வெட்டிக் குவித்திருந்தார்கள். சில குழந்தைகள் அவற்றைக் கண்டு கொம்மாளம் போட்டார்கள். அவர் முகத்தைப் பார்த்தார்கள். உடனே அவர் அந்தக் குழந்தைகளின் விருப்பப்படி எட்டணவுக்குக் கடனாகக் கரும்புத் துண்டங்களை வாங்கினார். எல்லாக் குழந்தைகளுக்கும் கொடுத்தார். ஒன்று மிகுந்தது. அதை எடுத்துக்கொண்டு பாடிக் கொண்டே வீட்டுக்குள் நுழைந்தார்.

அதற்கு முன்பே பக்கத்து வீட்டுக் குழந்தைகளின் மூலம் அவர் மனைவிக்கு விஷயம் எட்டி விட்டது. அவள் கோபம் உச்சநிலையை அடைந்தது. அவருக்குத் தகுந்த பாடம் கற்பிக்கவேண்டுமென்று பொருமிக்கொண்டிருந்தாள்.

மனைவியின் உக்கிர ரூபத்தைக் கண்ட அவர் மெல்ல உள்ளே நுழைந்து சட்டையைக் கழற்றி விட்டுக் கையில் மிகுதியாக இருந்த கரும்புத்துண்டை அவளிடம், ''இந்தா! உனக்கும் குழந்தைகளுக்கும்'' என்று நீட்டினார். அவள் ராட்சசிபோல் கர்ஜித்து, ''கரும்புத் துண்டங்களை ஊர்க்குழந்தைகளுக்குப் பங்கிட்டு விட்டீர்கள். தாராள குணம் படைத்த தருமவான். கொடுத்தது சரி; கடன் வாங்கிப் பங்கிட வேண்டுமென்று உங்கள் சாமியிடம் பிரார்த்தனை செய்துகொண்டீர்களா? வீட்டில் குழந்தைகள் இருக்கிறார்களே என்று தோன்றியதா? அவர்களைப் பெற்றுவிட்டதோடு கடமை தீர்ந்து விடவில்லை. அவர்களைப் போஷிக்க வேண்டுமென்றால், முன் ஜன்மத்தில் கடுகளவாவது புண்ணியம் செய்திருக்க வேண்டுமே. இப்படியே நடந்து கொண்டிருந்தால் நான் எப்படிச் சகிப்பேன்? இதையும் ஊர்க் குழந்தைகளுக்கே கொடுத்து விடுங்கள்'' என்று அந்தத் துண்டை அவர்மேல் வீசி எறிந்தாள்.

கோப மிகுதியால் எறிந்த அந்தக் கரும்புத் துண்டம் சற்று வேகமாகவே அவருடைய மார்பில் தாக்கி இரண்டாகப் பிளந்து கீழே விழுந்தது. மார்பிலிருந்து ரத்தம்

கசிந்தது. அவர் ஒரு கையால் காயத்தை அழுத்திப் பிடித்துக் கொண்டு மற்றொரு கையால் கீழே கிடந்த கரும்புத் துண்டங்களை எடுத்துக்கொண்டார். அவர் கண்களில் நீர் நிறைந்தது. மனைவியைப் பார்த்து, "அன்பே, நீ மிகவும் சாமர்த்தியசாலி. பதியே தெய்வமென்று நினைப்பவர்களில் உன்னை முதல் வரிசையில் வைக்க வேண்டும். பதிசேவையே ஈசுவர சேவை என்று நினைப்பவள். உலகுக்கு உதாரணமானவள். பரமாத்மாவின் பக்தனுடைய மனைவி அல்லவா? மற்றவர்கள் உன்னிடம் பாடம் கற்கவேண்டும். கணவன் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பொருளை நீ மட்டும் தனியாகச் சாப்பிட விரும்பாமல் என் இருதயத்திலேயே இரண்டாகும்படி அனுப்பினாய். நீ நினைத்தபடியே நடந்தது. இல்லாவிட்டால் இரண்டாகுமா? சீதை, திரௌபதி, அநசூயை முதலியவர்களும் உனக்கு நிகராக முடியாது. உன்னைக் கைப்பிடித்து உன்னுடன் வாழ்க்கைநடத்தநான்என்ன தவம் செய்திருக்க வேண்டும்!" என்று உணர்ச்சி மிகுதியுடன் சொன்னார்.

இதைக் கேட்டதும் அவர் மனைவியின் மனத்தில் பச்சாத்தாபமும் வருத்தமும் ஏற்பட்டன. அவள் உடனே அவருடைய கால்களில் விழுந்து, "நான் அறிவற்றவளாய், கண்ணிருந்தும் குருடியாய்த் தங்களை இழிவாகச் சொல்லிப் பல குற்றங்கள் செய்துவிட்டேன். மனம் இருந்தும் இல்லாதவள் ஆனேன். பொறுக்க வேண்டும்" என்று கண்ணீர்விட்டாள். புரந்தரதாசருக்கும் கண்ணீர் பெருகியது. "கற்புக்கரசியே, அறியாமல் செய்த பிழைகளுக்கு வருந்திக் கண்ணீர் விடுவதே தகுந்த தண்டனை. இனி மேலாவது தகுந்த முறையில் வாழ உறுதி கொள். நம் கஷ்டத்தை நீக்க எப்பொழுதும் பரமாத்மாவை வேண்டி முறையிடு. என் பக்தி மார்க்கத்தில் எனக்குத் துணையாக நில். மனித வர்க்கத்தைக் கை தூக்கிவிடுவோம். அவர்களுக்குக் கண் திறந்துவிடுவோம்" என்றார்.

மூக்கின் உபயோகம்

உங்கள் மூக்கு, உங்கள் உடம்பின் ரத்தச் சுழற்சிக்கு 'ஏர் - கண்டிஷன்' கருவியாக உதவுகிறது. உங்கள் பேச்சில் மூக்கின் கைங்கரியம் உண்டு. முகபாவத்தில் அதற்குப் பங்கு இருக்கிறது. மூக்கில்லாமல், நீங்கள் முகம் சுளிக்க முடியாது; அவமதிப்பைக் காட்டி உறும முடியாது; இருமிக் கனைக்க முடியாது. வெறுப்பைக் காட்டும் முகஜாடைகள் அனைத்திலும் மூக்கு அநேகமாகப் பங்கு கொள்கிறது. அடுத்த தடவை எங்கேயாவது பார்ட்டிகளுக்குப் போனால், சுற்றியிருப்பவரின் மூக்குகளைக் கவனியுங்கள். பேச்சுக்கு மட்டும் அல்ல, எத்தனையோ உணர்ச்சிகளைக் காட்டவும் மூக்கு உதவுவதைக் காண்பீர்கள். —'யுவர் ஹெல்த்'

பாபுராவ் பதில் சொல்லுகிறுர்

கேட்பவரின் கேள்விகளுக்கு, '·ஃபில்மிண்டியா' ஆசிரியர் பாபுராவ் அளிக்கும் பதில்கள் பிரசித்தம். இவைகளில் விறுவிறுப்பும் கேலியும் நிறைந்திருக்கும். இவை '·ஃபில்மிண்டியா' பிப்ரவரி '53 இதழில் வெளியானவை.

கேள்வி: ஆடவர்களுக்கு வேண்டியது அறிவுள்ள மனைவியா, பேசாமடந்தையா?

பதில்: அறிவுள்ள பேசாமடந்தை; இந்த இரண்டும் சேர்ந்தால்தான் இன்ப உலகின் வாயில் திறக்கும்.

* * *

கே: காமசாஸ்திர பாடபுஸ்தகம் ஒன்று நல்லதாகச் சொல்லுங்கள்.

ப: பெண். வாழ்வு முழுவதற்கும் ஒரு பிரதி போதும்.

* * *

கே: ருஷியா இந்தியாவின்மேல் படையெடுத்தால் என்ன ஆகும்?

ப: எடுக்காது. ஆனுல் கம்யூனிஸம் சீன உடையில் இந்தியாவில் நுழையும்.

* * *

கே: இந்தியாவில் இன்னும் அயல் நாட்டாரைக் கவருவது என்ன?

ப: உலகத்து ஜனத்தொகையில் ஐந்தில் ஒரு பங்கினருக்கு எத்தனையோ லட்சம் பண்டங்கள் தேவையாக இருக்கின்றன. இந்தியா நித்தியமான சந்தை.

* * *

கே: 1952-ஆம் வருஷத்து விசேஷ மனிதர் யார்?

ப: ஸ்டாலின். அவர் சமாதானம் என்ற விலாசத்தில் உலக யுத்தத்தை வைத்திருந்தார். அதற்குப் புத்திசாலித்தனம் வேண்டும்.

கே: சீனுவின் சமீப சரித்திரம் நமக்கு ஏதையாவது போதிக்கிறதா?

ப: ஆம்; மனிதர்களை மாடுகளாக உபயோகிக்கலாம் என்பதைப் போதிக்கிறது.

* * *

கே: இருதயத்தில் ஒரு நரம்பைத் தொடுவதா, மூளையில் ஒரு நுண்ணறையைத் தொடுவதா, எது அதிகக் கஷ்டமானது?

ப: மூளை இருதயத்தைவிட ஓரடி அதிக உயரத்தில் இருக்கிறதே!

* * *

கே: இரும்புப் பெட்டிகள் பேசுவதாக இருந்தால்?

ப: மனிதனைப் புதைத்தாலும், பணத்தைப் புதைத்தாலும் சமாதிகள் வாய் திறப்பதில்லை.

* * *

கே: எப்போது சங்கீதம் பிறந்தது?

ப: மனிதன் இயற்கை ஒலிகளைப் பரிவுடன் கேட்டு அவற்றின் தெய்விக லயத்தை உணர்ந்தபொழுது.

கே: இந்தியாவின் உத்தமமான நண்பன் யார்?

ப: நேர்மையுடன் நன்றாக உழைத்துத் தன் பிரச்னைகளுக்காகத் துரைத்தனத்தை எதிர்பார்க்காமல் இருக்கும் பிரஜை.

* * *

கே: அமெரிக்கர்கள் விருந்தினருக்கு உபசாரம் செய்யும் குணமுடையவர்களா?

ப: நீங்கள் கம்யூனிஸ்டாக இல்லாமலிருந்து அவர்களுடன் பந்து விளையாடினால் உபசரிப்பார்கள்.

* * *

கே: வயசான பருவத்தில் எது நினைவுக்கு வருகிறது?

ப: வெற்றியென்பது தலை கனத்தவர்களுக்குச் சரிப்படாத சின்னக் குல்லாயென்பது.

* * *

கே: நேபாள அரசர் திருபுவனரைப்பற்றி ஏதாவது சொல்லுங்கள்.

ப: குடுமித் தேங்காயிலே கடைசித் தேங்காய்.

* * *

கே: இந்த வருஷம் காங்கிரஸில் தீ இல்லையே?

ப: பேச்சுக்களில்கூட இல்லை. மிகவும் ஏமாற்றம்.

* * *

கே: அமெரிக்காவிலும் விதவைகள் இருக்கிறார்களா?

ப: அமெரிக்காவில் வைதவியம் என்பது கொஞ்சகாலம் இருக்கும் திர்ப்பாக்கியம்.

* * *

கே: ருஷியாவிலிருந்து ஒருவராவது உங்களைக் கேள்வி கேட்கிறது இல்லையே?

ப: கேள்வி கேட்கும்படி அவர்களை விடுவதில்லை. கேள்வி கேட்பது ஜனநாயகம்.



கே: இந்த நாசமாய்ப் போகிற நாய்கள் என் ஒன்றைப் பார்த்து ஒன்று குரைக்கின்றன?

ப: நம்முடைய அரசியல்வாதிகளை அவை பின்பற்றுகின்றன.

* * *

கே: ஒரு பெண்ணின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ள மிகவும் சுலபமான வழி எது?

ப: சிரமப்பட்டு உழைத்துப் பாங்கியில் பணம் சேர்த்துக் கொண்டு அவளிடம் போய்க் கல்யாணம் பண்ணிக்கொள்ளும்படி கேளுங்கள்.

* * *

கே: வேதனையே இல்லாமல் பெறும் இன்பம் எது?

ப: இறைவனுடைய திருவருள்.

* * *

கே: கண்ணாடி உங்களுக்கு எதைச் சொல்கிறது?

ப: வயசும் கவலையும் முகத்தில் சுருக்கத்தை உண்டாக்கிப் புன்னகையையும் வெடுவெடுப்புப் போலத் தோற்றச் செய்கின்றன என்பதை.

* * *

கே: நாம் என் கடவுளைப் பிரார்த்திக்க வேண்டும்?

ப: வேண்டாம்! ஆனால் அவரை மறக்கவும் கூடாது.

மாயமாய் மறைந்த நிபுணர்

★

அதிசய சிருஷ்டி அவர் செய்த யந்திரம்; பரிதாப மானது அவர் வாழ்வின் முடிவு — இந்த ஜெர்மன் நிபுணரைப்பற்றிய வரலாற்றுக்கு ஆதாரம் 'தி டாரண்ட்டோ ஸ்டார் வீக்லி'யில் வந்துள்ள கட்டுரை.

அவருடைய பெயரைக் கொண்ட எஞ்சின்கள் உலகெங்கும் ஓடுகின்றன. எழு கடலிலும் செல்லும் கப்பல்கள், வீதியெல்லாம் ஓடும் லாரிகள், வானத்திலே பறக்கும் விமானங்கள், நிலத்தை உழும் ட்ராக்டர்கள் இவைகளையெல்லாம் அந்த எஞ்சின்கள் இயக்குகின்றன. அந்த நிபுணரின் பெயர் ருடால்ஃப் டீஸல் என்பதுதான். டீஸல் எஞ்சின் புழங்காத இடமே இன்று இல்லை. ஆனால், அவருடைய வாழ்க்கை முடிவு ஒரு சோக நிகழ்ச்சியாகும்.

ருடால்ஃப் டீஸல் ஒரு ஜெர்மானியர். 1858-ஆம் வருஷம் ஜெர்மன் தொழிலாளி வம்சம் ஒன்றில் பிறந்தார். அவருடைய தகப்பனார் ஒரு மெக்கானிக். ருடால்ஃப் டீஸல் நல்ல புத்திசாலி. மூனிக் டெக்னிக்கல் கலாசாலையில் ஸ்காலர்ஷிப் பெற்றார். இருபது வயதில் அங்கே இவருடைய பயிற்சி பூர்த்தியாயிற்று. இவருக்கு முன் யாருமே இவ்வளவு பாலியத்தில் இப்படிப் பயின்று தேறவில்லை. இவர் தேர்ச்சி அடைந்ததும், அத்தனை ஆசிரியர்களுமே பிரமித்துப் போய் இவருடன் கை குலுக்கினார்கள்.

இதைவிட அங்கே நிகழ்ந்த மற்றொரு நிகழ்ச்சிதான் மிகவும் முக்கியம். பண்டங்களைச் செயற்கை முறையில் குளிரச் செய்யும் 'ஆர்ட்டிஃபிஷல் ரிஃப்ரிஜெரேஷன்' என்ற யுக்தியை முதல் முதலில் அநுஷ்டித்துக் காட்டிக் கீர்த்தி பெற்ற டாக்டர் கார்ல் லிண்டி என்பவர், அந்தப் பயிற்சிக் கூடத்தில் மாணவர்களுக்கு ஒரு நாள் பிரசங்கம் செய்தார். அந்தக் காலத்தில் வழங்கிய ஸ்டீம் எஞ்சின்களுக்குள்ளே மிகச் சிறந்ததை எடுத்துக்கொண்டாலுங்கூட, நிலக்கரியின் 'எனர்ஜி' (சக்தி) மொத்தத்தில் 10-சதம் வீணாகி வந்தது. இதை லிண்டி விளக்கினார். அந்தப் பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருந்தபோதே, டீஸல் தம் நோட்டுப் புஸ்தகத்தில் பென்ஸிலால் இதைக் குறித்துக் கொண்டார்: "எரிபொருள் (ஃப்யூயல்) மூலம் கிடைக்கிற சூட்டில் ஒரு பகுதியைத்தான் இப்போது உபயோகித்துக்கொள்ள முடிகிறது என்று 'மெக்கானிக்கல் தியரி' (யந்திர சித்தாந்தம்) சொல்லுகிறது. இதிலிருந்து ஒன்று தெரிகிறதில்லையா? அதாவது, நீராவியையோ வேறு எதாவது பொருளையோ இடையிலே

தோற்றுவிப்பது தவறு. எரிபொருளின் 'எனர்ஜி'யை நேரே வேலையில் பூட்டி விடுவது சாத்தியம் என்றே தோன்றுகிறது. ஆனால், அதை எப்படிச் செய்வது?''

விண்டி அந்தப் பிரசங்கத்தைச் செய்யும்போது, ஒரு சிறு கருவியை உபயோகித்து விஷயத்தை விளக்கினார். அது ஒரு விளையாட்டுத் துப்பாக்கிபோல் இருந்தது. அந்தக் கருவி ஒரு 'சிகார் லைட்டர்'; வேறொன்றும் அல்ல. அந்தக் கருவியின் 'ஸிலிண்டர்' என்ற குழாய்க்குள் இருந்த காற்றை, 'ப்ளஞ்ஜர்' என்ற ஒரு கொக்கி அழுத்தியது. காற்று அப்போது 'கம்ப்ரஸ்' ஆயிற்று; அதாவது, நெருங்கிக் குறுகியது. அதனால் சிறிது உஷ்ணம் பிறந்து, தீப் பற்றக் கூடிய ஏதோ ஒரு பொருளில் தீ மூட்டியது. இதை டீஸல் கவனித்தார். எரி பொருளின் 'எனர்ஜி'யை நேரே வேலையில் பூட்ட இதுவே வழியென்று அவருக்கு ஒரு யோசனை தோன்றியது.

பிறகு டீஸல் மணம் புரிந்துகொண்டு பாரிஸ் நகரில் குடியேறினார். ப்ரொஃபஸர் விண்டியின் 'ஐஸ்-மெஷின்'களுக்கு ஏஜண்டாக இருந்துகொண்டு வியாபாரம் செய்தார். தாம் கனவு கண்ட எஞ்சினை எப்படிச் செய்வது என்பது பற்றிய திட்டங்களைத் தயாரிப்பதில் இரவெல்லாம் கண்விழித்து ஈடுபட்டார். பொழுது விடியும் சமயத்தில் தம் மேஜையின்மீது சாய்ந்தபடியே அவர் தூங்குவதைப் பல நாள் அவருடைய மனைவி கண்டிருக்கிறாள். கட்டுக் கட்டாய் அவர் தயாரித்த காகிதப் ப்ளான்களில், பக்கம் பக்கமாய் என்ன என்னவோ கணக்குகளைப் போட்டிருப்பார். காற்றை எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாய்க் 'கம்ப்ரெஸ்' செய்கிறோமோ - அதாவது, அழுத்தி நெருக்குகிறோமோ - அவ்வளவுக்கவ்வளவு அதிகமாய் அது உஷ்ணம் ஆகிறது என்று அவர் கண்டுகொண்டார். உதாரணமாக, பைஸிக்கிள் பம்பைக் கொண்டு டயருக்குக் காற்று அடைக்கும்போது, அந்தப் பம்பை நம்மில் பலர் தொட்டுப் பார்த்திருப்போம். அப்போது அது எவ்வளவு உஷ்ணம் ஆகிறது? பம்புக்குள் உள்ள காற்றை நெருக்கும்போது அது உஷ்ணமடைவதுதான் இதற்குக் காரணம். இந்தச் சூட்சுமத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு ஏன் ஓர் எஞ்சினையே அமைக்கக் கூடாது என்று டீஸலுக்குத் தோன்றியது. அந்த எஞ்சினில் அமைக்கிற 'பிஸ்டன் ராட்' (இரும்புத் தடி) பின்னே செல்லும்போது ('லோடிங் ஸ்ட்ரோக்' சமயம்), காற்றை மட்டும் 'ஸிலிண்டர்' என்ற குழாய்க்குள் இழுத்து அடைக்க வேண்டும்; மறுபடியும் 'பிஸ்டன் ராட்' திரும்பும்போது ('ரிட்டர்ன் ஸ்ட்ரோக்' சமயம்), காற்றைப் 'பிஸ்டன்' நெருக்கி, முன்பு இருந்த இடத்தில் பதினாறில் ஒரு பங்கு இடத்துக்குள் குறுக்கவேண்டும். இப்படிச் செய்தால், இதன் மூலம் பிறக்கும் உஷ்ணம் 1000-டிகிரி ஃபாரன்ஹீட் இருக்கும் என்று டீஸல் கணக்கிட்டார். இவ்வளவு அதிகமான உஷ்ணம் பிறந்திருக்கும் சமயத்தில், ஒரு பொட்டு எண்ணெயை 'ஸிலிண்ட'ருக்குள் செலுத்திவிட வேண்டும். அது தீப் பற்றி வெடிப்பதால் பிறக்கும் சக்தி (கம்பஸ்ச்சன்), மீண்டும்

'பிஸ்ட'னைப் பின்னே தள்ளும். எண்ணெய்ச் சொட்டுக்குத் தீ மூட்டும் சிக்கலான ஏற்பாடு (இக்னிஷன் விஸ்டம்) எதுவும் இந்த முறையில் தேவை இல்லாமல் போகும் என்று டீஸல் நினைத்தார்.

வேறு யாராவதாக இருந்தால், இதோடு காகிதப் பிளான் வேலையை நிறுத்தியிருப்பார்கள். நேரே தொழிற்சாலைக்குப் போய், பரீட்சார்த்த வேலையில் இறங்கியிருப்பார்கள்; ஓர் எஞ்சினையே பலவிதமாய்த் திருத்தித் திருத்தி அமைத்து, எது சரியான அமைப்பு என்பதை அநுபவத்தில் கண்டறிய முயன்றிருப்பார்கள். டீஸல் அப்படிச் செய்யவில்லை. தாம் கற்பனை செய்த எஞ்சினில் பூட்டவேண்டிய ஒவ்வொரு திருகாணியையுங்கூடக் காகிதத்திலேயே கணக்குப் போட்டுப் பார்த்தார்; பிளான் தயாரித்தார். அதற்குப் 'பேட்டண்ட்' உரிமையையும் வாங்கி வைத்துக்கொண்டார்.

அப்போது அவருக்கு வயது 35. 'அறிவுக்கொத்த முறையில் உஷ்ண மோட்டார் அமைப்பும் சித்தாந்தமும்' (தியரி அண்ட் கன்ஸ்ட்ரக்ஷன் அவ் ஹீட் மோட்டார்) என்ற பெயருடன் தம் கொள்கையை ஒரு சிறு புத்தகமாக 1893 ஜனவரியில் எழுதி டீஸல் வெளியிட்டார். அது மிகவும் சிறிய புஸ்தகந்தான். ஆனால் உலகத்திலேயே பெரிய மாறுதலைச் செய்துவிட்ட மிகச் சிலபிரசுரங்களுள் ஒன்றாகிவிட்டது.

டீஸல் எஞ்சினை முதலில் பலர் வெறும் 'காகித எஞ்சின்' என்றெல்லாம் கேலி செய்தார்கள். ஏனென்றால், அது அப்போது ஏட்டிலேயே இருந்தது. அதே வருஷம் ஆகஸ்டு மாதத்தில், டீஸல் தம் எஞ்சினைச் செய்து பார்ப்பதற்கு பணம் உதவப் பிரபல தொழிற்சாலை முதலாளியான க்ரூப் முன் வந்தார். ஆக்ஸ்பர்க் தொழிற்சாலை அறை ஒன்றில், பம்புமாதிரி ஒரு கருவியை டீஸல் அமைத்தார். அதில் இரும்பு உருளை (ஃப்ளை வீல்) ஒன்றை மாட்டினார். சோதனை தொடங்கியது. இரும்பு உருளை மிகவும் மெதுவாகச் சுழன்றது. அதில் பொருத்தியிருந்த 'பிஸ்டன்' அசைந்தது. வைத்த கண் வாங்காமல் வெகு கவனமாக அதையே டீஸல் பார்த்துக்கொண்டிருந்தார். கடைசியாக, மிகுந்த பரபரப்புடன் ஒரு கொக்கியை அவர் அழுத்தினார். அவ்வளவுதான்: பம்புக்குள் புகுந்த ஒரு சொட்டு எண்ணெய் 'படீர்' என்று ஒலித்தது. ஏதோ குண்டு வெடித்ததுபோல, பம்புக்குழாய் பிளந்து அதிலிருந்து பல இரும்புச் சில்லுகள் அறையெங்கும் சிதறின. அவைகளுள் ஒன்று டீஸல்மீது பட்டிருந்தால், அதோடு அவர் மாண்டுபோயிருப்பார். மயிரிழையில் தப்பினார். ஆனால், இதைப் பற்றியெல்லாம் அவருக்குக் கவலையில்லை. வெற்றிக் குதூகலத்துடன், "இதுதான் நான் வேண்டியது! என் வழி சரி என்பதை இது காட்டிவிட்டது!" என்று கோஷித்தபடி துள்ளிக் குதித்தார்.

பிறகு, நாலு வருஷகாலம் இதே வழியைப் பின்பற்றி உழைத்தார். கடைசியாக, முதலாவது டீஸல் மோட்டார் அமைந்துவிட்டது. அது 20 குதிரைச் சக்தி கொண்ட எஞ்சின். உலகத்தின் பிரபல எஞ்சினீர்களெல்லாம் ஆக்ஸ்பர்க் தொழிற்சாலைக்கு

ஓடி, அதைப் பார்த்து வியந்தார்கள்.

டீஸல் எஞ்சினை உபயோகிப்பதில் ஒரு சௌகரியம் இருக்கிறது. மோட்டாவாகவும் மலிவாகவும் உள்ள 'பெட்ரோலியம்' எண்ணெயை அதில் உபயோகிக்கலாம். அது மாத்திரமல்ல; அநேகமாக எந்தச் சரக்கை வேண்டுமானாலும் எரிபொருளாக உபயோகித்து, அதை ஓட்டிவிடலாம். நிலக்கரித் தூளைக் கொண்டு அதை டீஸல் ஓட்டிப் பார்த்தார். ஆனால், 'ஸிலிண்ட'ரில் அதனால் கீற்றுக்கள் விழுந்தன. ஆமணக்கெண்ணெய், பாம் எண்ணெய், மீன் எண்ணெய், பருத்தி வித்து எண்ணெய், வேர்க்கடலை எண்ணெய், தார் இவைகளையெல்லாம் டீஸல் உபயோகித்தார். மோரை உபயோகித்தபோதுகூட டீஸல் எஞ்சின் ஓடியது. ஆனால் எஞ்சினை மோர் கெடுத்து விடும் என்று எஞ்சினீர்கள் சொல்லுகிறார்கள்.

முதல் டீஸல் எஞ்சின் தோன்றியதிலிருந்து பதினைந்தே வருஷ காலத்தில் டீஸலுக்குப் பிரமாதமான புகழும் ஏராளமான பணமும் கிடைத்தன. டீஸல் எஞ்சின் செய்யும் தொழிற்சாலைகள், ஐந்து நாடுகளில் ஏற்பட்டன. அந்த ஐந்திலிருந்தும் அவருக்குப் பணம் வந்துகொண்டே யிருந்தது.

1913 - ஆம் வருஷ செப்டம்பரில் லண்டன் கடற்படை இலாகா அதிகாரிகளைச் சந்தித்து ஆலோசனை புரியப் பல பெரிய தொழிற்சாலை முதலாளிகள் சென்றார்கள். டீஸலும் அப்படியே புறப்பட்டார். இங்கிலீஷ் கால்வாயைக் கடப்பதற்காக ஒரு கப்பலில் ஏறினார். அவரோடு வேறு இரண்டு நண்பர்களும் சென்றார்கள். அவர்களுள் ஒருவர் ஜார்ஜஸ் கேரெல்ஸ் என்பவர். அவர் கெண்ட் என்னும் இடத்து டீஸல் தொழிற்சாலையின் அதிபர். டீஸலும் நண்பர்கள் இருவரும் செப்டம்பர் 29-ஆம் தேதி இரவு உற்சாகமாக உணவு அருந்திவிட்டு, கப்பலின் மேல் தளத்தில் சற்று நேரம் உலாத்திக்கொண் டிருந்தார்கள். பிறகு மூன்று பேரும் கீழே சென்றார்கள். தம் அறை வந்து சேர்ந்ததும், டீஸல் மற்ற இருவரையும் விட்டுப் பிரிந்தார். சிறிது நேரத்துக்கெல்லாம் கேரெல்லின் அறைக்கு வெளியே வந்து, அதன் கதவைத் திறந்து, "குட் நைட்! காலையில் பார்க்கிறேன்" என்று சொல்லி, கேரெல்லிடம் டீஸல் விடை பெற்றார். இது என்னவோ அநாவசியமான செயல். ஆனால், ஏன் டீஸல் இப்படிச் செய்தார் என்று அப்போது தெரியவில்லை.

காலையில் எழுந்து பார்த்தால், டீஸலைக் காணவில்லை. ராத்திரியில் வழக்கமாய் அவர் அணியும் சட்டை, மடித்தபடி நலுங்காமல் அவருடைய தலையணையில் கிடந்தது. அவருடைய கைக் கடிகாரம் அவர் பைமீது பத்திரமாகத் தொங்கிக்கொண்டிருந்தது.

ஒரு வாரத்துக்கெல்லாம் கடலில் சென்றுகொண் டிருந்தது ஒரு டச்சுக் கப்பல். நீரில் மிதந்த ஒரு பிணத்தை அந்தக் கப்பல் அதிகாரிகள் கண்டெடுத்தார்கள். அடையாளமே கண்டு பிடிக்க முடியாமல் அது உருக்குலைந்திருந்ததால், அதன் சட்டை ஜேபியில் இருந்த சில சாமான்களை மாத்திரம் எடுத்து வைத்துக் கொண்டு பிணத்தை மறுபடியும் கடலிலே போட்டுவிட்டார்கள். அந்தச் சாமான்களில் இருந்த

ஒரு மணி பர்ஸ், ஒரு பேனாக் கத்தி, ஒரு மூக்குக் கண்ணாடிக் கூடு இவை மூன்றும் டீஸல் வைத்திருந்தவை என்று பின்னால் புலனாயிற்று.

டீஸல் எப்படி மறைந்தார் என்பது மட்டும் புரியாத மர்மமாக இருந்தது. சில நாளைக்கெல்லாம் முதல் உலக யுத்தம் தோன்றியது. அதற்கு முன்பே சர்வதேச நிலைமையில் மிகுந்த பரபரப்பு ஏற்பட்டிருந்தது. டீஸலின் மரணத்தைப்பற்றிப் பலவித வதந்திகள் கிளம்பின. "தம் யந்திர ரகஸ்யங்களைப் பிரிட்டிஷ்காரருக்குச் சொல்லிக் கொடுக்கப் போன துரோகி டீஸல்; அவரை ஜெர்மானியன் ஒருவனே கடலில் தள்ளிக் கொன்றுவிட்டான்" என்றெல்லாம் சொன்னார்கள். பல வருஷம் கழித்து, டீஸலின் வாழ்க்கை வரலாற்றை அவருடைய மகன் யூஜென் டீஸல் எழுதியபோதுதான் உண்மை வெளியாயிற்று.

ருடால்ஃப் டீஸலுக்கு மூனிக் நகரில் ஒரு வீடு இருந்தது. அதை ஈடாக வைத்து ஏராளமாக அவர் கடன் வாங்கிவிட்டாராம். அந்தப் பணத்தைக் கொண்டு, தம் எஞ்சின் வியாபாரத்தைப் பிரமாதமாய்ப் பெருக்குவதற்குச் செலவிட்டாராம். அதில் பெருத்த நஷ்டம் வந்துவிட்டது. ருடால்ஃப் டீஸல் மாண்ட பிறகு கணக்குப் பார்த்ததில், அவருடைய ஆஸ்தியெல்லாம் 2000 பவுனுக்கு மேல் இல்லை; ஆனால் கடனோ 75,000 பவுன் வரை இருந்தது.

"ருடால்ஃப் டீஸல் மட்டும் என்னிடம் ஒரே ஒரு வார்த்தை சொல்லியிருந்தாரானால், போதுமே; எவ்வளவு பணம் வேண்டுமானாலும் கொடுத்திருப்பேனே!" என்று, ஒரு கோடீசுவரர் இதைக் கேட்டதும் அங்கலாய்த்தார். இவர் என்ன! இன்னும் பல கோடீசுவரர்கள் பணம் கொடுத்திருப்பார்கள். ஆனால், ருடால்ஃப் டீஸல் மிகவும் மானி; பெருமை நிறைந்தவர். இப்படியெல்லாம் கையேந்திப் பணம் வாங்க அவர் மனம் சம்மதிக்கவில்லை; கடலில் குதித்து உயிர் துறந்துவிட்டார்!

முன்னதாகவே, 'தற்கொலை செய்துகொள்ள என்ன என்ன வழிகள் உண்டு?' என்ற விஷயம் பற்றித் தம் மகனிடம் ருடால்ஃப் டீஸல் ஒரு நாள் சம்பாஷணை செய்திருக்கிறார். தாமே தற்கொலை செய்துகொள்ளத்தான் அவர் இப்படியெல்லாம் பேசுகிறார் என்று மகனுக்குச் சிறிதும் சந்தேகம் உண்டாகவில்லை. பாவம்! "தற்கொலைக்குச் சிறந்த வழி எது தெரியுமோ? வெகு வேகமாய் ஓடும் ஒரு கப்பலிலிருந்து கடலில் குதிப்பதுதான்" என்று மகன் அப்போது சொல்லியிருக்கிறார். தந்தை டீஸல் இங்கிலாந்துக்குப் புறப்படும்போது, வழக்கத்தை விட மிக அதிக அன்போடு எல்லாரிடமும் விடை பெற்றுக்கொண்டாராம். இதையெல்லாம் பார்க்கும்போது, ஒரே ஒரு முடிவுக்குத்தான் வர வேண்டியிருக்கிறது. உலகெங்கும் தம் பெயரை எல்லாரும் எந்நேரமும் சொல்லிக்கொண்டிருக்கும்படி ஒரு யந்திரத்தைக் கொடுத்துவிட்டு, தாம் கடலோடு கடலாய் மறைந்துவிட்டார் நிபுணர் டீஸல். என்ன பரிதாபம்!

சூட்டைக் காணும் கருவி

★

பல கோடி மைல்களுக்கு அப்பால் உள்ள ஓர் அண்டத்தின் சூட்டைக்கூட இங்கிருந்தே கண்டு தெரிவிக்கும் அற்புதக் கருவி ஒன்று பற்றிய இந்தக் கட்டுரை, ஹார்வி ப்ரேஸ் லெமன் என்பவர் ஒரு நூலில் எழுதியுள்ள விவரத்தை ஆதாரமாகக் கொண்டது.

நாம் எல்லாரும் தெர்மாமீட்டர் என்ற கருவியைப் பார்த்திருக்கிறோம். அது சூட்டை அளந்து விடுகிறது. ஆனால், அப்படி அளப்பதற்கு, சூடுள்ள பொருளையோ உடம்பையோ அது தொட்டுக்கொண்டிருக்கவேண்டும். இப்படித் தொடவேண்டிய தேவையில்லாத அதிசயமான மற்றொரு தெர்மாமீட்டரும் இருக்கிறது. அதைப்பற்றி நம்மில் பலருக்குத் தெரிந்திருக்காது. 'தெர்மோ - எலக்ட்ரிக் தெர்மாமீட்டர்' என்றும் 'தெர்மோ-பைல்' என்றும் இரண்டு பெயர். சூடுள்ள பொருள் வெகு தூரத்திலிருந்தால் போதும்; அந்தப் பொருளின் சூடு எவ்வளவு என்பதை, இருந்த இடத்திலிருந்தே அளந்து கணக்கிட்டுவிடக்கூடியது இந்த அதிசயக் கருவி. பதினைந்து அல்லது இருபது வருஷங்களுக்கு முன்புதான், இதை மிகவும் நுட்பமாய் வேலை செய்யக் கூடிய முறையில் அமைத்தார்கள். இன்று இது புரியும் விந்தையைக் கேட்டால், சாமான்ய ஜனங்கள் நம்பவே மாட்டார்கள்.

நாம் இருக்கும் இடத்திலிருந்து சில மைல் தூரத்தில் பல மெழுகுவர்த்தித் தீபங்கள் ஒளி செய்து



உஷ்ண - மின்சார - ஜோடி

கொண்டிருக்கின்றன என்று வைத்துக்கொள்ளுங்கள். எத்தனை மெழுகுவர்த்திகள் எரிகின்றன என்பதை இந்தக் கருவியின் உதவியால் இங்கிருந்தபடியே நாம் சொல்லிவிடலாம். பத்து மெழுகுவர்த்திகள் அங்கே எரிந்துகொண்டிருக்கும்போது, அவற்றில் ஒன்றிரண்டு அணைந்துவிட்டால், அணைந்தவை எத்தனை என்பதை அதேபோல் கணக்கிட்டுவிடலாம்.

நாம் பேசும் சமயம் நம் குரலின் ஒலி-அலைகள் காற்றிலே செல்லும்போது, காற்றில் சிறிது சீதோஷ்ண மாறுதல்கள் உண்டா

கின்றன. அந்த மிக அற்பமான மாறுதல்களையும் இந்தக் கருவி கண்டுபிடித்து விடுகிறது. அதனுல் குரல் வித்தியாசங்களைக்கூட இந்தக் கருவியின் உதவியால் அறிந்து சொல்ல முடிகிறது.

இவையெல்லாம் போகட்டும். எத்தனையோ லட்ச லட்சம் மைல் தூரங்களுக்கு அப்பால் இருக்கும் நட்சத்திரங்கள் - தூரதிருஷ்டிக் கண்ணுடியில்லாமல் வெறும் கண்ணுல் பார்த்தால் நமக்குத் தெரியாத நட்சத்திரங்கள்கூடத் தான் -, சூரியன், கிரகங்கள், சந்திரன் இவைகளின் சீதோஷ்ண நிலை என்ன என்பதை இந்தக் கருவியைக் கொண்டு வான சாஸ்திரிகள் கண்டுபிடித்து விடுகிருர்கள். அவர்கள் இதைத் தங்கள் டெலஸ்கோப் (தூரதர்சினி) என்ற கருவியில் உபயோகிக்கிருர்கள்.

சந்திரனின் உஷ்ண நிலையைப் பார்ப்போம். சந்திரனுக்கு ஏறக் குறைய நம்முடைய பதினுலு நாள் ஓர் இரவு; மறு பதினுலு நாள் ஒரு பகல். பௌர்ணமி அன்றுதான் சந்திரனின் ஒரு நாள் உச்சிநேரம். இன்னெரு விஷயத்தையும் இங்கே நாம் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். சந்திரனின் ஒரே பாதிதான் எப்போதும் - அதாவது, நம்முடைய இருபத்தெட்டு நாளும் - பூமியை நோக்கியபடி இருக்கிறது. பூமியை இருபத்தெட்டு நாளில் சந்திரன் ஒரு சுற்றுச் சுற்றுகிறது. இதுவே சந்திரனுக்கு ஒரு நாள். இந்த ஒரு நாளின் உச்சிநேரம் பௌர்ணமி; அதாவது, பூமியை நோக்கியிருக்கும் பாதிப் பகுதிக்கு உச்சி நேரம். இந்த நேரத்தில்தான், அதில் மிக அதிகமான சூரிய உஷ்ணம் இருக்கும். இந்த உச்சி நேரத்தில், சந்திரனின் உஷ்ண நிலை என்ன என்று இந்த அதிசயக் கருவியைக் கொண்டு அளந்ததில், 240 டிகிரி ஃபாரன்ஹீட் சூடு இருப்பதாகத் தெரிகிறது. 14 நாள் தொடர்ந்து காய்ந்த வெயில் ஒரே இடத்தில் தாக்கியிருப்பதால்தான் இவ்வளவு உஷ்ணம்.

செவ்வாய்க் கிரகத்தின் உஷ்ணத்தையும் இந்தக் கருவியைக் கொண்டு அளவிட்டிருக்கிருர்கள். அதன் வாயு மண்டலம், நம்முடைய வாயு மண்டலத்தைவிட மிகவும் அற்பமானது. ஆகவே, அதன் மேற்புற உஷ்ணம் அவ்வளவு கடுமையாக இல்லை. சூரியோதயத்தின்போது, பூஜ்யத்துக்குக் கீழே 85 டிகிரி ஸெண்டிகிரேடு இருக்கிறது; அதாவது, 'ட்ரை ஐஸ்' நிலையில் இருக்கிறது. செவ்வாயின் உச்சி நேரத்தில், அதன் உஷ்ணம் பூஜ்யத்துக்கு மேலே 10 - டிகிரி ஸெண்டிகிரேடு; அதாவது, 50 டிகிரி ஃபாரன்ஹீட். செவ்வாயின் வட துருவத்தில் குல்லாய் போல் கவிந்திருக்கும் பனியும் மேகபடலமும் ஒருபோதும் மறைவதில்லை. அதன் தென் துருவத்தின் சீதோஷ்ண நிலைமட்டும் பல விதமாய் மாறுகிறது; 1924 ஆகஸ்ட் 14 - ஆம் தேதி பூஜ்யத்துக்குக் கீழே 100 டிகிரி ஸெண்டிகிரேடாக இருந்த அது, அதே வருஷம் அக்டோபர் 22 - ஆம் தேதி பூஜ்யத்துக்குக் கீழே 15 டிகிரி ஸெண்டிகிரேடாக ஏறியது.

இதே கருவியின் உதவியால் வியாழன், சனி, யுரேனஸ் இந்தக் கிரகங்களின் சீதோஷ்ணங்களையும் ஆராய்ந்திருக்கிருர்கள். இந்தக் கிரகங்களின் மேல்பரப்பு

இடத்தை வான சாஸ்திரிகள் காண முடியவேயில்லை; இவைகளை எந்நேரமும் சூழ்ந்துகொண்டிருக்கும் மேக மண்டலங்களைத் தான் காண முடிகிறது. நம்முடைய பூமியின் வாயு மண்டல உச்சியே மிகவும் குளிர்ச்சியாக இருக்கிறது. பூமியைவிடப் பெரிய இந்தக் கிரகங்களோ, சூரியனிலிருந்து பூமியைவிட அதிகத் தொலைவில் இருக்கின்றன. ஆகவே, இவைகளின் மேகமண்டலக் குளிர்ச்சி நிலைகள் முறையே பூஜ்யத்துக்குக் கீழே 130 டிகிரி, 150 டிகிரி, 170 டிகிரி ஸெண்டிகிரேடாக இருக்கின்றன.

எங்கேயோ வெகு தொலைவிலிருக்கும் வான அண்டங்களின் சீதோஷ்ண நிலைகளையெல்லாங் கூட இப்படிக் கணக்கிடுகிறதே, இந்த அதிசய உஷ்ண அளவு கருவி எப்படி வேலை செய்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டாமா?

உலோகங்களுக்கு உள்ள மின்சாரப் பண்பு ஒன்றை முதலில் கவனிப்போம். படத்தைப் பாருங்கள். ஓர் இரும்புக் கம்பி இருக்கிறது. அதன் இரண்டு முனைகளிலும் இரண்டு செப்புக் கம்பிகளைப் பொருத்தியிருக்கிறது. அந்தச் செப்புக் கம்பிகள் இரண்டையும் 'கால்வனோமீட்டர்' என்ற நுட்பமான மின்சார அளவு கருவி ஒன்றுடன் பொருத்தியிருக்கிறது.

ஆமாம், இங்கே எதற்கு மின்சார அளவு கருவி? பாட்டரி, டைனமோ எதுவும் இல்லையே; மின்சாரம் எங்கே வந்தது? - இப்படி நீங்கள் சந்தேகப்படலாம். அதுதான் வேடிக்கை. செப்பும் இரும்பும் இணைந்த இணைப்புக்கள் இரண்டு இருக்கின்றன. இல்லையா? இந்த இணைப்புக்களின் சீதோஷ்ண நிலை ஒன்றுக்கொன்று மாறுபடும்போதெல்லாம் இந்தக் கம்பிகளின் வழியே மின்சாரம் ஓட ஆரம்பித்து விடும்.

இந்த இணைப்புக்களில் ஒன்றை - 'ஏ' என்பதை -, உருகும் பனிக் கட்டியில் அமிழ்த்தி வைப்போம். அப்போது அதன் சீதோஷ்ண நிலை, பூஜ்யம் டிகிரி ஸெண்டிகிரேடு, அதாவது 32 டிகிரி ஃபாரன்ஹீட் ஆக இருக்கும். 'பி' என்ற மற்ற இணைப்பைத் தீயில் காட்டி மேலும் மேலும் சூடு ஏற்றிக் கொண்டேயிருந்தால், மின்சாரம் பாயும். அதைக் 'கால்வனோமீட்ட'ரின் முள் காட்டும். 'பி' இணைப்பு 288 டிகிரி ஸெண்டிகிரேடு உஷ்ணத்தை எட்டும்போது, இந்த மின்சாரத்தின் அளவு உச்ச நிலையை அடையும்; பிறகு, மெல்ல மெல்ல இது குறைந்துகொண்டே வரும். 'பி' இணைப்பு 576 டிகிரி ஸெண்டிகிரேடு உஷ்ணத்தை எட்டும்போது, இந்த மின்சாரம் மறு திசையில் திரும்பி ஓடத் தொடங்கும். அப்போது கம்பிகளே உருகிச் சிதைந்து போகும். இதை 'உஷ்ண மின்சார விளைவு' (தெர்மோ - எலெக்ட்ரிக் எஃபெக்ட்) என்று சொல்லுகிறார்கள். இதைக் கண்டு பிடித்தவரின் பெயரை ஒட்டி 'ஸீபெக் எஃபெக்ட்' என்று சொல்வதும் உண்டு. இரண்டு வித உலோகக் கம்பிகளை இணைத்தோமே, இதற்கு 'உஷ்ண - மின்சார - ஜோடி' (தெர்மோ-எலெக்ட்ரிக் - கப்பிள்) என்று பெயர்.

இந்த 'உஷ்ண - மின்சார - ஜோடி'யின் ஒரு முனையை எட்ட

விருந்து வரும் வெப்பம் தாக்கும்படியும், மறுமுனையைக் குளிர்ந்த நிலையிலும் வைத்துவிட்டால், இரண்டு முனைகளின் சீதோஷ்ண நிலைகளும் ஒன்றுக்கொன்று மாறுபடும்; அதனால் மின்சாரம் பாயத் தொடங்கும். இந்த மின்சாரம் நாம் நினைக்க முடியாத அவ்வளவு அற்பமாயிருந்தாலும் பரவாயில்லை; இதை நவீன மின்சார சாதனங்களின் மூலம் பலமடங்கு பெருக்கிக் கொள்ள முடியும்.

உதாரணமாக, நம் ரேடியோப் பெட்டிகள் இந்த மாதிரி வேலையைத்தான் செய்கின்றன. எங்கிருந்தோ வரும் மின் - காந்த (எலெக்ட்ரோ - மாக்னட்) அலைகளால் சிறிது மின்சாரம் நம் ரேடியோ பெட்டியின் ஒரு கம்பியில் தோன்றுகிறது. அதில் நம் வீட்டில் உள்ள மின்சாரத்தைக் கலந்து பல மடங்கு பெருக்கிக் கொள்ளுகிறோம். நம் ரேடியோ பேசுவது, பாடுவது எல்லாம் இதனால்தான். இதே போல, எங்கிருந்தோ வரும் சொற்ப உஷ்ணத்தினால், நம் உஷ்ண - மின்சார - ஜோடிகளில் தோன்றும் சிறிது மின்சாரத்தைப் பல மடங்காகப் பெருக்கிக்கொண்டு, அதன் உதவியால் தூரத்தே உள்ள பொருளின் உஷ்ண நிலையை நிபுணர்கள் கணக்கிட்டுவிடுகிறார்கள்.

பல ஜோடி செப்பு - இரும்புக் கம்பிகளை இணைத்து இவ்விதம் செய்யும் கருவிக்குத் 'தெர்மோ - பைல்' (உஷ்ண - மின்சார அடுக்கு) என்று பெயர். அடுக்கில் தோன்றும் மின்சாரம் அதிகமாயிருக்கும். இந்தத் 'தெர்மோ - பைல்' என்ற கருவி, ஏதோ மாயாஜாலம் புரியும் ஒரு மந்திரக்கோல்போல் உங்களுக்குத் தோன்றவில்லையா?

வக்கீல் ஃபீஸ்

இரண்டு குடியானவர்களுக்குள் பிரமாதமான நிலத் தகராறு வந்தது. கோர்ட்டுக்குப் போவதைத் தவிர வேறு வழியில்லை.

ஒரு குடியானவன் சட்ட நிபுணரைத் தேடிச் சென்றான். "வியாஜ்யம் தொடுக்க ஏதாவது இடமிருந்தால் தான், உங்கள் ஆலோசனைக்குப் பணம் கொடுப்பேன். சம்மதமா?" என்று கேட்டான்.

நிபுணர், "சரி" என்றார்.

விவகாரத்தை விவரித்து முடித்தான் குடியானவன்.

"பேஷ்! எதிரிக்கு இந்த நிலத்தில் கால் வைக்கக்கூட இடமில்லை. நான் யோசனை சொன்னதற்குக் கட்டணம் 10 டாலர். நீங்கள் சொன்னால், நான் உடனே போய்ச் சரியான லாயர் பிடித்துத் தருகிறேன்" என்றார் நிபுணர்.

"சரிதான், போங்கள். அதெல்லாம் தேவையில்லை. நான் இத்தனை நாழிகையும் உங்களிடம் சொன்னது என் கட்சி அல்ல; எதிரியின் கட்சி ஆச்சே!" என்று சொல்லி நகர்ந்தான் குடியானவன்.

—ஃப்ரெங் மில்லர்

சீமாட்டி பேட்டி

'ராஷ்மி'

பிரிட்டிஷ் ஆட்சி நடந்த காலத்திலிருந்து, இந்திய சர்க்காரில் ஸ்தானிகர் பதவிகள் வகித்து வெளி நாடுகளில் சுற்றுப் பிரயாணங்கள் செய்து பல இடங்களில் பழகிய பிரமுகர் ஸ்ரீமான் பாஜ்பேய். அவருடைய மனைவியும் அவரோடு இப்படிச் சென்று வந்து நிறைய அநுபவம் பெற்றிருக்கிறார். அவரைப் பேட்டி கண்டபோது, நம் தென் இந்தியப் பெண்களை அவர் பாராட்டியிருக்கிறார்.

தூல்லிய வெண்மையான சேலை உடுத்து, அங்கங்கே சற்று நரைத்த கூந்தலைப் 'பிச்சோடா' போட்டுக்கொண்டு, அகன்ற நெற்றியில் குங்குமம் பொலிய, உயரமாகவும் கம்பீரமாகவும் ஒரு பாட்டியம்மாள் தம் கணவர், மூன்று பிள்ளைகள், நாலு பெண்கள், ஒன்பது பேரன் பேத்திமார் சூழ அமர்ந்திருக்கும் காட்சியைப் பார்த்திருக்கிறீர்களா? அதுதான் பம்பாய் கவர்னர் பாஜ்பேய் அவர்களின் குடும்பம்.

கடற்கரைக்கு எதிரே இருந்த அந்த அழகிய மாளிகையில் அந்நியோந்நியமாக வாழும் அவ்வளவு பெரிய குடும்பம் இருந்திருக்கும் என்று நான் முதலில் எண்ணவேயில்லை. ஆனால் ஸ்ரீமதி பாஜ்பேய் அவர்களை நான் பார்க்கப் போயிருந்தபோது, பிள்ளை, பெண்களெல்லாரும் அவரவர் குடும்பத்தைக் கவனிக்க எங்கெங்கோ புறப்பட்டுப் போய்விட்டார்கள். இரண்டொரு பேரக் குழந்தைகளை மட்டும் தாத்தா பாட்டியோடு கொஞ்சிக்கொண்டிருக்கும்படி விட்டுச் சென்றிருந்தார்கள். ஸ்ரீமதி பாஜ்பேய் அவர்களைப் பார்த்ததும், "பழைய இந்து ரீதியில் எளிமையாக வாழும் இந்த அம்மாளா தம் புருஷருடன் ஐரோப்பா, அமெரிக்காவுக்கெல்லாம் பிரயாணம் செய்திருக்கிறார்!" என்று ஆச்சரியப்பட்டேன்.

தம் சொந்த ஊர் லக்னோ என்றும், பத்து வயதிலேயே தமக்கு விவாகம் நடந்துவிட்டதாகவும் அந்த அம்மாள் சொன்னார். 18 வயதில் குடும்பப் பொறுப்பை ஏற்று நடத்த ஆரம்பித்தாராம். அப்புறம் கணவரையும் குழந்தை குட்டிகளையும் வீட்டையும் கவனித்துக் கொள்வதிலேயே பொழுதைப் போக்கி வந்தாராம். "என்னைப் போலவேதான் எல்லாரும் இருந்தாக வேண்டும் என்று நான் சொல்லவில்லை. என்னைப் பொறுத்தவரையில்தான் சொல்லுகிறேன். என் புருஷருடைய மனசுக்கு ஒத்தபடி அமைதியாகக் குடித்தனம் நடத்தி வந்தேன்; அவ்வளவுதான். அதனால் அவரும் இவ்வளவு தூரம்

காப்பிரைட்; ஃபோர்டு அண்ட் பாஸ்டைம் (ஆங்கிலம்; 28-8-'53), சென்னை.

முன்னுக்கு வந்திருக்கிறார்'' என்றார் சகஜமாகவே.

“அது இருக்கட்டும். வெளி நாடுகளில் பத்துப் பேரோடு பழகும்போது எப்படி இருந்து சமாளித்தீர்கள்?'' என்று கேட்டேன். இந்தியப் பெண்கள் என்று சொல்லிக்கொண்டு வெளி நாடுகளில் பிரயாணம் செய்த சில விநோதப் பிரகிருதிகளைப்பற்றிய கவனம் அப்போது எனக்கு வந்தது.

அந்த அம்மாள் சொன்னாள்:

“வெளி நாட்டில் சுலபமாக நாம் பழகிவிடலாம். அங்கே இருக்கும் பெண்கள் நம் பெண்களை எப்படிக் கொண்டாடுகிறார்கள் தெரியுமா? நம் பெண்களின் பழக்க வழக்கம், அடக்க ஒடுக்கம், பெண்மைக்குரிய நாணம், குடும்ப ரீதி, கலாசாரம் இவைகளையெல்லாம் பார்த்து அவர்கள் நம்மைப் பிரமாதமாகப் பாராட்டுகிறார்கள். அவர்களுக்கும் குடும்பமென்றால் பற்றுதல்தான். நம் நாட்டுப் பெண்கள் மேல்நாட்டுப் படிப்புப் படிக்கட்டும்; வேண்டாமென்று சொல்லவில்லை. குடும்ப விஷயத்தில் மேல்நாட்டுப் பெண்களைப்போல் இராமல் நம் பெண்கள் அசிரத்தையாக இருப்பது எனக்குக் கஷ்டமாகத்தான் இருக்கிறது. இந்தக் காலத்துப் பெண்களே இப்படித்தான் சிறு பிள்ளைத்தனமாக வேடிக்கை விளையாட்டிலேயே பொழுதைப் போக்கிக்கொண்டிருக்கிறார்கள். குடும்ப பாசமே இருப்பதில்லை அவர்களுக்கு.

“நான் பழைய காலத்து மனுஷியாக இருந்தாலும் இந்தக் காலத்துப் பெண்கள் மிகவும் சிரத்தையோடு சமூக ஊழியர்களாகத் தொண்டு செய்வதைப் பார்த்திருக்கிறேன். அதுவரை எனக்குத் திருப்திதான். பம்பாயில் சுற்றி அடிக்கடி இதையெல்லாம் கவனித்திருக்கிறேன். இனிமேல் நானேகூட அவர்களோடு இந்தத் தொண்டில் ஈடுபடலாம் என்று பார்க்கிறேன். எங்கள் பிள்ளை, பெண்களெல்லாரும் இப்போது பெரியவர்களாகி விட்டதால் தாராளமாக நான் இதில் ஈடுபடலாம். சமையல் காரியம், வீட்டுக் கறிகாய்த் தோட்டத்தைக் கவனித்துக்கொள்வது, தையல் வேலை எதுவும் இனிமேல் இல்லை. பிரான்ஸிலும் அமெரிக்காவிலும் இருந்தபோது சில பெரிய ஹோட்டல்களில் நம் சமையல் தினுசுகளைச் செய்து காட்டியிருக்கிறேன். அவர்களும் அதையெல்லாம் கற்றுக்கொண்டிருக்கிறார்கள். நம்மைப்போல் இராமல் கஷ்டப்படும் பெண்களுக்கு எவ்வளவோ ஒத்தாசை செய்ய வேண்டுமென்றுதான் எனக்கு ஆசை. ஆனால் உடம்புதான் சரியாக இல்லை. இருந்தாலும் எப்படியாவது அதையும் தேற்றிக்கொண்டு இந்தத் தொண்டில் இறங்கத்தான் போகிறேன்.''

பிறகு நான், “பம்பாயில் மொத்தத்தில் எப்படி மனுஷர்கள் பழகுகிறார்கள்?'' என்று கேட்டேன்.

“தமாஷாகத்தான் பொழுது போகிறது. என்னைக் கேட்டால் நம் பெண்கள் என்னதான் தற்காலரீதியாக இருந்தாலும் மேல்நாட்டைப் பின்பற்றுவது சரி இல்லை. வெளிநாட்டில் சில இடங்களில் நம் பெண்கள் எந்தச் சந்தர்ப்பத்தில் என்ன உடுப்பு உடுக்கவேண்டும் என்று தெரியாமல் கண்டபடி மேல்நாட்டு உடுப்பை உபயோகித்ததைப் பார்த்திருக்கிறேன். அந்தக் கண்ணராவி

சகிக்கவில்லை. இப்படி இவர்கள் தலைமயிரை வெட்டிக்கொண்டு சேலை உடுத்துவதையும், நம் ரீதியாக வாரிவிட்டுக்கொண்டு வெள்ளைக்கார ரீதியாக உடுத்துவதையும் பார்க்கவேண்டுமே! அந்த ஊர் ஜனங்கள் இதைப் பார்த்துத் திகைத்துத்தான் போயிருப்பார்கள்.

"ஆனால் ஒன்று: மதராஸிப் பெண்களைக் கண்டால் இந்த விஷயத்தில் எனக்குப் பெருமையாக இருக்கிறது. என்னதான் படித்திருந்தாலும், சமூகத் தொண்டில் ஈடுபட்டாலும், தற்கால ரீதியாக இருந்தாலும் சரி; அவர்கள் உணவு, உடை, வாழ்க்கை முறை இவற்றில் தங்கள் பழக்க வழக்கத்தை விடாமல் இருக்கிறார்கள். அமெரிக்காவில்கூட இப்படி அவர்கள் இருந்தது அங்கே எல்லாருக்குமே பிடித்துத்தான் இருந்தது. ஏதோ முகஸ்துதிக்காகச் சொல்கிறேன் என்று எண்ணுதீர்கள். தென்னிந்தியாவிலேயே பெண்கள் இப்படித்தான் இருக்கிறார்கள். எனக்கென்னவோ அவர்களிடத்தில் ஒரு தனி மதிப்பு" என்றார்.

அங்கிருந்து கிளம்பும்போது, 'இவர் சொன்னதுபோல் நம் தென்னிந்தியப் பெண்மணிகள் எந்நாளும் தங்கள் பழைய பண்பை விடாமல் இருந்து வரவேண்டுமே' என்று தான் எனக்குப் பட்டது.

சங்கீத நாடகம்

ஆப்பெரா (சங்கீத நாடகம்) என்பது என்ன? ஒரு மனிதனின் முதுகிலே மற்றொருவன் குத்த, குத்தப்பட்ட மனிதன் ரத்தம் சொரிவதை விட்டு எங்கே சங்கீதம் பொழியத் தொடங்குகிறானே அதுதான் ஆப்பெரா.

—ஜாடி கனோவா

குப்பைத் தொட்டியிலே....

அமெரிக்காவில் ஒரு பெண் தங்கள் வீட்டு ஜன்னலின் கம்பிக் கதவைத் திறந்து வெளியே தலையை நீட்டிச் சுவரைச் சுத்தம் செய்துகொண்டிருந்தாள். அப்போது அதிகமாய்ச் சாய்ந்ததில் கால் தவறி, வெளியே குப்பைத் தொட்டியில் வந்து விழுந்துவிட்டாள்.

வீதியிலே போய்க்கொண்டிருந்த ஒரு சீனக் கனவான் இதைக் கண்டதும் தமக்குத் தாமே, "இந்த அமெரிக்கன்களே எதையும் வீணடிக்கிறானுக. இந்தப் பெண்பிள்ளை இன்னும் பத்து வருஷத்துக்கு உபயோகப்படக்கூடியவள்" என்று சொல்லிக்கொண்டார்.

'மகளிர் டைஜஸ்ட்'

முதலாவது வேண்டியது

மனிதனுக்கு வேண்டிய முதலாவது குணம் தைரியந்தான். ஏனென்றால், அதுவே மற்றக் குணங்களுக்கெல்லாம் உத்தரவாதம் அளிக்கக் கூடியது.

—வின்ஸ்டன் சர்ச்சில்

ஊர்வசி - கவியரசர் ரவீந்திரர்

★

இவள் புராண இதிஹாஸ மங்கை தான். ஆனால், கவியரசர் இவளை வர்ணிக்கும் வர்ணனையில் தனி யழகு பொலிகிறது. மூலக் கவிதை யின் சுவை குன்ருத உரைநடையில் இந்த மொழிபெயர்ப்பைச் செய்து தந்திருப்பவர் த. நா. ஸேனுபதி.

நீ தாயும் அல்ல; கன்னிகையும் அல்ல; மணப் பெண்ணும் அல்ல. வடிவழகி நீ. நந்தனச் சோலையிலே வாழும் ஊர்வசியே! மாடுகள் வீடு திரும்பும் நேரம் பொன்னுடை போர்த்து அந்தி சாயும்போது, நீ எந்த வீட்டிலும் மாலை விளக்கு ஏற்றி வைக்க வேண்டியதில்லை. திகிலும் மகிழ்ச்சியும் கொண்ட இரு வேறு மன இயல்புடன் தயங்கித் தயங்கி, உள்ளம் துடிக்க, கண்ணிமை தாழ, மெல்லிய அதரத்தில் புன்னகை தவழ, நாணத்துடன் படுக்கையறையில் நிச்சப்தமான நடுநிசியில் நீ நுழைய வேண்டியது மில்லை. உஷக் காலத்தின் தோற்றம் போல், தலையணி ஏதும் இன்றி விளங்குகிருய். நீ எதற்கும் நாணிடாமல் தோன்றி டும் அழகி.

காம்பின்றிக் காணும் மலர் போல் நீயாகவே தோன்றித் திகழ் கிருய்! எப்போது நீ பூத்தாயோ, சொல்வாய்? ஊர்வசி! வலது

காப்பிரைட்: சித்ரா (வங்காளிக்

கையில் அமிர்த கலசமும் இடது கையில் விஷ பாத்திரமும் ஏந்தி, பழையதோர் இளவேனிற் காலையில் கடைந்த கடலினின்றும் எழுந்தாய் நீ. அலைகள் மோதிடும் பெருங்கடல், மந்திரத்தால் அடங்கிய பாம்புபோல் உன் காலடியில் கிடந்தது. லட்சக்கணக்கான படங்களாகிய அலைகள் உனக்கு வணக்கம் செய்தன. குந்த மலரைப் போல் வெண்மையாய்ப் பிறந்த மேனியுடன் ஒளிர்பவளே! சுரேந்திரன் போற்றிடும் நங்கையே! குறை கூறுவதற்கு அரியவளே!

என்றாவது முகிழ்க்காத அறியாப் பாலிகையாக இருந்தாயோ! என்றும் இளமை பொலியும் நங்கையே! இருண்டு ஆழ்ந்த கடலடியில் யார் அறையிலாவது அமர்ந்து தனியே மாணிக்கமும் முத்தும் வைத்துக்கொண்டு குழந்தைப் பருவத்தில் விளையாடினாயோ? மணி விளக்கு ஒளிரும் அறையில், கடலின் அலை தாலாட்டும் இன்னிசையில், களங்கமற்ற இன்முறுவல் பூக்கப் பவழத் தொட்டிலில் யார் மடியில் தூங்கினாய்? விழித்து எழுந்ததுமே உலகில் இளமை ததும்பி முழு மலர்ச்சியுடன் திகழ்ந்தவளே!

யுகயுகாந்தரமாக நீ அகிலம் முழுவதற்குமே பிரியமானவளாக விளங்குகிறாய். அபூர்வ சோபை உடைய ஊர்வசியே! முனிவர்களும் தம் தியானத்தைக் கலைத்துத் தம் தவப்பயனை உன் காலடியில் வைத்தனரே! உன் விழிக்கு இலக்கானவுடனே மூவுலகமும் இளமையின் சஞ்சலம் கொண்டு விளங்குகிறதே! மயக்கும் உன் மதுமணத்தை, கண் இழந்த காற்று நாற்புறமும் கொண்டு செல்கிறது. தேனுண்டு களித்த வண்டுபோல் மயங்கிய கவியோ தங்கு தடையில்லாமல் இசை வெள்ளம் பொழி

கவிதைத் தொகுப்பு); பிரசுரித்தவர்: விசுவபாரதி, கல்கத்தா.

கின்றான். உன் சதங்கை ஒலியி னால் மனத்தில் துன்ப மூட்டு கிறாயே! மின்னலைப் போல் ஒளிர் பவளே!

தேவ சபையில் நடனமாடும் போது அனைவர் உள்ளத்திலும் உவகை ஏற்படும்படி செய்கிறாய். சஞ்சலமும் அலைபோல் அசைவும் கொண்ட ஊர்வசியே! நீ ஆடும் நாட்டியத்திலுள்ள சந்தத்துக்கு ஏற்பக் கடல் அலைகள் கொந் தளித்து அசைகின்றன. நிலத்தில் பசும் பயிரும் அதனால் அசைந்தாடு கிறது. உன் மார்பகத்து ஆரத்தி லிருந்து கொப்பூழின் மேல் தார கைகள் சிதறி விழுகின்றன. திடீ ரென்று ஆண்களின் உள்ளத்தைக் கவர்ந்து அவர்களை நீ மெய்ம் மறக்கச் செய்கிறாய். அவர்களின் உள்ளத்தில் ரத்தம் துள்ளி எழு கிறது. திடீரென்று தொடு வானத்தில் உன் மேகலை சிதறித் தெறிக்கிறது. ஒளிவு மறை வின்றித் திகழ்பவளே!

விண்ணகத்து உதயகிரியில் வடிவுடையவளாய்த் திகழும் ஊர் வசியே! நீ புவன மோகினி! உலகம் உன்னை நினைந்து வடிக்கும் கண்ணீர் உன் உடலைக் கழுவிட, மூவுலக மக்களும் தம் இதய ரத்தத்தால் உன் காலில் செம் பஞ்சிடுகிறார்கள். விரித்த கூந்த லுடன் விளங்குபவளே! ஆடை யின்றித் திகழும் அழகியே! அகிலமெங்கும் மணம் திகழச் செய்து தாமரை மேல் மெல்லிய பாதத்தின் பாரந்தனை வைத் திருக்கிறாய். அகிலத்தில் வாழ் வோரின் மானச சொர்க்கத்தில் எல்லையற்ற வர்ணஜாலம் எழுப்பு பவளே! கனவுலகில் கூடிக் குலவும் தோழியே!

அதோ உனக்காக வானும் நிலனும் கதறி அழும் ஒலி திக் கெங்கும் கேட்கிறது. கருணை யற்றுக் காது கொடாமல் இருக் கும் ஊர்வசியே! பழைய யுகம் மீண்டும் வருமா? காண இயலாத ஆழத்திலிருந்து நனைந்த கூந்த லுடன் மீண்டும் தோன்றுவாயோ? முதல் நாள் காலை தோன்றிய உடலெழிலுடன் மீண்டும் வரு வாயோ? அகிலத்தில் உள்ளோர் உன்னை நோக்கி வடித்திடும் கண் ணீர்த் துளி பட்டு உன் உடல் முழுவதும் நடுங்கிடுமே. திடீ ரென்று அது வெள்ளமாகி வந்த பெருங்கடல் அபூர்வ இசை யுடன் ஒலிக்குமன்றோ?

மீண்டும்வாராதோ?வாராதோ அந்தப் பொன்னான நாள்? அது போனது போனதுதானோ? அஸ்த கிரியில் வசிக்கும் ஊர்வசியே! அதனால்தான் இன்று உலகிலே இளவேனிற் காலத்தில், இன்பப் பெருமூச்சுக் கிடையே பிரிவுப் பெருமூச்சும் கலந்து வருகிறதோ? முழு மதி வீசும் இரவில் பத்துத் திசையும் மகிழ்ச்சி பொங்கி விளங்க, எங்கோ தொலைவி லிருந்து பழைய நினைவு தோன் றத் துன்பம் தரும் குழலோசை கேட்கிறதே! அதனால் கண்ணீர் தாரை தாரையாக வழிகிறது. ஆயினும், உள்ளத்தின் அந்த அழுகையிடையிலும் நம்பிக்கை ஒன்று எழுகிறது, எவருக்கும் கட்டுப்படாத நங்கையே!

விஞ்ஞானிகளே ஜோஸ்யம் சொல்லத் தொடங்கிவிட்டார்களே! இதென்ன?

வருவதைச் சொல்லலாம்

டாக்டர் ஆர்தர் ஆர். எஸ். ராய்

எதிர் காலத்திலே என்ன நடக்கப் போகிறது? இதை அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக, குறிகாரர், ஜோஸ்யர் சாமியாடிகள், மந்திரவாதிகள் இப்படிப் பல பேருக்கு இதுவரையில் நாம் ஏராளமாய்ப் பணம் கொடுத்துக்கொண்டு வந்திருக்கிறோம். 'இதெல்லாம் சுத்தப் புரளி; பணம் பறிக்கும் வேலை' என்று உலகெங்குமே விஞ்ஞானிகள் வெகு காலமாகச் சொல்லிவந்தார்கள். இப்போது அந்த விஞ்ஞானிகளே இந்த வேலையை - எதிர்கால பலன் சொல்வதை - மேற்கொண்டு விட்டார்கள். ஆனால், எல்லாரும் புரிந்துகொள்ளக் கூடிய முறையில் சுலபமாய் அவர்கள் இப்படிப் பலன் சொல்லுவதில்லை; கேட்பவருக்குத் தலைவலி எடுக்கச் செய்யும் பாஷையில் சுற்றி வளைத்து எப்படியோ சொல்லுகிறார்கள். எதிர்கால நிகழ்ச்சியை யெல்லாம் அறிந்துகொள்ளும் இந்த வித்தைக்கு, 'வட்டங்களின் விஞ்ஞானம்' (ஸைன்ஸ் அவ் ஸைக்கிள்ஸ்) என்று அவர்கள் பெயரிட்டிருக்கிறார்கள்.

'பூலோகத்தில் எதுவுமே புதிசாய் நிகழ்வதில்லை; சரித்திரம் திரும்பத் திரும்ப நிகழ்கிறது' என்று இந்தப் பெரிய விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு தடவை மீண்டும் மீண்டும் நிகழ்ந்து கொண்டே யிருக்கிறதாம். அது அதற்குரிய இந்த இடைக்காலத்தின் அளவு என்ன என்பதை நாம் கண்டுபிடித்துவிட்டால், எந்த நிகழ்ச்சி எப்போது நிகழும் என்பதைச் சுலபமாய்ச் சொல்லிவிடலாமாம். இந்த 'நிகழ்ச்சி வட்ட ஆராய்ச்சி'யை நடத்துவதற்காக 1941-இல் 'ஃபவுண்டேஷன் ஃபார் ஸ்டடி அவ் ஸைக்கிள்ஸ்' என்ற ஒரு ஸ்தாபனத்தை நியூ யார்க் நகரில் அமைத்திருக்கிறார்கள். அது லாபம் சம்பாதிக்கும் நோக்கமில்லாதது. சர்வதேசக் கமிட்டி ஒன்று அதற்கு இருக்கிறது. அந்தக் கமிட்டியில் பல நாட்டு விஞ்ஞானிகளும் வியாபாரிகளும் அங்கம்வகிக்கிறார்கள். இந்தவிஞ்ஞான ஆராய்ச்சி, குழந்தைப் பருவத்தில் தான் இருக்கிறது. அப்படி யிருந்தும், உலகின் பல பாகங்களில் மூவாயிரம் விஞ்ஞானிகள் இந்த ஸ்தாபனத்துக்காக 'நிகழ்ச்சி வட்ட' ஆராய்ச்சிகளை நடத்தி வருகிறார்கள். ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத பல துறைகளில் காணப்படும் 'நிகழ்ச்சி வட்ட'ங்களை யெல்லாம் சேகரித்து எல்லாருக்கும் விநியோகிக்கும் வேலையை இந்த ஸ்தாபனம் மேற்கொண்டுள்ளது.

'நிகழ்ச்சி வட்டங்கள்' என்றால் என்ன என்று இனிப் பார்ப்போம்.

மூலம்: கல்கத்தா முனிஸிபல் கெஜட் (ஆங்கிலம்), கல்கத்தா.

இந்தக் கருத்துப் புதியதல்ல. பதினைந்து வருஷத்துக்கு ஒரு தடவை காலநிலை ஒரே விதமாக இருக்கிறது என்ற ஆச்சரியமான உண்மையைக் குறித்து ஐம்பது வருஷங்களுக்கு முன் பல நாடுகளில் பல பேர் கட்டுரைகள் எழுதினார்கள். ஆனால், இந்த யூகம் சரிதானா என்பதைத் திருப்திகரமாய் நிர்ணயம் செய்துகொள்ள, அநேகம் பேருக்கு உடனே முடியவில்லை; அவர்கள் வெகு காலம் காத்திருக்க வேண்டியதாயிற்று. ஞாபகத்தோடு அப்படிக் காத்திருந்தவர்கள், அந்த யூகம் முற்றும் சரியல்ல என்று கண்டார்கள். ஆனால், கால நிலைக்குச் சம்பந்தமுள்ள அநேக அம்சங்களை அந்தக் காலத்தவர் தங்கள் கணக்கில் சேர்த்துக் கொள்ளாததாலேயே இந்தப் பிசகு ஏற்பட்டதாம். இப்போதோ விமானப் போக்குவரத்துக்கும் யுத்த காரியங்களுக்கும் உதவியாகக் 'காலநிலை ஆராய்ச்சி நிலயங்கள்' (மீட்டியரலாஜிக்கல் ஸ்டேஷன்ஸ்) உலகெங்கும் ஏற்பட்டிருக்கின்றன. கால நிலையின் 'நிகழ்ச்சி வட்டங்கள்' சம்பந்தப்பட்ட பல வேறு அம்சங்களை அந்த நிலயங்களிலெல்லாம் ஆராய்ந்து வருகிறார்கள். கால நிலையை முன்னறிவிக்கும் காரியம் இப்போது வெறும் புரளியாகவோ அநிச்சயமான ஜோஸ்யமாகவோ இல்லை. இப்போதெல்லாம் 'கால நிலை' முன்னறிவிப்பில் நூற்றுக்குத் தொண்ணூற்றேழு பங்கு சரியாயிருக்கிறது. விமானப் போக்குவரத்துக்களின் பத்திரத்துக்கும் யுத்த காரியங்களுக்கும் இது போதும்.

இதுவே கிடக்கட்டும். நம் முன்னோர்களும் நாமும் மிகச் சாதாரணமான - ஆனால் முக்கியமான - இரண்டு 'நிகழ்ச்சி வட்ட'ங்களை எத்தனையோ நூற்றாண்டுகளாய்ப் பயன்படுத்தி வருகிறோம்: ஒன்று, 'நாள் வட்டம்'; மற்றது, 'வருஷ வட்டம்.' 'நாள் வட்டம்' நமக்குத் தெரிந்திருப்பதால், தினந்தோறும் நாம் செய்யவேண்டிய வேலைகளைத் திட்டமிட்டுக் கொள்கிறோம். எவ்வளவு நேரம் சூரிய வெளிச்சம் இருக்கும் என்பது நமக்குக் கணக்காய்த் தெரியும்; இருள் எவ்வளவு நேரம் இருக்கும் என்பதும் நமக்குத் தெரியும். இவைகளை அநுசரித்து, நம் வேலைகளையும் ஓய்வையும் திட்டம் செய்துகொள்கிறோம்.

விவசாயிகளும் வேறு சிலரும் வருஷ வட்டத்தை அறிந்திருக்கிறார்கள். பருவக் காலங்கள் மாறி வருவதும் ஒவ்வொரு பருவமும் எவ்வளவு காலம் நீடிக்கும் என்பதும் விவசாயிகளுக்குத் தெரியும். இப்படித் தெரிந்திருப்பதால், எவ்வெப்போது உழுவது, விதைப்பது, அறுவடை செய்வது என்ற விவரங்களை அவர்கள் நிர்ணயித்துக் கொள்கிறார்கள்.

வியாதிகளை ஆராய்ந்ததில், அநேகமாக எல்லா வியாதிகளுமே மாதத்துக்கு மாதம், வருஷத்துக்கு வருஷம், முக்கியமான வேறுபாடு அடைகின்றன என்று புலனாயிருக்கிறது. பியுபானிக் பிளேக் எந்தக் காலத்தில் கடுமையாய்ப் பரவும் என்பது நிஜாம் சர்க்காரின் சுகாதார அதிகாரிகளுக்குத் தெரியும். அப்போது அதைச் சமாளிப்பதற்காக, முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகளை அவர்கள் செய்து வைக்கிறார்கள். குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு தடவை வழக்கமாகச் சில வியாதி

கள் கல்கத்தா நகரில் மும்முரமாகின்றன. அவைகளைச் சமாளிப்பதற்கோ தடுப்பதற்கோ அந்த நகர முனிஸிபாலிட்டியின் டாக்டர்கள் முன்னதாகவே தயாராகி விடுகிறார்கள். இன்ன சமயத்தில் காலரா வரும் என்று அவர்கள் எதிர்பார்ப்பதாக வைத்துக் கொள்வோம். நைந்த அல்லது அழுகிய பழங்கள், காய் கறிகள் இவற்றின் விற்பனையைக் கட்டுப்படுத்துவார்கள்; ஓட்டல்களைக் கண்காணிப்பார்கள். பொதுக் கக்கூஸ்கள் சுத்தமாயிருக்கும்படி பார்த்துக்கொள்வார்கள்.

பத்தப் பத்து வருஷங்களாகப் பல பத்து வருஷங்களை நிபுணர்கள் கவனித்து வந்திருக்கிறார்கள். அதிலிருந்து, எத்தனையோ நிகழ்ச்சிகள் குறிப்பிட்ட வட்டங்களாக நிகழ்வதைக் கண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு நிகழ்ச்சி வட்டத்திலும் உச்ச நிலை, நீச நிலை இரண்டும் தென்படுகின்றன. குறிப்பிட்ட ஒரு விஷயம்பற்றிய நிகழ்ச்சி வட்டத்தைப் போதிய தடவைகள் திரும்பத் திரும்பக் கவனித்து, அதன் நீச, உச்சங்களைக் கணக்கிட்டு விட்டால், அந்த விஷயம் வருங்காலத்தில் எப்போது, எப்படி நிகழும் என்பதை முன்கூட்டியே சொல்லி விட முடியும்.

வாழ்க்கை சம்பந்தப்பட்ட அநேக விஷயங்கள் இப்படித்தான் நிகழ்ச்சி வட்டங்களுக்கு உட்பட்டு நிகழ்கின்றன என்று பல விஞ்ஞானிகளும் புத்திமான்களும் இப்போது நம்புகிறார்கள். ஐந்நூற்றுக்கு மேற்பட்ட வியாபார, பொருளாதாரப் புள்ளி விவரங்களைப் பல பேர் ஆராய்ந்து பார்த்தார்கள். வியாபாரம் சம்பந்தமான நிகழ்ச்சி வட்டம் பெரும்பாலும் நாற்பத்தொரு மாதங்களைக் கொண்டிருப்பதாக அதிலிருந்து புலனாகிறது. 1945-46-இல் வியாபாரம் மிகவும் செழிப்பாக நடந்தால், 1953-இறுதியில்தான் மீண்டும் ஏற்றம் தொடங்கும். குறிப்பிட்ட ஒரு வியாபாரத்தின் நிகழ்ச்சி வட்டக் கால அளவு சற்று முன் பின்னாக இருக்கலாம். அந்த வியாபாரம் சம்பந்தமான புள்ளி விவரங்களையும் கணக்குகளையும் ஆராய்ந்து பார்த்தால், அது பற்றிய நிகழ்ச்சி வட்டத்தின் கால அளவை நிர்ணயித்துவிட முடியும்.

இந்திய அரசியல் சம்பந்தமான நிகழ்ச்சி வட்டங்களின் கால அளவு சுமார் நாற்பத்தெட்டு மாதங்கள் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். இன்று தோன்றும் ஓர் அரசியல் கருத்து, இரண்டு வருஷங்களில் உச்ச நிலையை அடைந்து விடுகிறதாம்; பிறகு இறக்கம் காணத் தொடங்கி விடுகிறதாம். உலக அரசியல் சம்பந்தமான நிகழ்ச்சி வட்டம்பற்றி ஓர் அமெரிக்கப் பத்திரிகை சொல்வது இது: "பூமியின் சீதோஷ்ணஸ்திதி, உலக சரித்திரம் இந்த இரண்டும்பற்றிக் கன்ஸாஸ் நகர யூனிவர்ஸிட்டியில் பிரம்மாண்டமான ஓர் ஆராய்ச்சி தொடங்கியிருக்கிறது. சென்ற 1,600 வருஷங்களை ஆராய்ந்து மனித நாகரிகம் சம்பந்தப்பட்ட ஆயிரக்கணக்கான புள்ளி விவரங்களை டாக்டர் ரெய்மாண்ட் வீலர் என்பவர் சேகரித்து அட்டவணைகளும் 'சார்ட்'டுகளும் தயாரித்திருக்கிறார். மனிதர்களின் செயல் துறைகள் அனைத்

திலும் சில காலம் லட்சியமும் சில காலம் சுயநலமும் ஆட்சி செலுத்தியிருப்பதாக, அவர் கண்டுபிடித்திருக்கிறார். இப்படி லட்சியம், சுயநலம் இரண்டின் காலமும் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு மாறும்போது, அதே மாதிரி பூமியின் சீதோஷ்ணமும் மாறியிருப்பதாக அவர் சொல்லுகிறார். இதேபோல, உலக சரித்திர வட்டங்களுக்கும் சீதோஷ்ண ஸ்திதி வட்டங்களுக்கும் சம்பந்தம் இருப்பதாக அவருக்குப் புலனாகியிருக்கிறது. அந்தச் சீதோஷ்ண ஸ்திதி மாறுதல் வட்டங்கள் 45 அல்லது 90 அல்லது 510 வருஷங்கள் கொண்டவையாக இருக்கின்றனவாம்.''

குளிர்ச்சியான நிலையிலிருந்து வெதுவெதுப்பான நிலைக்குச் சீதோஷ்ண ஸ்திதி மாறும்போது, உலக சரித்திரத்தில் லட்சியம் ஏற்றமடைகிறதாம். உஷ்ணமான நிலையிலிருந்து குளிர்ச்சியான நிலைக்குச் சீதோஷ்ண ஸ்திதி மாறும்போதோ, அரசாங்கங்கள் கவிழ்ந்து, எதேச்சாதிகாரிகள் தோன்றியிருக்கிறார்களாம்; ஜனன விகிதமும் குறைந்திருக்கிறதாம். இப்போது நிகழும் 510-வருஷ மகா நிகழ்ச்சி வட்டம் 1960-இல் மிகக் குளிர்ச்சியான நிலையை அடையப்போகிறதாம். இப்போது அரசாங்கங்கள் கவிழ்ந்துகொண்டுதான் இருக்குமாம். ஆனால், 1960-ஆம் ஆண்டில் மகத்தான புதிய புனர்நிர்மாண சகாப்தம் தொடங்கிவிடுமாம். ஜனநாயகம், இனிமையான சங்கீதம், ஒழுக்கம், பொதுமக்களின் அறிவு வளர்ச்சி, சர்வதேச நட்பு, கலைச்செல்வம் இவையெல்லாம் அப்போது புத்துயிர் பெறும் என்று டாக்டர் வீலர் நம்புகிறார். கி. பி. 2,000-ஆம் ஆண்டு தொடங்கும்போது வெதுவெதுப்பான சீதோஷ்ண ஸ்திதி ஏற்பட்டு விடுமாம். அப்போது, பழையபடி பொற்காலம் திரும்பத் தொடங்குமாம்.

இந்த ஜோஸ்யம் சரிதானா என்பதைப் பார்க்க அவ்வளவு காலம் நாம் வாழ முடிந்தால், மிகவும் ஸ்வாரஸ்யமாய்த்தான் இருக்கும். அது சாத்தியம் இல்லை. ஆயினும், இப்போதே இருக்கக்கூடாதா என்று நாம் ஆசைப்படும் அப்படிப்பட்ட ஒரு பொற் காலத்தில் நம் கொள்ளுப் பேரன்களும் பேத்திகளும் அவர்களுடைய மக்களுமாவது வாழப் போகிறார்களே என்பதை நினைத்துச் சந்தோஷப் படுவோமே!

ஓட்டல் மூட்டைப் பூச்சி

தங்க வந்தவர்: இதோ இந்த ரூம்களின் ரெஜிஸ்டரில் என்னவோ ஓடுகிறதே; இதென்ன?

ஓட்டல் குமாஸ்தா: மூட்டைப் பூச்சி, ஸார்.

தங்க வந்தவர்: இந்த ஓட்டலில் மூட்டைப் பூச்சி இருப்பதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. ஆனால், நான் எந்த ரூம் எடுத்துக்கொள்ளப் போகிறேன் என்பதைக் கவனிக்க அது வருகிறதே. இது ரொம்ப மோசம்.

—'ஸ்பார்க் லைட்', தென் ஆப்பிரிக்கா.

ஹிந்து, பௌத்தர், ஜைனர் எல்லாருக்குமே
விசேஷமான புராதன நகரம்—

புகழ் மிகுந்த வைசாலி

பி. ஸி. ராய் சௌதுரி

ஜைனர்களின் இருபத்து நாலாம் தீர்த்தங்கரர் வர்த்தமான மகாவீரர். மார்ச் 28-ஆம் தேதி அன்று அவருடைய ஜயந்தி விழா, இன்று பஸர் என்று வழங்கும் வைசாலியில் நடக்கிறது. இது இப்போது குக்கிராமம். பிஹாரிலுள்ள முஸாஃப்பர்பூர் ஜில்லாவில் இருக்கிறது.

கி. மு. 600-இல் பௌத்தம், ஜைனம் இந்த இரண்டு மதங்களும் செழித்தோங்கியிருந்த நகரம் வைசாலி. மகா பரிநிர்வாண சூத்திரம் என்ற பௌத்த உபதேசாவளியில், நாளந்தாவிலிருந்து பாடலிக் கிராமம் (பாடலீபுத்திரம்) வழியாகப் புத்தர் வைசாலிக்குச் சென்றதாக ஓர் இடத்தில் வருகிறது. அங்கே நகரமத்தியில் வழிப்போக்கர் தங்கி ஓய்வெடுத்துக்கொள்ள ஊரார் ஒரு விடுதி கட்டியிருந்தார்களாம். அப்போது மகத அரசனின் மந்திரிகளான சுநீதன், வெச்சேகரன் என்ற இரண்டு பேரும் பாடலிக் கிராமத்துக்கு அரண் கட்டிக்கொண்டிருந்தார்கள். அதைப் பார்த்ததும் புத்தர், "பாடலிக் கிராமம் பின்னால் பிரபல நகரமாகப் போகிறது. இருந்தாலும் குழப்பம், தீ விபத்து எல்லாம் நேர்ந்து, கங்கையிலிருந்து வெள்ளம் பெருக்கெடுத்தோடும்" என்றாராம்.

அப்போதே வைசாலி பெரிய நகரம். பிம்பிசாரனுடைய மகனான அஜாதசத்துரு, புத்தர் நிர்வாணமடைந்த மூன்றும் ஆண்டு வைசாலியைப் பிடித்துக்கொண்டான். அவனுக்குப் பின் நாலு அரசர்கள் அதை ஆண்டுவந்தார்கள். கடைசியில் மக்கள் புரட்சி செய்தார்கள். அதற்குப் பின் சிசுநாகன் என்பவன் அரசனானான். இவன் ராஜக்கிருகத்தை விட்டு வைசாலியைத் தலைநகராகக் கொண்டு ஆளத்தொடங்கினான். ஆனால் இவனுக்குப் பின் வந்த காலாசோகன் பாடலீபுத்திரத்தைத் தலைநகராக்கிக் கொண்டான். இதிலிருந்து, அதற்குமுன் வெகுநாள் வைசாலியே மகதத்தின் தலைநகராக விளங்கி வந்தது என்று தெரிகிறது.

புத்தரின் நெருங்கிய உறவினனும் சிஷ்யனுமான ஆனந்தனும் அவன் தாயும், பெண்களையும் பிட்சுணிகளாகச் சங்கத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று அவரைக் கேட்டுக்கொண்டது வைசாலியில்தான். புத்தரும் அதற்கு இசைந்து இங்கே முதல் முதலாகப் பெண்களைச் சங்கத்திலே சேர்த்துக்கொண்டார். இங்கேதான் அம்பபாலி என்ற நடன மாது அஜாதசத்துருவின் உத்தரவை மீறிப் புத்தரை வழிபட்டுத் தன் உயிரையே தியாகம் செய்தாள். இதைப்பற்றி எத்

மூலம்: பம்பாய்க் கிரானிக்கிள் வீக்லி (ஆங்கிலம்: 22-8-'58), பம்பாய்.

தனையோ கதைகளும் நாடகங்களும் பலர் எழுதியிருக்கிறார்கள்.

லிச்சவி ராஜவம்சத்தைச்சேர்ந்தவர்கள் வைசாலியை ஆண்டு வந்தார்கள். இவர்கள் புத்தரிடம் மிகவும் பக்தி சிரத்தை உள்ளவர்கள். வைசாலியில் இரண்டாம் பௌத்த சங்கம் கூடியபோது 700 பிட்சுக்கள் அங்கே வந்திருந்தார்கள். அப்போது பௌத்தத்தின் இரு பிரிவுகளான ஹீனயானம், மஹாயானம் இவைகளைப்பற்றி விவாதித்தார்கள். வைசாலியில் வெகு காலம் பௌத்த மதம் ஓங்கியிருந்தது.

அசோகன் கி. மு. சுமார் 250-இல் வைசாலிக்கு வந்து சிங்கத் தூண் ஒன்று எழுப்பினான். அது இன்னும் அப்படியே இருக்கிறது. பஞ்சமுகி மகாதேவர் சிலைபோன்ற பிற சிற்ப வடிவங்களையும் அங்கே காணலாம்.

ராமாயணத்திலும் வைசாலியைப்பற்றிய விவரங்கள் வருகின்றன. ராமபிரானும் விசுவாமித்திர முனிவரும் சரயு ஆற்றங்கரையோரமாக இரண்டு நாள் வழி நடந்து, மூன்றாம் நாள் அதைக் கடந்தார்கள். அன்றுதான் தாடகையை ராமபிரான் கொன்றார். நாலாம் நாள் விசுவாமித்திருடைய ஆசிரமத்துக்கு எல்லாரும் வந்து சேர்ந்தார்கள். பிறகு அங்கிருந்து மிதிலைக்குச் சென்றார்கள். கங்கையைக் கடப்பதற்கு முன் வைசாலி வழியாக ராமபிரான் போனார். கண்டகி நதியும் கங்கையும் சேரும் இடத்தில் இப்படிக் கடந்ததாகத் தெரிகிறது. திரும்பி வரும்போதும் வைசாலி வழியாகத்தான் ராமபிரான் வந்தார்.

இங்கே 1903-இல் டாக்டர் பிளாக் என்பவரும், 1912-இல் டாக்டர் ஸ்பூனர் என்பவரும் தோண்டி ஆராய்ந்தார்கள். அப்போது மண்ணால் செய்த ஆண் பெண் பொம்மைகளும் இன்னும் அநேகம் புதை பொருள்களும் இங்கே கிடைத்தன. சில பொருள்களில் அருமையான வேலைப்பாடுகளைக் காணலாம். அந்த ஊரிலேயே வைசாலி சங்கம் என்ற ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்கள் இந்தப் பொருள்களில் சிலவற்றை எடுத்துக் கண்காட்சியாக வைத்திருக்கிறார்கள். இன்னும் தோண்டிப் பார்த்தால் மேலும் பல பொருள்கள் கிடைக்கலாம்.

பிஹாரின் பிரதம மந்திரி ஸ்ரீ கிருஷ்ண சின்ஹாவின் தலைமையில் சில ஆண்டுகளாக இங்கே 'வைசாலி உற்சவம்' என்று ஒரு விழாக் கொண்டாடி வருகிறார்கள். இப்போதெல்லாம் விழாவின்போது ஏராளமான மக்கள் இங்கே கூடி நாடோடிப் பாடல்கள் பாடி, கூத்து, ஆட்டம் எல்லாம் ஆடி வருகிறார்கள்.

வேலையும் கவலையும்

வேலையைவிடக் கவலையே அதிகமான மனிதர்களைக் கொல்கிறது. இதற்குக் காரணம் வேலை செய்வதைவிடக் கவலைப்படுவதிலேயே அதிகமான மனிதர் ஈடுபடுவதுதான்.

—ஜான் கேர்ன்ஸ்

ஒரு நிபுணர் தம் சொந்த அநுபவத்தைக் கொண்டு சொல்லும் விவரங்கள்.

சர்க்கஸ் விலங்குகள்

★

சமீபத்தில் 'சர்க்கஸ் டாக்டர்' என்ற சுவாரஸ்யமான புத்தகம் ஒன்றை ஹெண்டர்ஸன் என்பவர் வெளியிட்டிருக்கிறார். அவர் அநுபவம் மிகுந்த மிருக வைத்தியர். உலகிலேயே பெரிய 'பார்னம் அண்டு பெய்லி' என்ற சர்க்கஸில் அவர் மிருக சிகிச்சை செய்யும் டாக்டராக இருக்கிறார். அந்தச் சர்க்கஸ் 700 மிருகங்களுடன் அமெரிக்காவில் பிரயாணம் செய்து வருகிறது.



மற்ற எல்லா மிருகங்களையும் விடக் குதிரையிடந்தான் அவருக்கு அதிகப் பிரியம். சில குதிரைகள் தம் ஜோடிகளை விட்டுப் பிரியச் சகிப்பதேயில்லையாம். "எங்களிடம் இரண்டு அமெரிக்கச் சவாரிக் குதிரைகள் உண்டு. அவை சதா சண்டை இட்டுக்கொண்டேயிருக்கும். ஒன்றை வெளியே கொண்டு சென்று அதன்மேல் சேணத்தைப் பூட்டினால், மற்றொன்று லட்சியமே செய்யாது. ஆனால் கண் காணாமல் அதை எங்கேயாவது கொண்டு சென்று விட்டோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். மற்றது கனைத்து, ஊளையிட்டு, வேர்த்து விறுவிறுத்துப் போய்விடும். இரண்டையும் ஜோடியாக அழைத்துப் போவதைத் தவிர வேறு ஒன்றும் செய்வதற்கில்லை" என்று கூறுகிறார் ஹெண்டர்ஸன். சர்க்கஸ் வேறு ஊருக்குச் செல்லும்போது, ஒவ்வொரு குதிரைக்கும் ஒரு பெட்டி உண்டு. எங்கே போனாலும் அவை இரண்டும் ஒன்றுக்கொன்று பக்கத்திலேயே இருக்கும்படி அவற்றை நிறுத்த ஏற்பாடு செய்திருக்கிறார்கள். சேர்ந்து பழகிய குதிரைகளை மாற்றி நிறுத்தி விட்டால் போதும்; அதைவிட அவைகளை நிலை குலையவைப்பது வேறு எதுவும் இல்லை.

கோவேறு கழுதையை வரிக் குதிரை என்று பலர் எண்ணிக்

காப்பிரைட்: ஃப்ரீ இந்தியா (ஆங்கிலம்; 29-3-'53) ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை-2

கொண்டிருக்கிறார்கள். அப்படி அல்ல என்கிறார் ஹெண்டர்ஸன். தம்மைத் தாக்கி விடப்போகிறதே என்று அவர் அதிகம் பயப்படுகிற மிருகம் அதுதான். "அதனுடன் சண்டையிடுவதோ அதனிடமிருந்து மீள்வதோ முடியாது. அது ஒரு கொடிய, கொரேமான மிருகம்; பலம் வாய்ந்தது. கடித்தால் கடிக்கும் பொருள் அடியோடு பெயர்ந்து வரும் வரையில் விடாது; கடித்துக்கொண்டே இருக்கும்!" என்கிறார் அவர்.

யானை தன் சொத்தைப் ப்ற்களைத் தானே பிடுங்கிவிடுகிறதாம். தலையைக் குனிந்துகொண்டு வாயில் தன் கால் சங்கிலியை யானை மாட்டிக்கொள்கிறது. சொத்தைப் பல்லுக்குச் சரியாக அந்தச் சங்கிலியைத் தள்ளி வைத்துக்கொண்டு படக்கென்று தலையைத் தூக்குகிறது. பல் பெயர்ந்து விழும் வரையில் இப்படியே திரும்பத் திரும்பச் செய்கிறது. கொஞ்சங்கூட முனகாமல் அந்தப் பெரிய மிருகம் இப்படித் தன் பல்லைப் பெயர்த்துக்கொண்டு விடுகிறது.

இதற்கு நேர்மாறாக டாக்டர் அதன் காதைத் தொட நேர்ந்து விட்டால் போதும்; அது பரிதாபகரமாக ஓலமிடுவதைப் பார்க்கலாம். குதிரைகளும் சரி, யானைகளும் சரி, லேசாகத் தொட்டால் என்னவோ ஏதோ என்று பயந்து விடுகின்றன. அவற்றை வலுவாகவும் உறுதியாகவும் தட்டிக் கொடுத்தால்தான், அவை புரிந்து கொள்கின்றன.

கடைசியாக ஒரு சிங்கத்தைப்பற்றிய வேடிக்கையான நிகழ்ச்சி ஒன்றை ஹெண்டர்ஸன் சொல்கிறார். ஏதோ தவறுதலாக அந்தச் சிங்கம் கூண்டைவிட்டு வெளியே கூடாரத்துக்குள் வந்து விட்டது. அங்கே ஒரு நாவிதன் வேலை செய்துகொண்டிருந்தான். க்ஷவரம் செய்துகொண்டவருக்கு 'மஸாஜ்' செய்வதற்காக அவருடைய தலையில் அப்போதுதான் வெந்நீரில் நனைத்த ஒரு துணியைப் போட்டு மூடினான். இந்த நிலையில் ஒரு சிங்கம் கூடாரத்தில் நுழைந்ததை நாவிதன் பார்த்தானோ இல்லையோ, ஒரு வார்த்தையும் பேசாமல் எடுத்தான் ஓட்டம்! சிங்கம் அமைதியாக உட்கார்ந்து தன் உதடுகளை நாக்கால் நக்கிக்கொண்டிருந்தது. க்ஷவரம் செய்துகொள்ள வந்தவர், வெகு நேரம் காத்தும் துணியை நாவிதன் எடுக்காதது கண்டு சலித்துப்போனார். தாமாகவே துணியை நீக்கிப் பார்த்தால், எதிரே சிங்கம்! அவ்வளவுதான். ஒரே தாண்டாகத் தாண்டிக் குதித்தார். அவ்வளவு உயரம் அமெரிக்காவிலேயே யாரும் தாண்டியதில்லையாம். சிங்கம் தொந்தரவு விளைக்கு முன்பாக, நல்ல காலம், அதைப் பிடித்து மறுபடியும் கூண்டில் அடைத்துவிட்டார்கள்!

வாழ்க்கை

வாழ்க்கை என்பது தீர்த்து வைக்க வேண்டிய ஒரு சிக்கல் அல்ல; பதில் அளிக்க வேண்டிய ஒரு பிரச்னை அல்ல; அலசி ஆராய வேண்டிய ஒரு மர்மம் அல்ல. அது வாழ்ந்தாக வேண்டிய ஒன்று; அவ்வளவுதான்.

—ஹெரால்டு டபிள்யு. ருவேரப்

மிகப் பழங்காலத்திலேயே கப்பல் விட்ட உலக நாடுகளில் ஒன்று பாரதம்.

நம் புராதனக் கப்பல்கள்

யோகி சுத்தானந்த பாரதியார்

பதினோராம் நூற்றாண்டில் விஜயராஜபோஜன் என்ற மன்னன் 'யுக்தி கல்பதரு' என்னும் நூல் எழுதினான். பொன்னணிகள், ஆயுதங்கள், கொடி, குடைகள், அரியணை முதலியவை செய்யும் வகை, சண்டைக்குக் குதிரை, யானை, சேனை முதலியவற்றைப் பயிற்றும் முறை, இருபத்தேழு வகைக் கப்பல்கள் செய்யும் விதம் - இந்த விவரமெல்லாம் அதில் இருக்கின்றன. கடல்பிரயாணத்துக்கு ஏற்ற கப்பல்களின் அளவு சுமார் 278×38×27 அடி. இந்த அளவு சுமார் 2300 டன் பாரம் தாங்கும். இவற்றில் பூமா, பாக்கியம், மந்தரா என்ற பல வகைக் கப்பல்கள் வெவ்வேறு அளவில் உண்டு. சிறப்பான கப்பல்களின் நீளம் 42 முதல் 176 முழம் வரையிலும் இருக்கும். நீளத்தில் $\frac{1}{8}$, $\frac{1}{10}$ இந்த விகிதங்கள் இவற்றின் அகல ஆழங்கள். இவற்றில் தாரணி - 48 முழம்; காமினி-96; தாரி-112; ஜங்காலா-128; பெகினி-176; பல்வினி-144. இவை சிறந்த வகைக் கப்பல்கள். நீளம் ஒரு பங்கும் அகல ஆழங்கள் ½ பங்கும் உள்ளவை. ஊர்த்துவம், அநுத்தமம், சுவர்ணமுகி முதலிய பெயர்கள் கொண்டவை. தங்கம், வெள்ளி, செம்புகளாலும் இவற்றின் கலப்புகளாலும் கப்பல்களை அலங்கரிப்பார்கள். அவைகளுக்கு நான்கு பாய்மரங்கள். வெண்ணிறம் உள்ளது மூன்று பாய்மரக் கப்பல்; செந்நிறம் உள்ளது இரண்டு பாய்மரக் கப்பல்; மஞ்சள் நிறமுள்ளது ஒரு பாய் மரக்கப்பல்; மற்றவை நீலமாயிருக்கும். கப்பலின் முகப்பில் எருது, பாம்பு, யானை, புலி, கிளி, மனிதன் முதலிய தலைகளில் ஒன்றைச் செதுக்கி அமைப்பதுண்டு. கடலில் காந்தப் பாறைகள் இருக்கும்; ஆகவே, பலகைகளை இரும்பினால் இணைக்கக் கூடாது என்று அந்தக் காலத்தினர் அறிந்திருந்தார்கள்.

'ஸர்ப்ப மந்திரம்' என்னும் அறையுள்ள கப்பல், அரசனுடைய பொருள்கள், குதிரைகள், பெண்கள் முதலியவற்றைச் சுமக்கும். 'மத்திய மந்திரம்' என்பது உல்லாசக் கப்பல். நீண்ட பிரயாணங்களுக்கு, விசாலமான அறைகள் கொண்ட கப்பல்களே பயன்படும். கப்பல் சண்டைக்கும் இவையே பயன்படும். விஜயன் மணந்த பாண்டியன் புதல்வி, 860 முழம் நீளமும், 600 அடி அகலமும், 20 அடி ஆழமுமுள்ள கப்பலில் வந்தாளாம். 760 பேர்கள் செல்லக்கூடிய கப்பல்கள் தமிழ் நாட்டில் முன் காலத்தில் இருந்தன. இன்னும், ஸாஞ்சியிலுள்ள பௌத்த ஆலயங்களிலும், சலாசத்துத் தீவி

மூலம்: கலைச்சுடர் (தமிழ்: மார்ச் '53), பதுளை, ஸிலோன்.

லுள்ள குகைகளிலும், ஜகந்நாத ஆலயத்திலும், அஜந்தா குகையிலும் முன் காலத்துக் கப்பல்களின் கல்வெட்டுகள் விளங்குகின்றன. சாவகத் தீவில் ஒரு கோயிலில், தமிழரின் குடியேற்றச் சிற்பக் காட்சியைக் கப்பல் கப்பலாகச் செதுக்கியிருக்கிறார்கள். ஆந்திர நாட்டில், முன்னே கப்பலின் உருவம் பொறித்துள்ள காசுகள் வழங்கின. ரிக்வேதம் கப்பல்களைப் பற்றிச் சொல்கிறது. 100 துடுப்புகள் கொண்டு தள்ளிய கப்பல்களையும் அது வர்ணிக்கிறது. பாரதத்திலும் வேதத்திலும் நெடுந்தொலை ஊர்ந்து நடுவில் உடைந்த கப்பல்களைப்பற்றிச் சொல்லியிருக்கிறது. மநு கடற் சுங்கத்தைக் குறித்து விரிவாகச் சொல்லுகிறார். 'பிருஹத் ஸம்ஹிதை' என்ற ஜோதிட நூல், கப்பலோட்டிகளுக்கு ஏற்ற நாளும் கோளும் வகுத்திருக்கிறது. இன்னும் வராஹ புராணம், மார்க்கண்டேய புராணம், ரத்நாவளி, சாகுந்தலம், கதாஸரித் சாகரம், தசகுமார சரிதம் முதலியவற்றில் கடல் யாத்திரை, வியாபாரம், போக்கு வரத்துக்களைப் பற்றிய குறிப்புகள் காண்கின்றன.

தமிழ் நூல்களும், புத்த ஜாதகங்களும், பிடகங்களும் நம் கப்பல் முயற்சிகளைக் குறித்துப் பேசுகின்றன. பூரணம் என்ற வியாபாரி உலகைச் சுற்றி ஆறு முறை கப்பல் பிரயாணம் செய்தானும்.

பாண்டிய சோழ மௌரிய அரசர்களின் காலத்தில் நம் நாடு, கடல் அரசியாயும் வியாபார உலகின் இதயமாயும் விளங்கியது; யூதர், அஸ்ஸீரியர், கிரேக்கர், எகிப்தியர், ரோமர் முதலியவர்களுடன் பலமான வியாபாரம் செய்தது. நம் நாட்டின் இயற்கைப் பொலிவும் வளமும் விளைவும் தொழில் வளர்ச்சிக்கு மிகவும் ஏற்றவையாக இருந்தன. ஐரோப்பா தன் வாழ்க்கைத் தேவைகளுக்கு நம் நாட்டையே எதிர்பார்த்தது. 7,00,000 பவுனுக்கு அணிகளும் வாசனைச் சரக்குகளும் இந்தியாவிலிருந்து வருஷந்தோறும் ரோமுக்குப் போயின. நம் நாட்டுத் தேக்கு மரங்கள் கி. மு. 3000 - ஆண்டுகளுக்கு முன்பே பாபிலோனுக்கு ஏற்றுமதியாயின. அற்புதமான எகிப்தியக் கோபுரங்களில் மதுரையின் நீலச் சாயமும் சல்லாத் துணிகளும் புளியமர வைரங்களும் இருக்கின்றன. எகிப்திய வியாபாரிகள் நம் நாட்டுக்கு வந்து, வாசனைச் சரக்குகளை வாங்கித் தங்கள் ஒட்டகங்களின்மீது ஏற்றிக்கொண்டு போகும் காட்சி யூதரின் சமய நூல்களில் காணப்படுகிறது. தந்தமும் மயிலிறகும் வாசனைத் திரவியங்களும் ஸிரியாவுக்கு ஏற்றுமதியாயின. யூத வேதத்தில் 'தோகை', 'அகில்' என்ற தமிழ்ச் சொற்கள் திரிந்து காணப்படுகின்றன. கர்ப்பூரம், அரிசி, இஞ்சி வேர் என்பன கார்ப்பியன், ஒரைஜா, ஜிஞ்ஜிவர் என்று கிரேக்க பாஷையில் மருவி வழங்குகின்றன. மெஸப்பட்டோமியா, பாபிலோன் வழியாக இந்தியாவோடு ஒட்டகத்தின் மூலம் வியாபாரம் செய்ய ஸாலமன் என்ற மன்னன் ரஸ்தாக்கள் போட்டதாகத் தெரிய வருகிறது. ஜெர்ஜான் என்ற பாரசீக மன்னனின் பெருஞ் சேனையில் இந்திய வில்லாளிகள் முதன்மை பெற்று விளங்கியதாக ஹெரோடட்டஸ் தன் பிரயாண நூலில் எழுதி வைத்திருக்கிறான். அந்தக் காலத்தில் பஞ்சு என்பதே மேல்நாட்டுக்

குத் தெரியாது. "இந்தியாவில் சில காட்டுச் செடிகள் இருக்கின்றன; அவற்றில் பழம் பழுப்பதற்குப் பதிலாக மயிர் முளைக்கிறது. அது ஆட்டு ரோமத்தைவிட நன்ருயிருக்கிறது. அதனுல் ஹிந்துக்கள் லேசான ஆடைகள் நெய்கிருர்கள்" என்று பஞ்சைப்பற்றி அவன் கூறுகிருன். உலகத்துக்கு ஆடை கொடுத்த முதல் நாடு நம் நாடே.

அலெக்ஸாந்தர் சிந்து நதியை நம் இந்தியப் படகுகளிலேயே கடந்தார். 800 கப்பல்கள் அடங்கிய ஒரு கூட்டம் அப்போது பாரசீகத்துக்குப் போக்கு வரவு செய்தது. 2000கப்பல்கள் சரக்குகளை ஏற்றிக்கொண்டு, வாணிபம் செய்யப் புறப்பட்டதாக, டோலமி (Ptolemy) கூறுகிருன். "இந்தியா, வாணிபத்தால் ரோமை வற்ற அடிக்கிறது. இந்தியாவுக்குள் பொன்ஞறு பாய்கிறது" என்று டோலமி முறையிடுகிருன்.

சந்திரகுப்த சக்கரவர்த்தி பெருத்த கப்பற்படை வைத்திருந்தார். அவருடைய ஆட்சி ஒழுங்கைப்பற்றி, மகஸ்தனிஸ் விரிவாக எழுதியிருக்கிருர். சந்திரகுப்தர் தம் ஆட்சியை ஆறு இலாகாக்களாகப் பிரித்தார். மூன்ருவது தான் ராணுவ இலாகா. அதில் ஒவ்வொன்றிலும் ஐந்து அங்கத்தினர் கொண்ட ஆறு உட்பிரிவுகள் இருந்தன; அவற்றுள் ஒன்றே கப்பற் படைப் பிரிவு. கப்பற்படைக்குத் தலைவன் 'நாவத்யட்சன்' என்ற பட்டம் பெற்றவன். இவன் எல்லாக் கப்பல்களையும் மேல் பார்ப்பவன். கப்பல்களுக்குச் சுங்கம் விதிப்பவனும் இவனே. கடல் அல்லது நதிக்கரையிலுள்ள கிராமங்களுக்கு நிலத்த வரி உண்டு. செம்படவர் தம் வரும்படியில் ஆறில் ஒரு பங்கைப் பாசித் தீர்வையாகத் தரவேண்டும். முத்துக் குளிப்பவர்களுக்கு அரசாங்கமே வாடகைக்குப் படகு தந்தது. துறைமுகங்களில் வியாபாரச் சரக்குகளுக்கு வரி விதித்தார்கள். புயலால் வருந்திய கப்பல்களுக்கும், சாமான்கள் சேதமானதால் நஷ்டமடைந்த வியாபாரிகளுக்கும், பழுது போன கப்பல்களுக்கும் அரசாங்கம் ஈடு செய்தது. பொது நன்மை, வியாபாரம், அரசாங்க வேலை இவைகளின் நிமித்தம் போகிறவர்கள் தவிர, மற்றவர்களெல்லாரும் சர்க்கார் சேவகர்களின் உத்தரவில்லாமல் ஒருபோதும் தோணியில் ஏறக்கூடாது. செம்படவரும் சாப்பாட்டுச் சாமான்கள் கொண்டு செல்கிறவரும் குற்றவாளியைப் பிடிக்கச் செல்கிறவரும் சொந்தப் படகு வைத்திருப்பவரும் மக்களுக்கு இன்றியமையாத சாமான்களை விற்கப் போவோரும் எப்போதும் கப்பலில் போகலாம். அந்தணரும் துறவிகளும் சிறு குழந்தைகளும் முது கிழவரும் கர்ப்பவதிகளும் அரசாங்கத் தூதரும் இனுமாகக் கப்பலில் போகலாம். இந்த விதிகளை மீறும் குற்றவாளிகள் தண்டனை அடைவார்கள்.

அசோகர் காலத்தில் யவனம், சோனகம், ஸிரியா, எகிப்து, சீனம், ஜப்பான் முதலிய இடங்களுக்குப் பிட்சுக்கள் கப்பலில் சென்றதைச் சரித்திரம் விளக்குகிறது. அசோகர் நட்ட கல் தூண்கள் நம் நாட்டுக் கப்பல் வியாபார முயற்சிகளை விளக்கும். குப்த மன்னர் காலத்தில், இந்

தியக் கப்பல்கள் வங்காளத்துக்கும், இலங்கை, பர்மா முதலிய இடங்களுக்கும் சென்றுகொண்டே இருந்தன. பசிபிக் தீவுகள் வழியே நம் கப்பல்கள் அமெரிக்காவுக்கும் சென்றன. கொலம்பசுக்கு முன்பே நாம் அமெரிக்காவுக்குப் போக்குவரவு செய்தோம்!

'மகரவாரி வளந்தந் தோங்கிய நகரவீதி', (கடலில் கப்பல் விட்டு, அந்தக் கப்பல் வாணிபத்தாலும் கடல் தரும் முத்துக்களாலும் விளங்கின) என்று நம் தமிழ் நாட்டு வீதிகள் புகழப் பெறுகின்றன. 'கலந்தரு திருவிற் புலம்பெயர் மக்கள்' (வியாபாரத்துக்காக நாட்டைவிட்டு வெளிநாடு சென்று, தம் கப்பல்களில் செல்வங் கொணர்ந்து, அந்தச் செல்வத்தால் பெருகிய மக்கள்) என்று நம் தனவணிகர் போற்றப் பெறுகிறார்கள்.

ஸோல்ஜரின் பித்தம்

ராணுவத்தில் சேவை செய்துகொண்டிருந்த ஸோல்ஜர் ஸிம்ப்கின்ஸ் என்பவனின் நடத்தை மிக விசித்திரமாயிருந்தது. அவனைப் பரீட்சிக்கும்படி டாக்டரிடம் ஸார்ஜெண்ட் சொன்னார். "இவன் எப்போதும் சுற்றி அலைகிறான். எதிர்ப்பட்ட துண்டுக் காகிதங்களையெல்லாம் கையில் எடுக்கிறான். பிரித்துப் பார்க்கிறான். 'இது இல்லை; இது இல்லை' என்று கத்துகிறான்" என்று அவர் தெரிவித்தார்.

இப்படி ஸார்ஜெண்ட் சொல்லிக்கொண்டிருக்கும் போதே, டாக்டரின் மேஜை மீதிருந்த காகிதத் துண்டுகளையெல்லாம் ஸோல்ஜர் ஸிம்ப்கின்ஸ் அலசி ஆராயத் தொடங்கினான்.

"பையா, இனி உன்னை ராணுவத்தில் வைத்துக் கொள்ள முடியாது. இதைச் சொல்ல எனக்கு வருத்தமாய்த்தான் இருக்கிறது. என்னசெய்வது?" என்று சொல்லிய டாக்டர், திரும்பி ஸார்ஜெண்டைப் பார்த்து, "இவனை வேலையை விட்டு விடுவிக்க டிஸ்சார்ஜ் உத்தரவை வாங்கி வாருங்கள்" என்றார்.

அப்படியே விடுதலை உத்தரவு வந்தது. அந்த உத்தரவுக் காகிதத்தைக் கையில் வாங்கினான் ஸோல்ஜர் ஸிம்ப்கின்ஸ். பிரித்துப் பார்த்தான். "இதுதான் அது! இதுதான் அது!" என்று பெருங் கூச்சல் போட்டுக்கொண்டே ஒரே ஓட்டமாய் ஓடி மறைந்தான்.

—'ஆர். டி.'

இது என்ன நரகமா?

இந்தப் பூலோகம் மற்றோர் உலகத்தின் நரகம் என்று நினைப்பது போல் சில ஜனங்கள் நடந்துகொள்கிறார்கள்!

—பென் ரிவெல்லோ

சின்னஞ்சிறு பூச்சியால் உண்டாகும் இந்த அவலரக்கு எவ்வளவு உதவியாயிருக்கிறது!

பானைக்கு உறுதி தரும் பூச்சு

★

அவலரக்கு (ஷெல் - லாக்) என்பது பதம் செய்த அரக்கு. சித்திரக் கலையிலும், சில கைத்தொழில்களிலும் பல நூறு வருஷங்களாக இது பயன்பட்டு வருகிறது. சித்திர வேலைப்பாடுகள் செய்யவும் பாதுகாப்பாகவும் பல பொருள்கள்மீது இதைப் பூசி வருகிறார்கள். பிரெஞ்சுப் பூச்சுக்களைப் பூசுவதையும் மரப் பொம்மைகளுக்கு அரக்குப் பூசுவதையும் இதற்கு உதாரணமாய்ச் சொல்லலாம். ஆனால், இப்படிப் பூசும் மரப் பொம்மைகள் முதலியவை இயற்கையாகவே கசிவதில்லை; அப்படிக் கசிந்தாலும் சிறிதளவே கசியும்.

ஆனால் நிறையக் கசியக்கூடிய வீட்டு மண்பாண்டங்களுக்கும் இப்படிப் பூச்சுக் கொடுக்கலாம். அப்போது அவைகளிலிருந்து சுத்த ஜலங்கூடக் கசியாது; பண்டங்களைப் புளிக்கவைக்கும் நுண்ணங்கள் (பாக்டீரியா) கூட இந்தப் பாத்திரங்களுக்குள் புக முடியாது. ஏழைகளின் எண்ணெயும் உப்பும் இனி அவர்களுடைய மண்பாத்திரங்களிலிருந்து கசிந்து வீணாக வேண்டியதில்லை. இந்த உண்மைகளை அரக்கு ஆராய்ச்சிஸ்தாபனம் இன்று நிரூபித்துவிட்டது.

அரக்குப் பூசிய மண் பாண்டங்கள் பளிச்சென்றும், பளபளப்பாகவும் இருக்கின்றன. வெந்நீர், எண்ணெய், உப்பு இவைகளுக்கும் அரக்குப் பூச்சு அசைந்து கொடுப்பதில்லை. இதற்குச் செலவும் மிகக் குறைவாகவே ஆகிறது. மாக்கல், பீங்கான், கண்ணாடி இவைகளால் செய்த பாத்திரங்களைப்போலவே இனிமேல் அரக்குப் பூசிய மண்பாண்டங்களும் உணவுப்பண்டங்களை வைத்துக் காப்பாற்ற உதவும்.

மண் பாண்டங்களுக்கு அரக்குப் பூசுவது வெகு சுலபம். இதற்காக விலை உயர்ந்த உபகரணம் எதுவும் தேவை இல்லை. இந்தப் பூச்சைத் தயாரிப்பதும், பழைய மண்பாண்டங்களைப் புதுப்பிப்பதும் லாபகரமான ஒரு குடிசைத் தொழில் ஆக முடியும். இயற்கை அழகு நிறைந்த பிஹாரைச் சேர்ந்த புருலியா, ஜால்டா என்ற ஊர்களில் அரக்கு ஏராளமாகக் கிடைக்கிறது. அங்கேயே முதல்முதல் இந்தத் தொழில் தொடங்குமென்று தோன்றுகிறது.

கலப்பில்லாமல் சுத்தம் செய்த அவலரக்கு, குறிப்பிட்ட அளவு நிறை உள்ள நவச்சாரத் திரவம் (லிக்கர் அம்மோனியா) இரண்டும் இருந்தால் போதும்; இந்தப் பூச்சுச் செய்யும் தொழிலைத் தொடங்கிவிடலாம். ஈயம் பூசிய ஒரு பாத்திரத்திலோ, பீங்கான் பாத்திரத்திலோ நவச்சாரத் திரவத்தை ஊற்றி அதில் அவலரக்

மூலம்: திருவாங்கூர்-கொச்சி நியூஸ் (ஆங்கிலம்: 15-2-'53), திருவனந்தபுரம்.

கைப் போட்டு ஓர் இரவு முழுவதும் ஊற வைக்க வேண்டும். மறு நாள் ஆறு மணி நேரம் அதை அடுப்பிலேற்றிக் கொதிக்க வைக்க வேண்டும். பிறகு, நன்ருக ஆற வைத்து, மெல்லிய பஞ்சுத் துணியில் வடிகட்ட வேண்டும். கொஞ்சம் நவச்சார வாசனை வீசும் இந்தக் கறுப்புக் கரைவுதான் பூச்சுக் குழம்பு.

உப்புக் காகிதம், தேங்காய் நார் போன்ற சொரசொரப்பான பொருளைக் கொண்டு மண்பாண்டத்தை நன்ருகத் தேய்த்துக் கழுவி, உலர வைக்க வேண்டும். பிறகு மண்பாண்டத்தையே இந்தக் குழம்பில் துவைத்தோ இந்தக் குழம்பைப் பாண்டத்தின் மீது பிரஷ்ஷால் தடவியோ தெளித்தோ, பாண்டத்துக்குப் பூச்சு ஏற்றலாம். பின்பு, பாண்டத்தை நிழலில் உலர வைக்க வேண்டும். முதல் பூச்சு நன்ருக உலர்ந்த பிறகு மற்ருெரு பூச்சுக் கொடுக்க வேண்டும். இரண்டு நாள் வெயிலில் காய வைத்தபிறகு நாலு அல்லது ஐந்து மணி நேரம் பாண்டத்தை நெருப்பில் போட்டுச் சுடவேண்டும். இப்படிச் சுட்ட பாத்திரத்தைப் பிறகு உபயோகிக்கலாம். மங்கலான மண் நிறம் மாறி இப்போது பாத்திரம் பளபளப்பாக இருக்கும். பூச்சில்லாத மண்பாண்டத்தைவிட இது உறுதியாகவும் இருக்கும். உப்பு, எண்ணெய், ஊறுகாய் இவைகளை இந்தப் பாத்திரத்தில் ஆறுமாதம் வரையில் வைத்திருந்தாலும் கெடுவதில்லை. இந்தப் பூச்சுக்கு ஆகும் செலவு மிகவும் குறைவு.

வெல்லம் காய்ச்சுவதற்காகப் பனஞ்சாற்றை மண்பாண்டங்களில் இறக்கி வைத்துவிட்டு மறுபடியும் அதே பாத்திரத்தைப் பனஞ்சாறு இறக்க உபயோகித்தால், சாறு புளித்துப் போய்விடும். அப்படி ஆகாமல் தடுக்க என்ன வழி என்று அரக்கு ஆராய்ச்சி ஸ்தாபனத்தைச் சர்க்கார் கேட்டார்கள். அதற்குப் பதில் அளிப்பதற்காக அந்த ஸ்தாபனத்தார் சோதனைகள் நடத்தினுர்கள். அப்போதுதான் இந்த அரக்குப் பூச்சு முறை உருவாயிற்று. பனஞ்சாறு மட்டும் அல்ல; வேறு பல பொருள்களுக்கும் பாதுகாப்பாக இந்தப் பூச்சு உதவும் என்று அவர்கள் கண்டுபிடித்தார்கள். தென்னிந்தியாவில் பனைவெல்லம் காய்ச்சும் இடங்களிலெல்லாம் இப்போது இந்தப் பூச்சு முறையைப் பரீட்சித்து வருகிருர்கள். சர்க்காரின் மதுவிலக்குத் திட்டத்துக்குச் சின்னஞ்சிறு அரக்குப் பூச்சியால் கிடைத்துள்ள உதவி இது!

வெள்ளைக்காரன் நினைத்த காரியம்

தென்னுப்பிரிக்காவுக்கு வெள்ளைக்காரன் போனபோது அதை ஆப்பிரிக்கச் சுதேசிகளே நிர்வகித்து வருவதாகக் கண்டான். அங்கே வரிகள் இல்லை. கடன் இல்லை. பெண்களே சகல வேலையும் செய்தார்கள். இந்த மாதிரி ஒரு சமூக வாழ்க்கை முறையைக் கட்டாயம் அபிவிருத்தி செய்தாக வேண்டும் என்று தீர்மானித்துவிட்டான்.

—'ஃபார்மர்ஸ் வீக்லி', தென்னுப்பிரிக்கா.

யில் பெரிய பெரிய மாறுதல் ஏற்பட்டிருக்கும் விவரம் வெளியாயிற்று. வேறொரு ஜனாதிபதியும் வரப்போகிறார் என்று தெரிந்தது. சோவியத் பார்லிமெண்ட் ஒரு வாரத்துக்கெல்லாம் கூடிப் புதிய மாறுதல்களை அங்கீகாரம் செய்துவிட்டது. ஸ்டாலின் இறந்து சில நாளைக்கெல்லாம் சட்டத்தின் முழு அதிகாரமும் பெற்றுப் புதிய ஆட்சி தொடங்கிவிட்டது.

சர்க்காரிலும் கட்சியிலும் இருந்த அதிகாரிகளின் தொகை குறைந்துவிட்டது. மந்திரி சபை என்ற புதிய நிர்வாகக் குழு ஏற்பட்டுவிட்டது. ஐந்து பேர் அடங்கிய இந்தச் சபையின் தலைவர் மாலன்காவ். கட்சிக்குத் தலைமை செலுத்தவும் அநேகம் பேரை நியமிக்காமல், முன்னே 'போலிட் பீரோ' இருந்த மாதிரி சில பேரையே நியமித்திருக்கிறார்கள். மாலன்காவே சர்க்காரில் பிரதம மந்திரியாகவும் கட்சியின் மாபெருந் தலைவராகவும் இருக்கிறார். ஸ்டாலின் பொதுக் காரியதரிசியாகவும் இருந்தார்; மாலன்காவ் அந்தப் பதவியை வகிக்கவில்லை. இவ்வளவுதான் வித்தியாசம்.

ஸ்டாலின் பிரதம மந்திரியாக இருந்தபோது 14 உதவிப் பிரதம மந்திரிகள் இருந்தார்கள். இவர்களில் நாலு பேர் இப்போது 'முக்கிய உதவிப் பிரதம மந்திரி'களாகி விட்டார்கள். மாலன்காவுடன் சேர்ந்து இவர்கள் அரசாங்கத்தில் தலைமை வகிக்கிறார்கள். இதுவரை ஜனாதிபதியாக இருந்தவர் ஷ்வெர்னிக். இப்போது அவருக்குப் பதிலாக மார்ஷல் வாரோஷிலவை நியமிக்கச் 'சிபாரிசு' செய்திருக்கிறார்கள். ஆகவே, இனி மந்திரி சபையில் அவர் இருக்க மாட்டார். முன்னே உதவிப் பிரதம மந்திரிகளாக இருந்தவர்கள் இரண்டாந்தர மந்திரிகளாக இருப்பார்களா, மந்திரி சபையில் தம் இலாகாக்களைக் கவனித்துக்கொண்டு மட்டும் இருப்பார்களா, என்ன செய்வார்களென்று நிச்சயமாகத் தெரியவில்லை. தலைமை அதிகாரத்தைச் செல்வாக்குக்குத் தகுந்தபடி பிரித்துக்கொண்டிருக்கிறார்கள். தலைமைப் பதவியில் இருக்கும் மூன்று பேருக்கும் தனித் தனியே உரிய இலாகாக்கள் இருக்கின்றன. மாலடாவ் வெளி நாட்டு இலாகா, பாதுகாப்பு இவைகளைக் கவனித்துக்கொள்கிறார். ராணுவ இலாகா மார்ஷல் புல்கானின் என்பவர் கையில் இருக்கிறது. ககனோவிச் என்பவருக்குத் தனி இலாகா இல்லை.


ககனோவிச்


வாரோஷிலவ்


ஸபுராவ்


பெருவ்கின்

(ஆங்கிலம்; ஏப்ரல் '53), கல்கத்தா.

சோவியத் ருஷியாவின் பொருளாதார அபிவிருத்தியை அவர் கவனித்துக்கொள்ள வேண்டும். இவர்கள் எல்லாருக்கும் தலைமை பூண்டு நிற்கிறார் மாலன்காவ்.

சோவியத் ருஷியாவின் பார்லிமெண்டில் யூனியன் சோவியத் சபை, தேசிய இனத்தார் (நேஷனுலிட்டீஸ்) சபை என்று இரண்டு சபைகள் உண்டு. இந்த இரண்டுக்கும் நாலு ஆண்டுகளுக்கு ஒரு தரம் தேர்தல் நடக்கிறது. யூனியன் சபைக்குரிய அங்கத்தினர்களை 3,00,000 பேருக்கு ஒரு பிரதிநிதி வீதம், தேசம் முழுவதிலும் வோட்டுரிமை உள்ள பொது மக்களே தேர்ந்தெடுத்து அனுப்புகிறார்கள். தேசிய இனத்தாரின் சபை அங்கத்தினர்களை அந்த அந்தக் குடியரசுகள் தேர்ந்தனுப்புகின்றன. சட்டம் இயற்றவும் மந்திரிகளை நியமனம் செய்யவும் பதவியிலிருந்து நீக்கவும் சோவியத் பார்லிமெண்டுக்கு முழு அதிகாரம் உண்டு. இரண்டு சபைகளும் சேர்ந்தே 'ப்ரிஸிடியம்' என்ற நிர்வாக சபையைத் தேர்ந்தெடுக்கும். பார்லிமெண்டின் நடை முறைகளைக் கவனித்துக்கொள்ளும் பொறுப்பு இந்தப் 'ப்ரிஸிடிய'த்தைச் சேர்ந்தது. பிரதம மந்திரியின் யோசனைப்படி நியமனங்களையும் பதவியிலிருந்து நீக்க வேண்டியவர்களை நீக்குவதையும் அங்கீகரிக்கும் உரிமை 'ப்ரிஸிடிய'த்துக்கு உண்டு. சில தீர்மானங்களை அமலுக்குக் கொண்டுவரவும், சட்டங்களுக்கு வியாக்கியானம் செய்யவும் சோவியத் பார்லிமெண்டையே கூட்டவும் அதற்கு அதிகாரம் உண்டு. 'ப்ரிஸிடிய'த்துக்கு ஒரு சேர்மன் இருப்பார்; குடியரசின் ஜனாதிபதிக்குத்தான் சேர்மன் என்று பெயர்; அதில் 16 உதவி-சேர்மன்களும் 15 அங்கத்தினர்களும் இருப்பார்கள். சட்டரீதியாகப் பார்த்தால் 'ப்ரிஸிடியம்' சேர்மனை (ஜனாதிபதியை)ச் சோவியத் பார்லிமெண்டின் சம்மதமில்லாமல் நீக்கக்கூடாது. ஆகவே, ஜனாதிபதி ஷ்வெர்னிக்கை நீக்கி அந்தப் பதவியில் வாரோஷிலவை நியமிக்கச் 'சிபாரிசு' செய்திருப்பது பொருத்தமாகப் படவில்லை. இந்த மாறுதலைச்சோவியத்பார்லிமெண்ட் அங்கீகரித்ததும் இது சட்டரீதியில் 'செல்லுபடி'யாகிவிடும்.

ஸ்டாலின் இறந்ததுமே இப்படி ஷ்வெர்னிக்கை ஜனாதிபதி பதவியிலிருந்து நீக்கியதிலிருந்து ஒன்று தெரிகிறது. இந்த மாறுதலுக்குக் காரணமான மாலன்காவ், ஸ்டாலினின் விருப்பத்தை மீறி இதைச் செய்திருக்கிறார் என்றுதான் சொல்ல வேண்டும். ஸ்டாலின் சில மாதங்களுக்கு முன்னேதான் கட்சி அமைப்பைப் புதுப்பித்தார்; தாம் இறந்தவுடன் இப்படி அதைத் தமக்குப் பின் வருகிறவர் மறுபடியும் மாற்றிவிடவேண்டும் என்பதற்காக ஸ்டாலின் அவ்வளவு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கமாட்டார். கிரெம்ளின் மாளிகையிலே புரட்சி நடந்திருக்கும் பட்சத்தில் 'கௌரவமான ஒப்பந்தம்' ஒன்று ஏற்பட்டிருக்க வேண்டும். மாலன்காவ் பிரபல சோவியத் பிரமுகர்களின் துணைக்கொண்டு அரசாங்கத் தலைமைப் பதவியை ஏற்றிருக்கிறார். வயதில் மூத்தவரான மாலடாவுக்கு இப்போதைய நிலை அவ்வளவாகத் திருப்தி அளிக்கும் என்று சொல்வதற்கில்லை. அவர் ஸ்டாலினுக்கு அடுத்தபடியாகச் சோவியத் நாட்டுக்காகப் பல ஆண்டுகள் உழைத்தவர். ஆனால்

புல்கானின், பெரியா இவர்களின் திறமைக்கேற்ற வெகுமதி கிடைத்துவிட்டது என்று நிச்சயமாகச் சொல்லலாம். ககனேவிச்சுக்குப் பதவி உயர்வு கிடைத்திருக்கிறது. இப்படி ஐந்து பேர் பொதுவாக நிர்வாகத்தைக் கவனிப்பார்கள்; என்றாலும், இவர்களில் மாலன்காவ், பெரியா, மாலடாவ் இந்த மூவருமே உண்மையில் அதிகாரம் செலுத்துவார்கள். இவர்களிலும் மாலன்காவ் மட்டுமே மந்திரிசபை, கட்சியின் ப்ரிஸிடியம், கட்சியின் ஸெக்ரடேரியட் இந்த மூன்றிலும் அங்கம் வகித்து முக்கியமாக விளங்குகிறார். எதிலும் அவருக்குத்தான் முக்கிய பதவி. அவர் ஸ்டாலினைப்போல் சர்வாதிகாரி ஆக விரும்பினால் போதும்; உடனே அகில சோவியத் யூனியன் கட்சிக் காங்கிரஸ் ஒன்றைக் கூட்டி அப்படியே ஆகிவிட முடியும்; ஸெக்ரடேரியட்டில் தமக்குள்ள அதிகாரத்தின் மூலம் அங்கங்கே உள்ள கட்சியின் கிளை ஸ்தாபனங்களில் தம் ஆட்களை நுழைத்துத் தாம் சொன்னபடி கட்சியையே அவர் ஆட வைக்க முடியும்.

கம்யூனிஸ்ட் கட்சியில் ஏற்பட்டுள்ள இந்த மாறுதல், சென்ற வருஷம் நடந்த அகில சோவியத் யூனியன் காங்கிரஸில் ஸ்டாலின் தீர்மானித்த அமைப்பு முறையை ஓரளவு குலைத்துவிட்டதாகத்தான் சொல்லவேண்டும். சோவியத் காங்கிரஸ்தான் எல்லாவற்றையும்விட முக்கியமானது. குறைந்தபட்சம் நாலு ஆண்டுகளுக்கு ஒரு முறை அது கூடும். மத்தியக் கமிட்டியிடம் அது தன் முழு அதிகாரத்தையும் ஒப்பித்து விடுகிறது; இந்தக் கமிட்டி கட்சியின் ப்ரிஸிடியத்திடம் தன்னிடமுள்ள அதிகாரத்தைக் கொடுத்து விடுகிறது. சென்ற ஆண்டு நடந்த சோவியத் காங்கிரஸுக்கு முன் 35 வருஷ காலம் இந்தக் காங்கிரஸ் காரியக் கமிட்டியே கட்சியை நிர்வகித்து வந்தது. இந்தக் காரியக் கமிட்டிக்குத்தான் 'போலிட் பீரோ' என்று பெயர். இதில் 12 அங்கத்தினர் இருந்தார்கள். இப்போது 'போலிட் பீரோ' என்று பெயர் இல்லையே ஒழிய மற்றப்படி பழைய 'போலிட் பீரோ'வில் இருந்தவர்களில் முக்கால் வாசிப் பேர் இதில் இருக்கிறார்கள். புதிதாகச் சர்க்காரில் பதவி பெற்றிருப்பவர்களுள் ஸபுரோவ், பெருவ்கின் இந்த இருவரும் மட்டில் 'ப்ரிஸிடிய'த்தில் இடம் பெறவில்லை. இதில் பத்து அங்கத்தினர்களும் 4 அபேட்சகர்களும் இருக்கிறார்கள். மத்தியக் கமிட்டி ஸெக்ரடேரியட் முன்போலவே முக்கியம் பெற்றிருக்கிறது; அளவிலும் பெரிதாயிருக்கிறது. நியமனம் முதலிய அலுவல்கள் உட்படச் சகல நிர்வாக காரியங்களையும் அதுதான் கவனித்துக்கொள்கிறது. இந்த ஸெக்ரடேரியட்டில் இருந்து கொண்டுதான் ஸ்டாலினும் மாலன்காவும் அதிகாரத்துக்கு வந்தார்கள். மாலன்காவ் இனி ஸெக்ரடேரியட்டை நன்றாகப் பயன்படுத்திக்கொள்வார்.

ஸ்டாலின் உயிரோடிருந்தவரை ருஷியாவின் போக்கே அவர் கையில்தான் இருந்தது. ஸ்டாலினும் அவருடைய கொள்கையும், ருஷிய ராணுவ பலமும் சேர்ந்து, இரண்டாம் மகா யுத்தம் முடிந்ததும் ஐரோப்பா, ஆசியா, அமெரிக்கா இந்த நாடுகளின் போக்கைப் பாதித்தன. ஸ்டாலினின்

கொள்கை இதுதான்: வெளி நாட்டுக் கொள்கையைப் பொறுத்தவரை மீண்டும் ஓர் உலக யுத்தம் வந்தால் அதில் ஈடுபடாமல் இருப்பது, காலனி ஆட்சிக்குட்பட்ட நாடுகளில் புரட்சியைக் கிளப்பி விடுவது, முதலாளித்துவத்தைக் கடைப்பிடிக்கும் நாடுகள் கொள்கை வேறுபாட்டால் தங்களுக்குள் சச்சரவிட்டுக்கொள்ளும்போது அந்தச் சந்தர்ப்பத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளுவது, உள்நாட்டில் தொழில் பலத்தைப் பெருக்குவது, லட்சிய ரீதியான சமூக அபிவிருத்தித் திட்டங்களையெல்லாம் ஒத்திப் போட்டுவிட்டுப் பிரசாரம், கட்சி நடவடிக்கை இவைகளின் மூலம் மக்களைத் திருப்தியோடு இருந்துவரச் செய்வது இவ்வளவுதான்.

ஸ்டாலினின் இந்தக் கொள்கை கொஞ்ச நாள் ருஷியாவில் அமலில் இருக்கலாமேயொழிய நீடித்திருக்கும் என்று சொல்வதற்கில்லை.

உண்ணலும் செரிமானமும்

தின்பது மனிதன் செயல்; ஜீர்ணமாவது தெய்வ ஸங்கல்பம்.

—வில்ஃப்ரெட் டார்ஃப்மான்

பூவாது காய்க்கும் மரமே இல்லை

தங்கள் சித்திரை மாத இதழில் 'க்விஸ்' 11-ஆவது கேள்வியான 'பூவாமல் காய்க்கும் மரங்கள் எவை?' என்பதற்கு, 'பலா, அத்தி, ஆல்' என்று பதில் தந்திருக்கிறீர்கள். அந்த விடை சரியல்ல. தாவர சாஸ்திரப்படி, பூவாமல் எந்த மரமும் காய்ப்பதில்லை. மற்ற மரங்களின் பூவைப்போல் மேற்கூறிய மரங்களுக்குப் பெரிய பூக்கள் இல்லை. அவை வெளிப்படையாகத் தெரிவதும் இல்லை. பலவகை மரங்களில் பலவகையான முறையில் கொத்தாகவோ, தனியாகவோ பூக்கள் இருக்கும். பூக்களின் சேர்க்கைக்கு 'இன்ஃப்ளாரஸன்ஸ்' என்று ஆங்கிலத்தில் பெயர். மேற்கண்ட மூன்று மரங்களின் பூக்கள் 'சைகோனியம்' என்ற வகையான சேர்க்கை உள்ளவை. அந்தச் சேர்க்கைதான் இந்த மூன்று மரங்களிலும் பழமாகக் காட்சி அளிக்கிறது. அவைகளின் பழத்துக்குள்ளேயே இந்த மரங்களின் ஆண்-பெண் பூக்கள் அடங்கி விடுகின்றன. பலா மரத்தில் உள்ள பலாச் சுளை எல்லாம் பெண் பூக்கள். அதை ஒட்டி உள்ள சிறிய சக்கைகள் ஆண் பூக்கள். பலா உள்பட மேலே சொன்ன மூன்று மரங்களும் பூத்துத்தான் காய்க்கின்றன; அதில் சந்தேகம் இல்லை. ஆனால் அந்தப் பூக்கள் மிகவும் சிறியவை; கண்ணுக்குத் தெரிவதில்லை. ஆயிரக்கணக்கான பூக்கள் வெளிப்புறம் மூடிய ஒரு விதமான 'சைகோனியம்' என்ற பூச் சேர்க்கைக்குள் இருக்கின்றன. இந்தப் பூச் சேர்க்கைதான் பின்பு பழமாகிறது.

—எம். சோமசுந்தரம், பி. ஏ., கோமன், திருச்சி ஜில்லா.

குழந்தைக்குச் சொல்லும் கதைகளால்
எவ்வளவு அரிய பலன் உண்டாகிறது!

'அம்மா, ஒரு கதை சொல்லு'

மார்க்கரெட் எச். பேக்கன்

"அம்மா, ஒரு கதை! பெக்கியைப்பற்றி ஒரு கதை சொல்லு" என்று என் மூன்று வயதுப் பெண் பெக்கி, இரவு தூங்குவதற்கு முன்பு நித்தியம் என்னைக் கேட்கிறாள். நானும் குழந்தையை மடியில் எடுத்து அமர்த்திக்கொண்டு கதை சொல்லத் தொடங்குகிறேன். சென்ற வருஷம் இந்த மாதிரி கதைகள் மிகவும் சிரமமான சமயங்களில் கூடப் பயன்பட்டன. அவள் மனசில் இருப்பவைகளை எடுத்துக் கூறுவதற்கும் அவள் கற்பனையைத் தூண்டுவதற்கும் எங்கள் அன்பை அவளுக்குக் காட்டவும் அவை உதவின. ஆனால், இப்படி நான் அவளைப்பற்றியே கதை சொல்ல முதலில் ஆரம்பித்தபோது இந்தப் பயனை எல்லாம் நினைக்கவில்லை. அவளுக்கு இரண்டு வயதாயிருக்கும்போது அவள் தினந்தோறும் செய்ய வேண்டிய அலுவல்களைப்பற்றியே கதையாகக் கூறுவேன். அதுவும் கதைதானே? மேலும் நான் சிறுமியாயிருந்தபோது என் தந்தை இந்தமாதிரிதான் என்னைப்பற்றிக் கதைகள் கூறுவார். அது எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. நானும் அப்படிக் கதைகளைப் பெக்கிக்குச் சொல்லவேண்டுமென்று எனக்கு என்னவோ தோன்றிற்று. ஆனால், இந்தமாதிரி கதைகள் அவளுக்கு எவ்வளவு உதவியாயிருந்தன என்பதைச் சீக்கிரத்திலேயே நான் கண்டுகொண்டேன்.

பெக்கிக்கு இரண்டு வயது நிறைந்து இரண்டு மாதம் ஆகும் போது எனக்குப் பிரசவ காலமாக இருந்தது. ஆகவே, பிரசவத்துக்கு ஒரு மாதம் இருக்கும்போதே அவளுக்கு இந்த விஷயத்தைப் புரியவைப்பதற்காக, 'சின்னப் பாப்பா' என்ற ஒரு புஸ்தகத்தை வாங்கி, ஒவ்வோர் இரவும் கொஞ்சம் கொஞ்சமாய்ப் படித்து அவளுக்குச் சொல்லத் தொடங்கினேன். எங்களுக்கு ஏற்றாற்போல் புஸ்தகக் கதையைக் கொஞ்சம் மாற்றியும் சொன்னேன். பெக்கி ஒரு கவலையும் இல்லாமல் சந்தோஷமாக இருந்தாள். சின்னஞ்சிறு குழந்தைகளைக் காணும்போதெல்லாம் அவளுக்கு உற்சாகம் தாங்காது. தன் வீட்டில் வரப்போகிற சின்னப்பாப்பாவை வரவேற்க அவள் மகிழ்ச்சியுடன் தயாராயிருந்தாள். நான் பிரசவ சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த அன்றுதான் பெக்கிக்கு ஒரே வயிற்றுவலி. டாக்டரிடம் காட்டியதும், "உடனே ஆபரேஷன் செய்யவேண்டும்" என்று அவர் கூறிவிட்டார். ஒரு யோசனைக்கும் அவகாசமில்லை. ஆபரேஷனாகி அவள் மயக்

காப்பிரைட்: பேரெண்ட்ஸ் மகஸின் (ஆங்கிலம்: பிப்ரவரி '53), சிக்காகோ, ஐக்கிய அமெரிக்கா.

கம் தெளியும் வரையில், நாங்கள் ஆஸ்பத்திரியில் அவள் படுக்கையி னருகில் கவலையுடன் உட்கார்ந் திருந்தோம். சீக்கிரம் அவளுக்குச் சொஸ்தமாகி விட்டது. அவள் நல்ல திடமான குழந்தையான தால், ஆபரேஷனைப்பற்றி ஒன்றும் நான் கவலைப்படவில்லை. ஆனால் இந்த ஆபரேஷன் சிரமம் எல்லாம் அவள் மனசுக்கு எப்படி இருக்குமோ? அவள் சௌக்கிய மாகி ஆஸ்பத்திரியிலிருந்து வீடு திரும்புவதற்குள் நான் பிரசவித்துவிட்டால் என்ன செய் வது?—இதுதான் எனக்குக் கவலையாயிருந்தது. ஆனால் மறு நாளே பெக்கி உடம்பு குண மடைந்து எழுந்துவிட்டாள். என் னைப் பார்க்காமல் இருப்பதைப் பற்றி ஒன்றும் அவள் வருந்த வில்லை. ஆனால் தன் ஆபரேஷனுக் கும் தங்கைப் பாப்பாவுக்கும் ஏதோ சம்பந்தம் இருப்பதாக நினைத்துக் கொண்டு, "என் அம்மா, வீட்டுக் குப் போனால் தங்கைப் பாப்பா வைப் பார்க்கலாமோ இல் லையோ?" என்று கேட்டாள். "தங்கைப் பாப்பா இல்லையே!" என்று நான் கூறினேன். அவள் சற்றும் தயங்காமல், "சரி; அப்படி யானால் தம்பிப் பாப்பாவைப் பார்க் கப் போகிறோம்" என்று சொல்லி விட்டாள். பெக்கி ஆஸ்பத்திரி யிலிருந்து வீடு திரும்பி வருவதற்குள் நான் பிரசவிக்காமலிருந்தால் தேவலை என்று எண்ணினேன். நல்ல காலமாய் அந்த எண்ணம் பலித்தது.

"ஆபரேஷனே அவளுக்கு மறந்து போய்விட்டதுபோல் இருக்கிறதே!" என்றார்கள் என் சிநேகிதர்கள். பிடிக்காத விஷயத் தைச் சிறு குழந்தைகள் மறந்து விடுவது சகஜந்தான். ஆனால், 'இது வேறு ஏதாவது அர்த்தமற்ற பயங் களைக் கொண்டு வந்து விடப்போகி றதே!' என்று நான் கவலைப் பட்டேன். ஆகவே, அவளுக்கு வயிற்றை வலித்தது, அதற்காக அவள் ஆஸ்பத்திரியில் இருந்தது, அவளை அழ அழ அப்பா அம்மா இருவரும் ஆஸ்பத்திரியில் விட்டு வந்தது-இதையெல்லாம் கதையாக ஜோடித்து அவளுக்குக்கூறினேன். பெக்கி கேட்ட மாதிரியிலிருந்து அவளுடைய ஆபரேஷனுக்கும் தங்கைப் பாப்பா பிறப்பதற்கும் சம்பந்தம் ஒன்றுமில்லை யென்பது அவளுக்கு நன்றாய்த் தெரிந்து விட்டதுபோலவே தோன்றிற்று. கடைசியாக, நான் ஆஸ்பத்திரிக் குச் செல்லும் வேளை வந்ததும், இவ் வளவு நாளாகச் செய்த முயற்சி யெல்லாம் வீண் போகவில்லை என்று தெரிந்தது. நான் இல்லாமல் பாட்டியுடன் வீட்டில் இருக்க, பேசாமல் அவள் சம்மதித் தாள். அடுத்த வாரம் அவள் தங்கைப் பாப்பாவும் வந்து சேர்ந் தாள். நான் குழந்தையை வைத் துக்கொண்டிருப்பதைப் பார்க்கும் போது சில சமயம் அவளுக்குப் பொறுமை உண்டாகும். அவளை நான் கவனிக்கவில்லை என்று என் மீது ஆத்திரப்படுவாள். ஆயினும், மொத்தத்தில் அவள் அதிகச் சிர மம் கொடுக்கவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். தங்கைப் பாப்பாவிடம் மிகவும் ஆசை யாகவே இருந்தாள். எப்போ தாவது தன் விளையாட்டுப் பொம்மைகளைத் தங்கைப் பாப்பா எடுத்துவிட்டால்தான், அவளுக் குக் கோபம் வரும். இருந்தாலும் தங்கைப் பாப்பாவின் வருகை அவ ளுக்குச் சாதாரண விஷயமாகத்

தோன்றவில்லை. நான் ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்கு வந்த அன்று இரவே தங்கைப் பாப்பாவைப் பற்றி ஒரு கதை சொல்லும்படி பெக்கி கேட்கத் தொடங்கினாள். நான் ஆஸ்பத்திரிக்குச் சென்றது, பெக்கி தனியாய்ப் பாட்டியுடன் வீட்டில் இருந்தது, தங்கைப் பாப்பாவுடன் ஆஸ்பத்திரியிலிருந்து நான் திரும்பி வந்தது ஆகிய வரலாற்றையே அப்புறம் பல நாள் வரைக்கும் தினம் நான் சொல்லும்படி செய்தாள்.

"தங்கைப் பாப்பாவுக்காக ஆஸ்பத்திரிக்கு ஏன் போகவேண்டும், அம்மா?" என்று ஒவ்வொருநாளும் பெக்கி கேட்டாள். "ஏனென்றால், அங்கே போய்ப் பாப்பாவைக் கொண்டு வருவதற்காகத்தான்" என்று நான் பதில் சொல்லுவேன். அவள் அதை ஒரு கதையாக நினைத்துக் கேட்டது எங்களுக்குச் சௌகரியமாக இருந்தது.

பெக்கிக்கு இரண்டரை வயதானதும், இரவில் நான் அவளுக்குக் கூறும் கதையில் மாறுதல் ஏற்பட்டது. தங்கைப் பாப்பாவைப் போல் தானும் ஒரு சின்னக் குழந்தையாக இருந்ததைச் சொல்லும்படி அவள் கேட்கத் தொடங்கினாள். நானும் கூடிய மட்டும் ஞாபகப்படுத்திக்கொண்டு அதைக் கூறினேன். கேட்டுக் கேட்டு அது அவளுக்கு மனப்பாடமே ஆகிவிட்டது. தங்கைப் பாப்பாவை எவ்வளவு அக்கறையோடு இப்போது கவனிக்கிறேனோ அவ்வளவு அக்கறையோடு பெக்கியையும் அவள் சின்னக் குழந்தையாக இருக்கும்போது கவனித்தேன் என்றெல்லாம் சொன்னேன். அதைக் கேட்கும்போது அவள் மனசுக்கு ஆறுதலாயிருந்தது என்று நினைக்கிறேன். தங்கைப் பாப்பாவை அம்மா எடுத்து விடுவதோடு சரி; தனக்கோ அதோடு பாட்டில் பாலும் கிடைத்தது என்ற விஷயம் அவளுக்குச் சற்றுப் பெருமையையே அளித்தது. ராத்திரி கதை சொல்லும்போது ஒவ்வொரு நாளும், "நான் இனிமேல் பாப்பா இல்லை; பெரியவள்" என்று வேறு பெருமைப் பட்டுக்கொண்டாள்.

குளிர் காலம் வந்ததும், பெக்கிக்குத் தொண்டை அடிக்கடி புண்ணாகி உடம்புக்கு வந்தது. கடைசியில் தொண்டையில் ஆபரேஷன் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆகவே, ஆபரேஷனுக்குச் சில நாள் இருக்கும்போதே, ஆஸ்பத்திரிக்குப் போவதைப் பற்றியும் ஆபரேஷனைப்பற்றியும் ஒரு கதையாகக் கூறியும் நடித்தும் காட்டினேன். கதையை டைப் செய்து, பெக்கி, டாக்டர், நர்ஸ் இவர்களோடு ஆஸ்பத்திரி ரூமையும் படம் வேறு போட்டு விவரமாய்க் காட்டினேன். இவை எல்லாம் நல்ல பலன் அளித்தன. ஆஸ்பத்திரிக்குப் போகும் வரையில் பெக்கி கொஞ்சங்கூடப் பயப்படாமல் உற்சாகமாகவே இருந்தாள். ஆனால், அங்கே போனதும் அவளுக்குப் பயம் உண்டாகிவிட்டது. நாங்களோ அவளுடன் இருக்கக் கூடாது. அது ஆஸ்பத்திரி ரூம். ஆபரேஷனுக்குப் பிறகு மயக்கம் தெளிந்ததும் அவளுக்கு மிகவும் கலவரம் எற்பட்டுவிட்டது. ஆயினும் சௌக்கியமாகி வீட்டுக்குத் திரும்பி வந்தவுடன், அவள் மீண்டும் பழையபடி உற்சாகமாய், ஆஸ்பத்திரி நினைவு கொஞ்சமும் இல்லாமல் சந்தோஷமாயிருந்தாள்.

இருந்தாற் போல் இருந்து ஒரு நாள், "அம்மா, பெக்கி ஆஸ்பத்தி

ரிக்கு எதற்குப் போனாள், தெரியுமா?'' என்று கேட்டுவிட்டு, அந்தக் கதையை அவளே சொல்லத் தொடங்கினாள். அப்புறம் ஒரு வாரம் வரையில் தினம் அதையே விவரித்துக் கூறுவாள். டாக்டர் முகமூடி அணிந்து கொண்டிருந்தது, நர்ஸ் தன்னை ஆபரேஷன் மேஜையில் படுக்க வைத்தது ஆகிய ஒவ்வொரு விஷயத்தையும் வர்ணித்துச் சொல்லுவாள். அவள் தொண்டை சரியான பிறகுதான், அவளுக்குக் கொஞ்சங் கொஞ்சமாய் அதைச் சொல்லுவதிலுள்ள சிரத்தை குறைந்தது. நான் அவளுக்குக் கூறும் கதைகள் எல்லாம் ஒரே மாதிரியானவை அல்ல.

பட்டணம் சுற்றிப் பார்த்தது, அவளுடைய பிறந்த நாள் கொண்டாட்டம் போன்றவைபற்றியும் நல்ல கதைகள் ஜோடித்துச் சமயத்துக்கேற்றபடி காது மூக்கு வைத்துக் கூறுவேன்.

இப்போது பெக்கிக்கு மூன்று வயது. இந்த நாளில் அவளுக்கு விளையாட்டில் அதிகக் கவனம் செல்லுகிறது. விளையாடும் போது அவள் தானாகவே தனக்குத் தோன்றியபடி கதைகள் புனைந்து சொல்லிக்கொண்டிருப்பாள். என்னிடம் கதை கேட்டுக் கேட்டு அவளுடைய கற்பனைத் திறனும் வளர்ச்சி பெற்றிருக்கிறது. தானே கற்பனை செய்த கதைகளை அவள் கூறுவதனால், அவள் மனத்தில் கவலைகள், ஆயாசங்கள் எவையேனும் இருந்தால் அவைகளெல்லாம் பறந்துபோகின்றன.

க்விஸ் விடை

(1) மேட்டூர் அணைக்கட்டு. (2) பின்னங்காலை. (3) சுமார் 30 வருஷத்தை, (4) ஒரு மணிநேரம். (5) வில்லியம் விட்னி போர்ட்டர். (6) துடை எலும்பு. (7) ஒன்பது வாரம். (8) முந்திய தலைநகரம் கல்கத்தா. ஐந்தாம் ஜார்ஜ் தம்பதிகள் 1911-இல் டில்லி தர்பார் நடத்தியது வரை. (9) அமாவாசையுடன் வருவது சித்திரை இறுதியில் அல்லது வைகாசித் தொடக்கத்தில்; பௌர்ணமியுடன் வருவது கார்த்திகையில். (10) முடியாது. 600 ரூபாய் வரையில்தான் ஒரே மணியார்டரில் அனுப்பலாம். (11) ஒட்டகம். (12) பாண்டியன். (13) பக்கத்தில் உள்ள படத்தின்படி கோடுகள் இழுப்பது ஒரு வழி.



என்னைக் கேளுங்கள்

காப்டன் என். சேஷாத்திரிநாதன்

வைத்தியம், சுகாதாரம், ஆரோக்கியம் இவைபற்றி 'மஞ்சரி' வாசகர்கள் கேட்கும் கேள்விகளுக்கு இயன்றமட்டில் பதிலளிக்க, இந்த டாக்டர் இசைந்திருக்கிறார். வைத்தியத் துறையில் கல்வியும் அநுபவமும் நிறைந்தவர் இவர்; முக்கியமாக, ரத்த பரிசோதனை நிபுணர்; சிறிது காலத்துக்கு முன் வரையில் கிண்டி இன்ஸ்டிட்யூட் அதிகாரியாக இருந்தவர்.

கி. வா. ஜ.

கேள்வி: 1: சாப்பிடும்போது நடுவே தண்ணீர் குடிக்கலாமா?

விடை: கடவுளுக்கு நைவேத்தியம் வைக்கும்போது 'மத்யே, மத்யே, அமிர்தபானீயம்' என்று சொல்லி உபசரிக்கிறோம். நமக்கு அமிர்தமென்பது குளிர்ந்த தண்ணீர்தான். சாப்பிடும்போது அடிக்கடி அதைக் குடிப்பது அவசியமென்றுதான் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் கட்டியான ஆகாரம் தொண்டையில் தங்கித் திணறல் ஏற்படலாம்.

கேள்வி 2: எனக்கு அடிக்கடி தண்ணீர் குடிக்கும் பழக்கம் உண்டு. எதையாவது எழுதினாலும் படித்தாலும் தண்ணீர் குடித்தால் சுறுசுறுப்பாக இருக்கும். இதனால் ஏதேனும் கெடுதி உண்டா?

விடை: தண்ணீர் குடித்துச் சுறுசுறுப்பு வருகிறதென்றால், சிலர் நம்ப மாட்டார்கள். மதுவிலக்கில் ஊக்கமுடையவர்களைக் கேட்டால், அடிக்கடி குடிப்பதால் கெடுதியில்லை என்பார்கள். ஆனால் தேயிலை, காபி வியாபார விளம்பரக்காரர்களை மட்டும் கேட்டுவிட லாகாது!

கேள்வி 3: கொஞ்சம் புளிப்புப் பட்டாலும் பல் கூசுகிறது. இதற்கு மாற்று இருந்தால் சொல்லுங்கள்?

விடை: தந்த சோதனை செய்து கொள்ளுங்கள். பற்கள் சற்றுத் தேய்ந்து போயிருக்கலாம்.

கேள்வி 4: எண்ணெய் தேய்த்துக்கொண்டால் பகலில் தூங்கக் கூடாது என்கிறார்களே. அது உண்மையா? அப்போதுதான் நன்றாய்த் தூக்கம் வருகிறது.

விடை: எனக்குத் தெரிந்த ஒருவர் எண்ணெய் தேய்த்துக் கொண்ட தினத்தில் பத்தியமாக இருந்ததோடு பகலில் தூங்காமலும் இருந்து வந்தார். எழுபத்தைந்து வயது வரையில் ஆரோக்கியமாக வாழ்ந்தார்.

கேள்வி 5: ஒருவர் கொட்டாவி விட்டால் அருகில் இருப்பவர்களுக்கும் கொட்டாவி வருகிறதே. இதற்கு என்ன காரணம்?

விடை: கொட்டாவி ஒரு வகைத் தொத்து வியாதி போன்றதுதான்.

கேள்வி 6: மூட்டைப் பூச்சிக் கடியால் தூக்கம் கெட்டுப்

போகிறது. அதனால் வேறு தீங்கோ வியாதியோ உண்டாகுமா?

விடை: வியாதியைப் பரப்புவதில் பெயர் வாங்க வேண்டுமென்று மூட்டைப் பூச்சி சில காலம் முன் நின்றது. ஆனால் நிபுணர்கள் அதைப் புறக்கணித்து விட்டார்கள். ரத்தம் குடித்து நமக்குச் சோகையைக்கூட அது விளைத்ததாகத் தெரியவில்லை. ஆனால் மூட்டைப் பூச்சியால் நித்திரை குலைந்து போவதை வேண்டுமானால் ஒரு வகை வியாதியாகக் கருதலாம்.

ஸ்ரீநிவாசன், சென்னை:

கேள்வி 1: பல்லைக் கையால் தேய்ப்பது நல்லதா; பிரஷ்ஷைக் கொண்டு தேய்ப்பது நல்லதா? பல்பொடியைவிடப் பல் பசை சிறந்ததா? க்ளோரெஃபில் கலந்த பல்பசை என்பது என்ன?

விடை: உமிக் கரிப்பொடியாயிருந்தால், கையால் தேய்த்து விட்டுப் பிரஷ்ஷைக் கொண்டு துலக்கவேண்டும். அப்போது பல் விடுக்குகளிலிருந்து உணவு மிச்சங்கள் வெளியாகிப் பல் சுத்தமடையும். பல் பொடிகள் எத்தனையோ இருக்கின்றன. பல் பசைகள் எத்தனையோ இருக்கின்றன. இவைகளுடைய குணதோஷங்களைத் தனித்தனியே ஆராய்ந்தால்தான் வித்தியாசம் தெரியும். க்ளோரெஃபில் கலந்த பல் பசை என்ன என்று தெரியவேண்டுமானால், அதைச் செய்து விற்பவரைத்தான் கேட்க வேண்டும். க்ளோரெஃபில் என்னும் பொருள் பச்சை இலைகளில் இருக்கிறது.

கேள்வி 2: மூட்டைப் பூச்சிகள் எப்படித் தோன்றுகின்றன? அவை உண்மையிலேயே நம் ரத்தத்தை உறிஞ்சுகின்றனவா? அவைகளை எப்படி அழிப்பது?

விடை: மக்களே ஓரிடமிருந்து மற்றோர் இடத்துக்கு மூட்டையோடு மூட்டையாக மூட்டைப் பூச்சிகளைக் கொண்டு வரலாம். மனிதர்கள் உட்காரும் நாற்காலி, படுக்கும் கட்டில் முதலிய இடங்களில் அவை முட்டை பொரித்துக் குஞ்சும் குட்டியுமாக வளர்ந்து பெருகுகின்றன. நாற்காலி, கட்டிலிலிருந்து மூட்டைப் பூச்சியை நசுக்கிப் பார்த்தால், அது நம் ரத்தத்தை எவ்வளவு உறிஞ்சுகிறது என்பதை அறிந்து கொள்ளலாம். இந்தப் பூச்சிகளை அழிப்பது அசாத்தியமென்றே சொல்லலாம். டி. டி. டி. மருந்தை வேண்டுமானால் உபயோகித்துப் பாருங்கள்.

கேள்வி 3: எனக்கு முகம் முழுவதும் அடிக்கடி பருக்கள் கிளம்புகின்றன. 'சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கொள்' என்று சிலர் இதற்கு வைத்தியம் சொல்கிறார்கள். உண்மையில் கல்யாணம் செய்துகொள்ளாமல் இருப்பதற்கும் பருக்கள் வெடிப்பதற்கும் சம்பந்தம் உண்டா?

விடை: பருக்கள் பருவகாலத்தின் அறிகுறி. இந்தக் காலம் முற்றும்போது கல்யாணம் செய்து கொள்வார்கள். அப்போது பருக்கள் நீங்கிவிடுகின்றன. 'காக்கை உட்கார்ந்ததும் பனம்பழம் விழுந்த' கதைதான்!

கேள்வி 4: எவ்வளவு நேரம் தூங்குவது நல்லது?

விடை: வயோதிகர்களைக் கேட்காதீர்கள்.

ம. து. சி. கொழும்பு: இவர் கேட்கும் கேள்வியை விரிவாக எழுதப் போவதில்லை. கேள்வி

யில் குறிப்பிட்ட உறுப்பின்மீது அதிகக் கருத்துச் செலுத்துவதே இந்த வியாதிக்குக் காரணம். அந்த உறுப்பு இருப்பதைச் சற்று மறந்துவிட்டால் வியாதி தீரும்.

பி. வேதகிரி, கடலூர்: ரத்த அழுத்தம் (ப்ளட் ப்ரஷர்) என்ருல் என்ன? இந்த வியாதியைக் குணப்படுத்த என்ன சுகாதார விதிகளை அநுசரிக்கவேண்டும்?

விடை: ரத்த அழுத்தமில்லாமல் உடலெங்கும் ரத்தம் பாய்ந்து கொண்டே இராது. அது இயற்கை யளவை மிஞ்சிப் போனல் வியாதிக் கோளாருகும். சில சுகாதார விதிகளை அநுசரித்தால், ரத்த அழுத்தத்தைச் சற்றுக் குறைத்துக்கொள்ளலாம். மிதமாக உண்ணவேண்டும்; கவலைகளைக் குறைத்துக்கொள்ள வேண்டும்; நடை போன்ற உடற்பயிற்சி செய்து உடலிலிருந்து அசுத்தங்களை நீக்கிக்கொள்ள வேண்டும். ரத்த அழுத்தம் தோன்றுவதற்கு அடிப்படையான காரணத்தைக் கண்டுபிடிக்க வைத்தியரை அணுகிக் கேட்டுக்கொள்ள வேண்டும்.

அனந்தராஜன், முதுக்கூர்:

கேள்வி: தினம் அரைப்படி பால் குடிப்பதால் க்ஷயரோகம் உண்டாகுமென்கிருர்களே; இது உண்மையா? பால் சாப்பிடுவதால் என்ன நன்மைகள் உண்டு?

விடை: எனக்குத் தெரிந்த மட்டும் பால் சாப்பிடுவது க்ஷயரோகத்தைக் குணப்படுத்தவே. பால் குடிப்பதால் எத்தனையோ நன்மைகள் உண்டு. சமீபத்தில் 'தினமணி' பத்திரிகையில் இந்த விஷயத்தைப்பற்றி விரிவாக ஒரு கட்டுரை வெளியாகியிருக்கிறது.

சோ. கண்ணு, கீழ்ப்புலியூர், தென்காசி:

கேள்வி: நான் என் மூக்கைக் கண்ணாடியில் பார்க்கும்போது மூக்கின் வலது துவாரத்தில் உள் பக்கமாக ஏதோ பந்து போன்ற உருவம் அடைத்துக்கொண்டிருக்கிறது. சிறிது இடைவெளி இருக்கிறது. அதன் வழியாகச் சுவாசிக்க முடிகிறது. சதை வளர்ந்திருக்கிறதோ என்று நான் சந்தேகிக்கிறேன். இதற்கு என்ன செய்யவேண்டும்?

விடை: கண்ணாடியைப் பார்க்காமல் இருக்கலாம். நண்பர் காண்பது இயற்கையான தோற்றமாய்த் தான் இருக்கும். ஆயினும் சந்தேகம் வந்து விட்டதால், நாசி வைத்தியரைத் தேடி அதைத் தீர்த்துக் கொள்வதுதான் நலம்.

கே. ஏ. துப்புசாமி, பரமக்குடி:

கேள்வி 1: என் உடம்பில் 'தேமல்' ஏற்பட்டு வருகிறது. இதற்குக் காரணம் என்ன? இதனல் ஏதாவது தீமை ஏற்படுமா? இதைப் போக்க வழி உண்டா?

விடை: தேமல் ஒரு வகைத் தொத்துச் சரும வியாதி. அதனல் தீமை ஒன்றும் இல்லை. அதை விரைவில் குணப்படுத்த முடியும். மருந்து விஷயமாய் வைத்தியரை நேரில் கேட்பதுதான் பயனளிக்கும்.

கேள்வி 2: காபி சாப்பிடுவதனல் ஏற்படும் நன்மை தீமைகளை விவரிப்பீர்களா?

விடை: முக்கியமான தீமை காபி சாப்பிடும் பழக்கம். வேறு தீமைகளையும் நன்மைகள் உண்டானல் அவைகளையும் இங்கே விரிவாகச் சொல்ல இடமில்லை. காபிக் கொட்டை விலையைப் பார்க்கும்போது, குடும்பச் செலவு அநாவசியமாக அதிகரிக்குமென்பது ஒரு தீமைதானே?

கேள்வி 3: என் வயது பதினாறு முடிந்து பதினேழாவது. என் உயரம் எவ்வளவு, எடை எவ்வளவு இருக்கவேண்டும்?

விடை: உயரம் அநேகமாய்க் குடும்பத்தைப் பொறுத்தது. எடை உயரத்தையும் வயதையும் பொறுத்தது. இன்ஷூரன்ஸ் கம்பெனியார் பாலிஸிக்கு ஏற்றுக்கொண்டால், உங்கள் எடை, வயதுக்கும் உயரத்துக்கும் தக்கதென்று சொல்லலாம்.

வி. ஆர். ஜே. எஸ். எம்., சென்னை:

கேள்வி: சுமார் பதினாறு வயதுள்ள என் நண்பருக்கு அடிக்கடி மூக்கின்மேல் பரு மாதிரி கட்டிகள் வருகின்றன. இதனால் முகத்தின் அழகே குன்றி வருகிறது. விஞ்ஞான ரீதியில் பரிகாரம் கூறுவீர்களா?

விடை: பெனிசிலின் போன்ற மருந்துகளை அடிக்கடி பிரயோகித்து முக அழகு கெட்டுப் போகாமல் காப்பற்றிக்கொள்ளலாம். வயிற்றில் புளிப்புத் தட்டும் பொருள்களாகிய சர்க்கரைப் பதார்த்தங்களைச் சிறிது குறைத்துக்கொள்ளலாம்.

'பானு', சென்னை:

கேள்வி: 'வாசக்டமி' என்னும் எளிய ரண சிகிச்சையின் குண விசேஷங்களும் குண பேதங்களும் என்ன என்ன? உலக ஜனப் பெருக்கத்தைக் குறைக்கும் வழிகளில் இந்த முறையைக் கடைப்பிடிப்பதால் ஏற்படக்கூடிய நன்மை தீமைகள் எவை? இந்த ரண சிகிச்சையின் காரணமாக ஆண் மகனின் தேகாரோக்கியம் எந்த வகையிலாவது குன்றக் கூடுமா?

விடை: 'வாசக்டமி'யின் குண விசேஷம் ஒன்றே ஒன்றுதான். அது சந்ததி உற்பத்தியைத் தடுப்பது. வெகு யோசனைக்குப் பிறகே இதைச் செய்துகொள்ள வேண்டும். இதற்குப் பிறகு, இதைச் செய்துகொண்ட புருஷனால் குழந்தை உண்டாக வேண்டுமென்றால் சாத்தியமில்லை. இதனால் மனநிலைக்கு வரும் தோஷங்களை, இந்த ரண சிகிச்சை செய்துகொண்ட பேரிடமும் அவர்களுடைய மனைவியரிடமும் கேட்டால் தெரியும். இந்த முறையை ஜனப் பெருக்கம் குறையப் பயன்படுத்துவதாகத் தெரியவில்லை. இந்தச் சிகிச்சையால் ஆண்மையும் ஆரோக்கியமும் குறைவதில்லை என்று ஹாவ்லக் எல்லிஸ் போன்ற நிபுணர்கள் கூறுகிறார்கள்.

ஏ.பி. ராகவன், திருச்சி ஜங்ஷன்:

கேள்வி: கக்குவான் இருமல் நிவர்த்தியாகத் தங்களுக்குத் தெரிந்த ஏதாவது மருந்து சொல்வீர்களா?

விடை: கக்குவானுக்குப் பல நல்ல மருந்துகள் இருக்கின்றன. நோய் விரைவில் குணமாகக்கூடும். மருந்து விலை சற்று அதிகம். வைத்தியரிடமிருந்து எழுதி வாங்கிக் கொள்ளலாம்.

பொறுப்பும் சுதந்தரமும்

சுதந்தரமும் பொறுப்பும் சையாம் இரட்டைக் குழந்தைகளைப் போன்றவை. ஒன்றை விட்டு மற்றொன்றைப் பிரித்தால், இரண்டும் மடிந்துவிடும்.

—லிலியன் ஸ்மித்

க்விஸ்

[இதோ சில கேள்விகள். எங்கே, உங்களுக்கு விடை தெரிகிறதா பாருங்கள். பிறகு வேறு பக்கத்து விடையுடன் ஒப்பிட்டுக்கொள்ளுங்கள்.]

1. இந்தியாவுக்குள்ளேயே மிகப் பெரிய அணைக்கட்டு எது தெரியுமா?

2. பூனை சில சமயம் தன் தலையைச் சொறிந்துகொள்கிறதே; அப்போது முன்னங்காலையா பின்னங்காலையா எதை உபயோகிக்கிறது என்று கவனித்திருக்கிறீர்களா?

3. 'ஒரு தலைமுறைக்கு முன் நடந்தது' என்கிறோமே? அப்படி என்றால், அது சுமார் எத்தனை வருஷத்தைக் குறிக்கும்?

4. அரை மைல் நீளம் ஒரு ரெயில் பாதையில் ரிபேர் நடந்து கொண்டிருந்தது. மணிக்கு ஒரு மைல் வேகம் ஓடும் ஒரு குட்ஸ் வண்டி அங்கே வந்தது. வண்டியின் நீளமும் அரை மைல்தான். அது இந்த அரை மைல் தூரத்தைக் கடந்து முடிக்க எவ்வளவு நேரமாகும்?

5. ஓ'ஹென்ரி என்ற அமெரிக்க ஆசிரியரின் உண்மைப் பெயர் வேறு. அது என்ன என்று சொல்லுவீர்களா?

6. மனிதனின் உடம்புக்குள்ளே மிக நீளமும் பெரியதுமான எலும்பு எது?

7. நம் வீடுகளில் சில சமயம் வந்து மொய்க்கிறதே ஈ; இது சுமார் எவ்வளவு காலம் உயிரோடு வாழும்?

8. இப்போது இந்தியாவின் தலைநகரமாயிருப்பது டில்லி: இதற்கு முந்திய தலைநகரம் எது? அது எதுவரைக்கும் தலைநகரமாக இருந்தது?

9. அமாவாசையுடன் கிருத்திகையும் பௌர்ணமியுடன் கிருத்திகையும் சேர்ந்து வருவது எந்த எந்த மாதங்களில்?

10. 700 ரூபாய் பணத்தை ஒரே மணியார்டரில் அனுப்ப முடியுமா?

11. நாலுகால் பிராணிகளுக்குள் நீந்தத் தெரியாதது ஒரே ஒன்று தான் என்கிறார்கள். அது எது?

12. தமிழ் வேந்தர்களில் வேப்ப மாலை சூடினவன் யார்?

13. இதோ சில புள்ளிகள் இருக்கின்றன: ஏ-என்ற புள்ளியிலிருந்து



ஆரம்பியுங்கள். தொடர்ந்து நேர்க்கோடுகள் இழுத்து, பி-என்றபுள்ளியில் முடிக்கவேண்டும். ஒரு முறை தொட்ட புள்ளியை மறு முறை தொடக்கூடாது; கோடுகள் ஒன்றையொன்று குறுக்கிட்டுச் செல்லக் கூடாது. எங்கே, இழுங்கள் பார்க்கலாம்.

மீண்டும் மனோவசியம்

★



‘ஹிப்னாட்டிஸம்’ என்ற மனோவசியத்துக்கு மாறி மாறி விபத்தும், புத்துயிரும் வந்துகொண்டிருக்கின்றன. இப்போது, அதற்கு மறுபடியும் வைத்திய நிபுணர்களிடமே ‘மவுசு’ ஏற்பட்டிருப்பதை விளக்கும் ‘டைம்’ பத்திரிகைக் கட்டுரையையும், அமெரிக்கப் பொருள் அகராதி ஒன்றில் காணும் சில குறிப்புகளையும் இங்கே தந்திருக்கிறோம்.

இந்த விவரத்தைப் படிப்பதற்கு முன் ஹிப்னாட்டிஸம், மெஸ்மெரிஸம் என்ற வார்த்தைகளின் பொருளைத் தெரிந்துகொள்வது அவசியம். இவைகளுக்கு ‘தி ந்யூ அமெரிக்கன் என்ஸைக்ளோபீடியா’ தரும் பொருள் இது:

ஹிப்னோஸிஸ் என்றால், ஆழ்ந்த தூக்கத்தக்கு இணையான ஒரு நிலை. பெரும்பாலும் செயற்கை முறைகளால், அந்தத் தூக்க நிலையை ஒருவரிடம் மூட்டுவதுதான் ஹிப்னாட்டிஸம். இந்தச் செயற்கைத் தூக்க நிலையில், மனத்தின் உப - ப்ரஞ்ஞை (ஸப் கான்ஷஸ் மைண்டு) வேலை செய்து கொண்டேயிருக்கும். இந்த நிலையில் இருப்பவர், பிறர் சொல்லும் சொற்களுக்குச் செவி கொடுப்பார்கள்.

கீழ் நாட்டில் அநாதி காலமாகவே, இந்த ஹிப்னாட்டிஸ முறை தெரிந்திருக்கிறது. ஆனால், ஐரோப்பாவில் பதினெட்டாம் நூற்றாண்டில்தான் இதை எஃப். ஏ. மேஸ்மேர் என்பவர் புகுத்தினார். அவர் 1734 முதல் 1815-வரை வாழ்ந்த ஆஸ்திரிய டாக்டர்.

மெஸ்மெருக்கு ஜோஸ்யத்தில் மிகுந்த நம்பிக்கை. நட்சத்திரங்களிலிருந்து வெளிப்படும் ஏதோ ஒருசக்தி வந்து மனிதர்களை ஆட்டிவைப்பதாக இவர் எண்ணினார். இந்தக் கற்பனைச் சக்திதான் எலெக்ட்ரிஸிட்டியாக இருக்கும் என்று, மதித்து அதைக் கொண்டு மனிதர்களை ஆட்டிவைக்க முதலில் முயன்றார். அது பலிக்காமல் போகவே ‘மாக்னட்டிஸம்’ என்ற காந்த சக்தியைப் பிரயோகித்துப் பார்த்தார். நோயாளிகளைக் ‘காந்த’த்தைக் கொண்டு தடவினார். இதையே சிகிச்சையாகக் கொண்டு ஒரு வைத்தியசாலை அமைத்துவிட்டார். கடைசியில், காந்தத்தையும் கைவிட்டார். நட்சத்திரங்களிடமிருந்து வரும் சக்தி தம் உடம்பிலேயே இருப்பதாகச் சொல்லி நோயாளிகளைத் தாமே தடவ ஆரம்பித்துவிட்டார்.

வியன்னாவில் இருந்த இவருடைய ஸ்தாபனத்தைப் பின்னால் போலீஸார் கலைத்துவிட்

டார்கள். இவரையும் நாடு கடத்தினார்கள். இவர் பாரிஸ் நகருக்குப் போய்ச் சேர்ந்தார். வைத்திய நிபுணர்கள் இவரை வெறும் ஏமாற்றுக்காரர் என்றார்கள். ஆயினும் இவருடைய முறை அங்கே மிகவும் பிரபலம் அடைந்து விட்டது. கொஞ்ச காலத்துக்கெல்லாம் பிரெஞ்சு அரசாங்கத்தார் ஒரு கமிஷனை நியமித்து, இவருடைய 'ஸேயான்ஸ்' என்ற ஹிப்னாட்டிஸக் கூட்டங்களை விசாரணை செய்யச் சொன்னார்கள். தம் முறைபற்றி இவர் சொன்ன பல விளைவுகள் உண்மை என்று ருசுவாயின. ஆனால், 'அனிமல் மாக்னட்டிஸிம்' என்ற ஜீவ காந்தம்பற்றி இவர் சொல்லிய கொள்கையைக் கமிஷன் ஒப்புக் கொள்ளவில்லை. மனத்தத்துவ ரீதியான கிளர்ச்சி (ஸைக்கலாஜிக்கல் ரியாக்ஷன்) காரணமாகவே அந்தப் பலன்கள் விளைவதாகக் கமிஷன் கருதியது.

இறுதியில் இவரைக் கண்டனம் செய்து, பாரிஸ் நகரை விட்டே துரத்திவிட்டார்கள். மெஸ்மெரிஸிம் என்ற சொல் இவர் பெயரை ஒட்டி உண்டாயிற்று.

பிறகு பல வருஷங்கள் இவருடைய முறை மங்கியிருந்தது. 1841-இல் பிரெய்டு என்பவர் இதற்கு மறுபடியும் உயிர் கொடுத்தார். 'ஸைக்கோ - தெராப்பி' என்ற மனச்சிகிச்சையில் ஹிப்னாட்டிஸிம் முக்கியமாய்ப் பயன்படுகிறது. 1941-இல் 14-பேர் கொண்ட ஒரு கோஷ்டியில் 12-பேரை அவர் ஹிப்னாட்டிஸிம் செய்துவிட்டார். அவர்களை ஓர் அறையில் வைத்தார்: தாம் வேறு ஓர் அறையில் இருந்தபடி, 'மைக்ரஃபோன்' மூலம் அவர்களுடன் 30 நிமிஷம் பேசினார். இவ்வளவுதான்; அவர்கள் 'ஹிப்னட்டைஸ்' (மனோவசியம்) ஆகிவிட்டார்கள். இனி, கீழே வருவது 'டைம்' (30-3-'53) என்ற பிரபல அமெரிக்கப் பத்திரிகையில் இப்போது வெளியாகி இருக்கும் விவரம்:

வைத்திய முறைகளுக்குள்ளே 'ஹிப்னோஸிஸ்' என்ற மனோவசிய முறை ஒரு துரதிருஷ்டக் 'குழந்தை.' வலியை மறக்கடிக்க நல்ல சாதனம் என்று ஒரு நூற்றாண்டுக்கு முன் அதற்கு மதிப்பு வர ஆரம்பித்தது. அந்தச் சமயத்தில் மயக்க மருந்து (ஈதர் அனீஸ்தீஸியா) கண்டுபிடித்து விட்டார்கள். மனோவசியம் மதிப்பிழந்தது. 60-வருஷத்துக்கு முன் அதற்கு மறுபடியும் சற்று உயிர் வர ஆரம்பித்தது. அந்தச் சமயத்தில் 'ஸைக்கோ - அனாலிஸிஸ்' என்ற மனக்கூறு ஆராய்ச்சி முறையை ஃப்ராயிட் வகுத்தார். மனோவசியத்தில் நிபுணர்களுக்கு இருந்த சிரத்தை மறுபடியும் போய்விட்டது. உடல் வைத்தியம், மன வைத்தியம் இரண்டிலும் இப்போது மூன்றாவது முறையாக மனோவசியத்துக்கு மதிப்பு வரத் தொடங்கியிருக்கிறது. பிரபல டாக்டர்கள் அதை ஆதரிக்கிறார்கள். 'நவீன வைத்தியத்தில் மனோவசியம்' (ஹிப்னோஸிஸ் இன் மாடர்ன் மெடிஸின்) என்ற பெயருடன் 11 பிரபல டாக்டர்கள் $7\frac{1}{2}$ டாலர் விலையில் ஒரு பாடபுஸ்தகமே எழுதியிருக்கிறார்கள். பதிப்பாசிரியர் ஜெரோம் எம். ஷ்னெக். பிரசுரகர்த்தர் தாமஸ்.

பழைய மெஸ்மெரிஸித்துக்கும் நவீன வைத்திய மனோவசியத்

துக்கும் ஒரு பெரிய வித்தியாசம் இருக்கிறது. மனோவசியமே வியாதியைக் குணப்படுத்தி விடும் என்று இன்றைய டாக்டர்கள் கருதவில்லை; ஆனால், முறையான இதரச் சிகிச்சைகளுக்கு மனோ வசியம் ஒத்தாசையாயிருக்கிறது என்றே கருதுகிறார்கள். நோயாளி மங்கிய ஓர் ஒளியையோ, ஏதாவது ஓர் இடத்தையோ கூர்ந்து பார்த்துக்கொண்டே இருக்கும்படி செய்யும் (ஐ ஃபிக்ஸேஷன்) என்ற முறையின் மூலம், அவன் 'ட்ரான்ஸ்' என்ற செயற்கைத் தூக்கத்தில் ஆழும்படி செய்கிறார்கள். அப்போது அவன் தன் சிரமங்களையெல்லாம் சொல்லிவிடுகிறான். அவன் தெளிந்து விழிப்பதற்குள், "நீ விழிக்கும்போது இதையெல்லாம் மறந்துவிடு" என்றோ, "மறக்காதே" என்றோ டாக்டர் யோசனை சொல்லுகிறார். நோயாளி சொன்னதையெல்லாம் அவன் விழித்த பின்பு மறக்க வேண்டியதில்லை யென்றால், அவனோடு டாக்டர் அவனுடைய சிரமங்களைப்பற்றி விவாதித்துப் பரிகாரம் சொல்லுகிறார். விழித்த பின்பு மறந்துவிட வேண்டுமென்றால், 'ட்ரான்ஸ்' நிலையிலேயே அவனுக்குரிய பரிகாரங்களை டாக்டர் சொல்லிவிடுகிறார்.

ஆனால் இந்த மனோவசிய முறையைக் கையாளும் டாக்டர் ஒரு சிறு தவறு செய்தால், பெருங்கேடு விளைந்துவிடுமாம். கடுமையான மனோவியாதி வரக்கூடிய நிலையில் இருப்பவனுக்கு இந்த முறையைப் பிரயோகிக்கக் கூடாதாம். இப்படியெல்லாம் ஷ்னெக் எச்சரிக்கிறார். பிறகு, டாக்டர்கள் தாங்கள் அறிந்த கேஸ்களை விவரிக்கிறார்கள்.

மன வைத்திய நிபுணரான (ஸைக்கியாட்ரிஸ்ட்) ஹெரால்டு ரோஸென் என்பவர் சொல்வது இது: 26 வயதுள்ள ஓர் ஆசாமிக்குக் கடுமையான மயக்கமும் கிறுகிறுப்பும் வந்துகொண்டிருந்தன. ஏதோ காது நரம்பில் கோளாறு இருப்பதுதான் காரணம் என்று எண்ணி அதற்கு ஆபரேஷன் செய்ய ஆஸ்பத்திரியில் அவனைச் சேர்த்துக்கொண்டார்கள். இது ஏதோ உணர்ச்சிக் கோளாறாகத்தான் இருக்கவேண்டும் என்று மன வைத்திய நிபுணர் ஒருவர் சந்தேகித்தார்.

அவனை முதல் முறை மனோவசியம் செய்தபோது, அவன் உடம்பு வெடவெடத்தது; வழக்கமான கிறுகிறுப்பும் மயக்கமும் அடைந்தான். இரண்டாவது தடவை மனோவசியத்தின்போது, ஏதோ ஒரு கப்பல் உடைந்து நீரில் அமிழ்வதைக் காண்பதாகச் சொல்லி, அதை மறக்க முயன்றான். அவனை அப்படி விடாமல் நிபுணர் மேலும் மேலும் தூண்டவே, ஏழு வருஷத்துக்கு முன் தனக்கு நேர்ந்த ஒரு நிகழ்ச்சி அவனுக்கு ஞாபகம் வந்தது. தான் ஒரு கப்பலில் சென்றதும், டார்ப்பிடோ வெடி தாக்கி அது நொறுங்கிக் கவிழ்ந்ததும், தன் வாலிபத் தோழர் பலர் அதில் மாண்டதும்பற்றி அவன் சொன்னான். 'ட்ரான்ஸ்' தெளிந்து விழித்தபோது அவனை விசாரித்ததில், தான் எப்போதும் இந்த நிகழ்ச்சிபற்றியே குறுகுறுவென்று எண்ணியும் கனவு கண்டும் வந்ததாக ஒப்புக்கொண்டான். அந்த ஞாபகத்தினால் ஏற்படும் மன வேதனையை மூடவே, அவனுக்கு மயக்கமும் கிறுகிறுப்பும் வருவதாக நிபுணர் தெரிவித்தார். ஆப

ரேஷன் வேண்டாம் என்றும், 'ஸைக்கியாட்ரிஸ்ட்' இடம் போய் மேலும் சிகிச்சை பெறும்படியும் அவனைத் திருப்பி அனுப்பிவிட்டார்கள்.

மனக் கோளாறு காரணமாக வயிற்றுவலி, தலைவலி, சர்ம வியாதி, சூதக நோய், காலை மயக்கம், தாய்ப்பால் கொடுப்பதில் சிரமம் இப்படிப் பல வியாதிகள் ஏற்படலாம் என்று ஷ்னெக்கும் அவருடைய சகாக்களும் சொல்கிறார்கள். இவைகளுக்கும் சரி, ரண சிகிச்சையில் வலி தெரியாதபடி மயக்க மூட்டவும் சரி, மனோவசியம் பயன்படுமாம். தவிர, ரண சிகிச்சைக்குரிய நோய் உண்மையானதா பொய்யானதா என்பதைக் கண்டுபிடிக்கவும் மனோவசியம் உதவுமாம்.

15-வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் அத்தனை பேரையும் மனோவசியம் செய்துவிடுவது சாத்தியமாம். மனக் கவலை (ஆங்ஸைட்டி), நரம்புக் கோளாறு (ஹிஸ்டீரியா) இந்த இரண்டிலொன்று காரணமாக ஏற்படும் விபரீதங்களுக்கு மனோவசியத்தை அநுஷ்டிக்கலாம் என்று லண்டன் 'ஸைக்கியாட்ரிஸ்ட்' கார்டன் அம்ப்ரோஸ் என்பவர் சொல்கிறார். விபரீதப் போக்குள்ள குழந்தைகளைத் திருத்தவும் மனோவசியம் பயன்படும் என்றுகூட அவர் கூறுகிறார்.

பல் வைத்தியத்தில் மனோவசியம் பெரிதும் பயன்படும் என்று ஹார்லெம் ஆஸ்பத்திரி டாக்டர் ஜூலீஸ் வீன்ஸ்டீன் என்பவர் சொல்கிறார். ஆனால், மனோவசியம் தனக்கு வேண்டாம் என்கிறவனுக்குப் பல் வைத்தியம் செய்யும்போது அதைப் பிரயோகிக்கக் கூடாதாம்.

இந்த டாக்டர்களெல்லாம் மனோவசியத்தின் பயனைப்பற்றி இவ்வளவெல்லாம் சொல்கிறார்களே; 'மனோவசியத்தால் ஏற்படும் உறக்க நிலை (ஹிப்னாட்டிக் ஸ்டேட்)' என்பது உண்மையில் என்ன என்று கேட்டால், "அது தான் தெரியவில்லை" என்கிறார்கள். அது தெரிந்து விடும்போது, மனோவசியம் வெகு நன்றாய்ப் பரவிப் பயன்படக்கூடும்.

சிறுமியின் வயது

சிறுமிகளின் வயசைப்பற்றி வாத்தியாரம்மாள் கேள்வி கேட்டுக்கொண் டிருந்தாள்.

"ஜேன், போன பிறந்த நாளில் உன் வயசு என்ன?"

"ஏழு, மேடம்."

"அடுத்த பிறந்த நாளில் உன் வயது என்னவாயிருக்கும்?"

"ஒன்பது, மேடம்."

"இதென்ன! போன பிறந்த நாளில் உன் வயசு ஏழு என்றாய். அடுத்த பிறந்த நாளில் அது எப்படி ஒன்பதாகும்?"

"ஆமாம், மேடம். அப்படித்தான். இன்று எனக்கு வயசு எட்டு நிரம்பிவிட்டது."

—'க்ரியோலைட் ந்யூஸ்'

எகிப்தியச் சிறுகதை:

திக்குவாயன்

ஏ. கே. அல் மஜ்னி

எகிப்து நாட்டில் பல சிறுகதை எழுத்தாளர்கள் தோன்றியிருக்கிறார்கள். அவர்கள் நவ நவமான கதைகள் எழுதுகிறார்கள். லேசான ஹாஸ்யமும் மனத்தத்துவக் குறிப்பும் தோன்ற இது அமைந்திருக்கிறது.

அப்தவுக்குப் பேச்சிலே ஓர் இடைஞ்சல் உண்டு. இவன் பேசத் தொடங்கினால், வார்த்தைகள் வாய்க்குள்ளேயே முன்னும் பின்னும் உருளுமே ஒழிய வெளியே வருவதில்லை. அதுபற்றி இவன் இதுவரைக்கும் கவலைப்படவில்லை. ஆனால் இப்போது இவனுக்கு இவன் அம்மான் பெண்ணிடம் காதல் உண்டாகிவிட்டது. இவன் அந்தப் பெண்ணிடம் என்ன சொல்வது? மாமியிடம் என்ன சொல்வது? மாமனிடந்தான் என்ன சொல்வது? அந்தக் குட்டியோ ரொம்ப நவீன நாகரிகக்காரி; மற்றப் பெண்களைப் போலவே தன் புருஷனைப்பற்றிப் பெருமையடித்துக்கொள்ள ஆசைப்படுவாள். இவன் காதலை அவள் எப்படிச் சகிப்பாள்? இன்னும் பெரிய மோசம் என்னவென்றால், இவன் எப்போது அவள் பக்கத்திலே இருந்தாலும் சரி; தன்னுடைய திக்குவாய்பற்றியே நினைப்பாயிருக்கிறான். அதனால் ஒரே ஊமையாகிவிடுகிறான். அவளிடம் ஏதாவது சொல்ல இவன் வாயெடுத்தால், 'அ-அ-அ-அ', 'ம-ம-ம-ம', 'க-க-க-க' என்ற சத்தங்களைத்தான் வெளியிட முடிகிறது. இந்த மாதிரி செய்தால், எந்தப் பெண்தான் இவனைப் பற்றிக் கேலியாக நினைக்க மாட்டாள்!

கடைசியில் இவனுடைய நண்பர்கள், "இன்ன டாக்டரைப் போய்ப் பார். அவர் இந்த மாதிரி வியாதிகளைத் தீர்ப்பதில் பெரிய நிபுணர்" என்று இவனுக்கு யோசனை சொன்னார்கள்.

அப்து அந்த டாக்டரைப் பார்க்கப் போனான்.

அவரைக் கண்டதும் வாயைத் திறந்து, 'ஷு-ஷு-ஷு-ஷு', 'இல்-இல்-இல்-இல்' என்றானே தவிர, அதற்குமேல் ஒன்றும் வெளியிடவில்லை.

"சரிதான், சரிதான். இது சாதாரண நரம்புக் கோளாறு; அவ்வளவு தான்" என்றார் டாக்டர்.

தன் நரம்புகளில் எந்த விதக் கோளாறும் இல்லை என்று சொல்ல முயன்றான் அப்து.

எப்படியோ சமாளித்துக் கொண்டு, "நா-நா-நா-நான் க-க-க-கலியாணம் ப-ப-ப-பண்ணிக்க வேணும்" என்று சொல்லி முடித்தான்.

"என்னது!" என்று கேட்டார் டாக்டர்.

காப்பிரைட்: லிபி; (லிட்டரரி ஸிண்டிகேட்), லஸ், சென்னை - 4

அப்து விவரமாய்ச் சொல்ல முயன்ருன். வார்த்தைகள் வாயில் வந்தால்தானே! டாக்டர் தம் தலையைச் சொறிந்துகொண்டார்.

“பேச முடியாவிட்டால் பாடு” என்று சொன்னுர்.

அப்துவுக்கு ஆச்சரியமாய்ப் போயிற்று. டாக்டர் உண்மையிலேயே தன்னைப் பாடச் சொல்வதாக இவனுக்கு நம்பிக்கை உண்டாகவில்லை. அவர் சொல்வது உண்மைதாஞ என்பதை உறுதி செய்துகொள்ள விரும்பி ஜாடை காட்டினுன்.

“உண்மைதான். சந்தேகப்படாதே. பாடு. உனக்கு என்ன இஷ்டமோ அதைப் பாடு. உன் திக்குவாய் தீர அதுவே சிறந்த வழி. ஆனுல், அப்படி ஏற்படும் குணம் கொஞ்ச நாள்தான் நீடிக்கும்” என்ருர் டாக்டர்.

அப்து மூச்சைப் பிடித்துக்கொண்டு, குரலைப் பலமாய்க் கிளப்பினுன். டாக்டர் தம் வாழ்க்கையில் இதுவரையில் இந்த மாதிரி கர்ண கடோரத்தைக் கேட்டதேயில்லை. ‘நம் முட்டாள்தனம்! ஏனடா இப்படி யோசனை சொன்னேம் இவனுக்கு!’ என்று தமக்குள் சொல்லிக்கொண்டார்.

அப்துவின் நாக்கு ஆரம்பத்தில் தட்டித் தடுமாறினுலும், பிறகு சற்றுத் திருந்தியது. கக்குவான் வந்தவன் குரைப்பது போல, எப்படியோ தன் கலியாண ஆசையையும் திக்குவாயினுல் அதில் மண் விழுவதையும் சொல்லி முடித்தான்.

அப்து வாயைத் திறந்து சிறிது ஒலி எழுப்பினுல் போதும்; உடனே ஒரு கல் வந்து தம் மார்பிலே அடித்தது போல வேதனையாக இருந்தது டாக்டருக்கு.

அப்துவுக்கு இப்போது ரொம்பத் தைரியம் வந்துவிட்டது. தனக்குத் தானே பேசிக்கொள்வது போல எண்ணிக் கொண்டான். பாடவும் தொடங்கிவிட்டான்:

நாளெலாம் நான்
நினைப்பது உனையே.
நாளெலாம் என்
காதலும் உனக்கே.
என்னருகே நீ
இலாத நேரம்
என்னுளம் ஏனே
ஏங்கி நலியுதே!

“போதும்! போதும்!” என்று வெகு துரிதமாய்ச் சொன்னுர் டாக்டர். மேலும், “ரொம்ப அருமையாய்ப் பாடுகிருய். ஆயினும், இப்படி வீணுகப் பாடினுல் களைத்துப் போவாய். வேண்டாம். நான் சொல்வதைக் கேள். உன் விஷயம் ரொம்பச் சிக்கலானது. பெருங் கூச்சந்தான் உனக்கு வந்திருக்கும் வியாதி” என்ருர்.

டாக்டரின் இந்த முடிவைக் கேட்டு அப்துவுக்குத் திருப்தி ஏற்படவில்லை. இவன் ஆட்சேபிக்க முயன்ருன். பேச வாயெழவில்லை. பாட்டுப் பாடினுல் எவ்வளவு அற்புதமாய் வருகிறது என்ற விஷயம் அப்போது இவனுக்கு ஞாபகம் வந்தது. மறுபடியும் குரலைக் கிளப்பி விட்டான்:

இல்லை இல்லை இல்லையே;
ஏதும் கூச்சம் இல்லையே.
உண்மை உண்மை உண்மையே;
ஒன்றும் கூச்சம் இல்லையே.

டாக்டர் மறுபடியும் அவனைத் தடுத்து நிறுத்தினுர். இந்த மாதிரி ஆசாமிகளால் தமக்கும் தொல்லை, தம் ஆஸ்பத்திரிக்கும் கெட்ட பெயர் வருமே என்று பயந்தார்.

வெகு விரைவாக, “வாஸ்தவம்; என் நேரத்தைப் பாழாக்காதே.

உனக்கு ஒரே ஒரு பரிகாரந்தான் உண்டு: பிறருடன் தைரியமாய்ப் பேசு. தெரிந்தவரோ, தெரியாதவரோ பரவாயில்லை. உண்மையில், தெரியாதவராயிருந்தால்தான் ரொம்ப நல்லது. உனக்குத் தட்டுப்படும் யாருடனும் பேசத் தொடங்கிவிடு. வாயில் வந்ததைப் பேசு. முக்கியமாய்ப் பெண்களோடு பேசப் பார். தினந்தோறும் நீ இப்படிச் செய்து வந்தால், காலக்கிரமத்தில் குணமடைவாய். அதில் சந்தேகமில்லை'' என்று சொன்னார்.

மேலும் விஷயங்களைக் கேட்டறிந்துகொள்வதற்காக அப்து தன் மார்பை விம்மி நிமிர்த்தினான். டாக்டருக்கு ஒரே திகிலாய்ப் போயிற்று. தம் காது இரண்டிலும் விரல்களை வைத்து அழுத்திப் பொத்திக்கொண்டார்.

''வேண்டாம்; வேண்டாம்; வேண்டாம். உன் அருமையான தொண்டையை வீணே சிரமப்படுத்தாதே. சந்திக்கிற யாரோடாவது பேசுவதற்கு அதை வைத்துக்கொள். இங்கே வேண்டாம்'' என்று சொல்லி, அவனைப் பிடித்துத் திருப்பி, வாசலில் கொண்டு போய் விட்டு, கதவைக் கெட்டியாகச் சாத்திக்கொண்டு, 'அப்பாடா!' என்று ஒரு பெருமூச்சு விட்டார்.

டாக்டரின் ஆஸ்பத்திரி அப்பாவியா என்ற இடத்தில் இருந்தது. இப்போதும் அது அங்கேதான் இருக்கிறதோ என்னவோ. ஹீலியாபோலி என்ற இடத்தில் இருக்கிறது அப்துவின் மாமன் வீடு. அந்த வீட்டுப் பக்கம் செல்லும் ட்ராம் வண்டி நிற்கும் ஸ்டாப் நோக்கி அப்து நடந்தான். 'முன்பின் தெரியாதவரிடங்கூடப் பேசத் தொடங்கிவிடு' என்று டாக்டர் சொன்ன யோசனையைப் பற்றியே நினைத்துக்கொண்டு நடந்தான். ''த-த-த-தயவு ப-ப-ப-பண்ணி ம-ம-ம-மணி எ-எ-எ-என்ன சொ-சொ-சொ- சொல்லுங்கள்.'' சே! இப்படியா தொடங்குவது? அசாத்தியம். டாக்டர் ஒரு பைத்தியம். பைத்தியத்துக்கு டாக்டர். இதற்கெல்லாம் டாக்டர் இல்லை. எதற்கெல்லாம்...? அவர் என்ன டாக்டர்? இந்த மாதிரி கேஸுக்கெல்லாம் அவர் சிறந்தவர் என்று நண்பர்கள் சொன்னார்கள். ஆனால் என்ன கேஸுக்கு என்று அவர்கள் சொல்லவில்லை. அப்து பைத்தியமா? அப்படியா அவர்கள் நினைத்தார்கள்? இல்லவேயில்லை; இவன் பைத்தியமில்லை.

அப்து ட்ராம் ஸ்டாப்பை அடைந்துவிட்டான். ட்ராமுக்குக் காத்தபடி அங்கும் இங்கும் 4 தப்படி நடந்துகொண்டே இருந்தான். சூரியன் மலைவாயில் விழுந்துகொண்டிருந்தது. ஏழு கஜ உயரத்துக்குமேலே எலெக்ட்ரிக் கம்பெனியார் போட்டிருந்த விளக்குகள், ஏதோ நட்சத்திரங்களோடு நட்சத்திரங்களாக மினுக்கிக்கொண்டிருந்தனவே யொழிய, வெளிச்சம் கொடுக்கவில்லை; ஆனால் இருள் என்பது என்ன என்ற விஷயத்தை மட்டும் நமக்குப் புரியச் செய்துகொண்டிருந்தன. கண்ணுக்குத் தென்பட்டுக் கொண்டிருந்த இடம் பொருளெல்லாம் எப்படி மறைகின்றன! மனிதனை மரமாகவும் லாந்தர்க் கம்பத்தைக் கொடி போன்ற பெண்ணாகவும் எப்படி இந்த இருள் மாற்றிவிடுகிறது! சாலையிலே விழும் நிழல் சிறியதொரு நீர்த்தேக்கம்போல் தோன்றவே, நம்

காலில் உள்ள ஜோரான ஜோடு சேறுபட்டுக் கெட்டுவிடக் கூடாதே என்று எப்படி வெகு ஜாக்கிரதையாக நடக்கிறோம்!

இந்தச் சமயத்தில் யாரோ ஓர் ஆசாமி இவனை நோக்கி வந்து கொண்டிருப்பதைக் கண்டான். வந்தவன் ரொம்ப அசாதாரண மான உடுப்பணிந்துகொண் டிருந் தான். அப்துவுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. ஒரு மனுஷன் எவ் வளவுதான் பருமனாயிருக்கட்டுமே; கொசு வலை போன்ற சல்லாத் துணியையா உடுத்துவது! அவன் அணிந்திருந்த அங்கியோ வெகு நீளமாயிருந்ததால், அதில் பெரும் பகுதியையும் சுருட்டி மடக்கித் தோளில் போட்டுக்கொண் டிருந் தான். அப்படியும் மிஞ்சிய நீளம் தரையில் புரண்டுகொண் டிருந் தது. ஆசாமி தலைப்பாகையை உள் ளங் கையிலே தலைகீழாக வைத்து ஒரு கிண்ணம் போல வந்திக்கொண் டிருந்தான். அவன் பையப் பைய அன்ன நடை போட்டுக்கொண்டு வந்தான். எத்தனையோ கால மாகத் தன்னை விட்டுப் பிரிந் திருந்த காதலியைக் கனவில் கண்டு அடைந்தது போன்ற ஒரு புன்சிரிப்பு அந்த ஆசாமியின் முகத் திலே தவழ்ந்தது. இந்தமாதிரி ஆளோடு பேசுவதில் ஒன்றும் தீங்கில்லை என்று அப்து எண்ணி னான். ஆனாலும் ஆசாமி விசித்திர மான உடுப்பணிந்திருக்கிறானே என்று தயங்கினான். இந்தப் பிரச்னை தானாகவே தீர்ந்துவிட் டது; ஆசாமி தானாகவே இவன் அருகில் வந்துவிட்டான்.

"எல்லாம் கடவுள் தந்த பாக்கி யம். நாம் அளித்ததைத்தின்று வாழ் வாயாக!" என்று ஆசாமி ஒரு வறட் டுப் புன்சிரிப்புடன் சொன்னான். கிண்ணம் போல் நிமிர்ந்திருந்த தலைப்பாகையைப் பார்த்தான் அப்து. அதில் ஒன்றும் இல்லை. ஆசாமியின் தமாஷ்ப் பேச்சைக் கண்டித்து ஏதோ சொல்ல விரும்பி னான். ஆனால், பேசும் முயற்சி வழக்கமான ஸர்க்கஸோடு முடிந்து விட்டது.

"கூச்சப்படாதே! நல்ல பொரு ளெல்லாம் கொள்ளை கொள்ளையா யிருக்கின்றன. கேள்: உனக்கு அளிக்கிறோம். தெய்வ நம்பிக்கை உள்ள முஸ்லிம் இல்லையா நீ?" என்று சொல்லி இவனுக்குத் தைரியமூட்டினான் ஆசாமி.

தன் தெய்வ நம்பிக்கைக்கும் இந்த மனிதனுக்கும் என்ன சம்பந் தம் என்பது அப்துவுக்குப் புரிய வில்லை. ஆயினும் பதில் சொல் வதே சரி என்று நினைத்தான்.

"ஆ- ஆ- ஆ- ஆமாம். தெ-தெ- தெ- தெய்வ ந-ந-ந- நம்பிக்கை யுள்ள மு- மு- மு- முஸ்லிம்தான்."

ஆசாமியின் முகம் பிரகாசம் அடைந்தது.

"அப்படியானால் சரி. நான் தான் உன்னைப் படைத்த கடவுள்" என்று புன்சிரிப்போடு சொன்னான்.

அப்துவுக்கு என்னவோ ஒரு திகில் உண்டாயிற்று. ட்ராம் ஏதாவது வருகிறதா என்று பார்த் துக்கொண்டே, "நா-நா-நா- நான் ஒ-ஒ-ஓ- ஓர் உ-உ-உ- உண்மையான தெ-தெ-தெ- தெய்வ வி-வி- வி-விசுவாசி" என் றான்.

"உன் கடவுளின் முன்பு உன் வாயடைத்துப் போனதில் ஒன் றும் ஆச்சரியமில்லை. கடவுள் நித்தம் நித்தம் மனிதர்களுக்குத் தரிசனம் தருகிறாரா, என்ன? அபூர்வமாகத்தானே தருகிறார்.

நீ என்னைத் தரிசித்ததாக யாரிடமும் சொல்லாதே. நான் படைத்த ஜீவர்களின் முன்பு ரகஸ்யமாகத் தோன்றவே எனக்கு இஷ்டம்'' என்றான் ஆசாமி.

அப்து அதிவேகமாகத் தலையைப் பலமுறை குனிந்து குனிந்து வணங்கினான். இவ்வளவு தடவை களைக்காமல் குனிந்து நிமிரத் தன் தலைக்குச் சக்தி உண்டு என்பது அவனுக்கே இதுவரையில் தெரியாது.

"என் படைப்புகளுக்குள்ளே நீ ஓர் அருமையான ஜீவன். உன்னைப் படைக்கப் பிடித்த களிமண்ணைக் கொண்டு ஒரு கோவேறு கழுதையைச் சிருஷ்டிக்கத்தான் முதலில் எண்ணினேன். அது தவறி மனிதனாகிவிட்டதே என்று அன்று வருந்தினேன். இப்போது பார்த்தால், அது ஒன்றும் தவறில்லை என்பது நிதரிசன மாகிவிட்டது. உனக்கு வேண்டியதைக் கேள்: பணம் வேண்டுமா? அல்லது வேறு ஏதாவது வேண்டுமா? எதுவானாலும் கேள். நான் கருமி இல்லை. என்னிடம் எத்தனையோ வித மாத்திரைகள் இருக்கின்றன. இங்கே இப்படியே நீ பற்றி எரிந்து பஸ்மமாக வேண்டுமா? அதற்கும் என்னிடம் மாத்திரை இருக்கிறது'' என்று சொல்லிக்கொண்டே, அப்துவின் வயிற்றிலே ஆசாமி தன் முழங்கையால் ஒரு குத்துக் குத்தினான். மேலும் தொடர்ந்து, "அந்த மாத்திரையை விழுங்கினால் நீ அப்படியே பீரங்கிக் குண்டு போல் வெடித்து, வெந்து நீறுவாய். உன்னைக் கவிஞனாக்க ஒரு மாத்திரை, பிரசங்கியாக்க ஒரு மாத்திரை, கற்பனைக் களஞ்சியமாக்க ஒரு மாத்திரை, கட்டில் கால்களை நீ கட்டியணைத்துக் கொள்ளும்படி செய்ய ஒரு மாத்திரை- இப்படிப் பல மாத்திரைகள் என்னிடம் இருக்கின்றன. உனக்கு எது வேண்டும்? இப்படிக் கொஞ்சம் தனியாக வா. ஜனக் கும்பலே வராத இடமான அந்தக் கொட்டகைக்குப் போவோம். உள்ளே போய்க் கதவைச் சாத்திக் கொள்வோம். அடேடே! அதோ ஒரு ட்ராம் வருகிறதே! யாராவது என்னைப் பார்த்துவிடப்போகிறார்கள். அப்புறம் என் கொடைகளில் உன் பங்கு உனக்குக் கிடைக்காமல் போய்விடுமே!'' என்றான்.

இப்படிச் சொல்லிவிட்டு, அப்துவின் புஜத்தைப் பிடித்து இழுத்துக்கொண்டு ஆசாமி போனான். கடவுளுக்கும் தனக்கும் நடக்கும் இந்த அந்தரங்கமான சம்பாஷணை அப்துவுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. இரண்டு பேரும் கொட்டகை வாசலுக்குப் போவதற்கும், ட்ராம் வந்து நிற்பதற்கும் சரியாக இருந்தது. ஆசாமி உடனே விர் என்று உள்ளே புகுந்தான். அப்து அவன் பிடியிலிருந்து திமிறிக்கொண்டு கிர் என்று வெளியே ஓடிவந்தான். ஒரே தாவாய்த் தாவி ட்ராமில் ஏறிக்கொண்டான். முதல் வகுப்புக் கம்பார்ட்மெண்டுக்குப் போனான். ஒரு வீட்டில் பொத்தென்று சாய்ந்தான். பெருமூச்சு விட்டபடி நெற்றி வியர்வையை ஒரு விரலால் வழித்தெறிந்தான்.

அப்துவின் வீட்டுக்கு எதிரே ஒரு பெண் உட்கார்ந்து இவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவளை இவன் கவனிக்கவில்லை. கொஞ்சம் ஆசுவாசப் படுத்திக் கொண்டு, சிறிது நேரத்துக்கொரு தடவை தலையை நிமிர்த்தி ஜன்னலுக்கு வெளியே பார்த்துக்கொண்டிருந்தான். எங்கேயாவது அந்தப் பைத்தியம் திரும்பி வந்து தன்

னைப் பிடித்துக்கொண்டு விடப் போகிறதே என்று இவனுக்குப் பயம்.

ட்ராம் வெகு தூரம் போய் விட்டது. அப்துவின் பதற்றம் குறைந்தது. கொஞ்சங் கொஞ்ச மாக இவன் மனசு நிதானத்துக்கு வந்தது. இப்போதுதான் அந்தப் பெண்ணை இவன் கவனித்தான். வண்டியில் இவன் ஏறிய பிறகு இதுவரைக்கும் ட்ராம் ஓரிடத் திலும் நிற்கவில்லை. ஆகவே, அவள் இத்தனை நேரமும் வண்டி யிலேயே இருந்திருக்கிருள் என் பது இவனுக்குப் புலப்பட்டது. தான் ஒரு துப்பாக்கி ரவைபோல் ட்ராமுக்குள் பாய்ந்ததும் கற் குண்டுபோல் வீட்டில் சாய்ந்ததும் இவனுக்கு ஞாபகம் வந்தன. இவன் தோற்றமே அவளுக்குத் திகிலளித்திருக்கும் என்பதில் சந் தேகமில்லை. இவன் செயலைப் பார்த்து அவள் அதிசயித்திருப் பாளோ என்னவோ? அவளுக்கு அப்து சமாதானம் சொல்ல விரும் பினன். இந்தச் சமயத்தில் கண் டக்டர் வந்து சேர்ந்ததால், அவ ளுடன் இவன் பேச முடியவில்லை. கண்டக்டர் பெரிய வாயாடி. தொண தொண என்று பேசிக் கொண்டே, பையிலிருந்து டிக் கட்டை எடுத்து நீட்டினன்.

"ஒரு பைத்தியம் ஆஸ்பத்திரியி லிருந்து தப்பியோடிவிட்டதுங்க. அப்பாவியா ஸ்டாப்பில் அதைக் கண்டார்கள். அதைப் பிடிப்பதற் குள் வெகு வேகமாய் அது ஓடி விட்டது. யார் கண்டார்? இந்த ட்ராமிலேயே அந்தப் பைத்தியம் வந்து உட்கார்ந்திருந்தாலும் இருக் கலாம். ஆனல், இது சாத்திய மில்லைங்க. பின்னே எங்கேதான் போய் அந்தப் பைத்தியம் ஒளிந் திருக்கும்? அந்த ஸ்டாப்பிலே ஒளிய இடமில்லை. இந்த ட்ரா மிலேதான் நுழைந்திருக்கவேண்டு முங்க."

அப்து இந்த வார்த்தைகளைக் கேட்டதும் கலவரம் அடைந்தான். ஓர் அசடனைப் போல் வாயை வாயைத் திறந்தான். அந்தப் பெண் இவனையே கவனித்துக் கொண்டிருந்தாள். கண்டக்டரின் பேச்சைக் கேட்பதும், அப்துவைத் திரும்பித் திரும்பிப் பார்ப்பதுமா யிருந்தாள். அப்து எவ்வளவு நடுங்குகிருன் என்பதை அவள் கண்டுகொண்டாள். கண்டக்டர் மற்றப் பிரயாணிகளைக் கவனிக் கப் போய்விட்டான். பெண் ணிடம் ஏதாவது ஒரு தமாஷோ விகடத் துணுக்கோ சொல்லி, அவ ளைச் சமாதானப்படுத்த இதுதான் சமயம் என்று அப்து எண் ணினன். பைத்தியம் எங்கே ஒளிந் திருக்கிறது என்பது அப்து ஒரு வனுக்குத்தான் தெரியும். ஆகவே, அந்த விஷயத்தை வெளியிடவும் இவனுக்கு மிக ஆவலாயிருந்தது. ஆயினும்,வழக்கப்படி இவனுடைய நாக்கு இவனை மோசம் செய்யத் தொடங்கியது.

"நா-நா-நா-நான் அ-அ-அ-அவ னைப் பா-பா-பா- பார்த்தேன்" என்று உளறினன். பெண் சிறிது கூட இவன் பேச்சை எதிர்பார்க் காததால் திடுக்கிட்டாள்.

இந்த மாதிரி பேசுவதில் பய னில்லை என்று அப்துவும் உணர்ந்து கொண்டான். டாக்டர்தான் பாடச் சொன்னரே என்பது ஞாபகம் வந்தது. குரலைக் கிளப் பினன்:

அழகுள்ள பெண்ணே,
கேளடி நீ.
அந்தப் பயித்தியம்
ஒளிந்தவிடம்
அங்கே தோன்றும்
கோட்டகை பார்
அதற்குள் தான்அது
புகுந்துளது.

பாட்டை இவன் முடிக்கவில்லை. இதற்குள்ளே பெண் திடுதிப் பென்று எழுந்தாள். பெருங்குரல் பாய்ச்சி, "இவனைப் பிடியுங்கள்! விடாதீர்கள்" என்று ஒரேயடி யாய்க் கூக்குரல் போட்டாள்.

ட்ராம் நல்ல வேளையாக ஏதோ ஒரு ஸ்டாப்பில் போய் நின்றது. அப்து சடார் என்று வெளியே குதிப்பதைத் தவிர வேறு வழி யில்லை. இனி ட்ராம் இவனுக்கு ஏற்ற இடம் இல்லை. தன்னையே ஓடிப்போன பைத்தியம் என்று அவர்கள் பிடித்துக்கொள்ளக் கூடும். அப்து ஓட்டம் பிடித்தான். ஓடி ஓடிக் கடைசியாகத் தன் வீடு போய்ச் சேர்ந்தான்.

அங்கே முதல் முதலில் இவ னுக்கு எதிர்ப்பட்டது அம்மான் மகள் தான். இவனும் சரி, அவளும் சரி, ஆச்சரியப்படும்படி, இவன் திக்குவாய் போய்விட்டது!

காலேஜ் படிப்பின் பயன்

வேறே எது எப்படிப் போனாலும், காலேஜ் படிப்புக்கு ஒரு பயன் நிச்சயமாக இருக்கிறது: முதலாளியின் வியாபாரத் தில் தன் மூக்கை நுழைக்காதபடி அவருடைய மகனை நாலு வருஷ காலம் அது தடுத்து வைக்கிறதில்லையா?

—பென் ஜே. ஸாலோம்

பிடிக்காத பாடம்

ஒரு பையனுக்குச் சரித்திர பாடம் பிடிக்காது. அவன் தன்னுடைய அபிப்பிராயத்தைச் சரித்திர பாட புஸ்தகத்தின் அட்டை உட்பக்கத்தில் இப்படி எழுதி வைத்திருந்தான்: "எங்கேயாவது அபாயமான தீ பிடித்துவிட்டால், உடனே தயவு செய்து இதை அதில் எறியுங்கள்." —'ஓம்கோ ந்யூஸ்'

மிக விரைவான விவாக ரத்து

இதுவரைக்கும் ஹாலிவுட்டில் நிகழ்ந்த விவாக ரத்து வழக்குகளுக்குள்ளேயே மிக விரைவாக நடந்த ஒன்று இது: ஹாலிவுட் மூவி நடிகை ஒருத்தி மணம் புரிந்துகொண்ட உடனே அதைத் தொடுத்தாள். விவாகத்தைப் பதிவு செய்து கொண்ட பாதிரியின் ரெஜிஸ்டரில் தன்னைவிடத் தன் கண வன் பெரிய கையெழுத்துப் போட்டுவிட்டான் என்பதே அவள் புகார். —ஏக்ரியென் ஆண்டர்ஸன்

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS-4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

இலக்கியப் படிப்பு

ஒரு மனிதன்,

இயற்கையோடு இயற்கையாய் லயிப்பதிலே - தன் நுணுக்கமான உணர்ச்சிகளையெல்லாம் எழுப்பும் மூல காரணங்களான சூரியனோடும் பூமியோடும் ஒன்றிப் போவதிலே- பரவசமடையவில்லையானால்,

விதம் விதமான உருவங்களில் அழகு ஒளிர்வதைப்பற்றி லட்சியம் செய்யவில்லையானால்,

சகோதர மனிதர்களையும் பிராணிகளையும்பற்றி அறிந்து கொள்ள ஆசைப்படவே யில்லையானால்,

சகல வஸ்துக்களும் ஓர் ஒழுங்கு முறைக்கு உட்பட்டு முன்னேறி வரும் ஒருமைப்பாடு ஒன்று பளிச்சுப் பளிச்சென்று துலங்குவதைக் கண்டுகொள்ளவில்லையானால்,

நன்மையாகவே எல்லாம் முடியும் என்ற நம்பிக்கை இல்லாதவனா யிருந்தால்,

'இது போலிகளின் காலம்', 'லட்சியம் என்பதே இல்லாத காலம்', 'வீண் வெறி பிடித்துக் கூச்சலிடுகிறவரின் காலம்', 'இது என்ன காலமோ; ஆண்டவனே அறிவார்' என்றெல்லாம் பேசுவோரின் கோஷ்டியிலே சேர்ந்தவனாயிருந்தால்,

அந்த மனிதன் எவ்வளவுதான் அரிய காவியங்களைப் படித்தென்ன? எஃகைப் போல் உறுதியான ஞாபக சக்தி உடையவனாயிருந்தென்ன? பெரும்புலமையும், கூரிய அறிவும் பெற்றிருந்தென்ன? இலக்கியத்தினால் அடையக் கூடிய பயனை அவன் அடைய மாட்டான். உண்மையில் அவன் தன் நேரத்தை வீணடித்துக்கொண் டிருப்பவனே.

—அர்னால்டு பென்னெட்

May '53 **Regd. No. M. 4975**

மஞ்சரி

விஜய - வைகாசி

ஊரும் உலகமும் 1
சர்வாதிகாரத்துக்கு வழிகாட்டி .. .. ரா. ஸ்ரீ. தேசிகன் 4
ரமணர்: வாழ்வும் வாக்கும் 10
நூறாண்டு வளர்ந்த ரெயில் .. .. .. ஹிந்து-அமிர்தபஜார் 12
வைஸிராய் அழைத்த ஆசிரியர் .. ஜான் அவ் லண்டன் வீக்லி 20
கார்ட்டூன் கதம்பம் (படம்) 24
புரந்தரதாசர் .. .. பிரஜா மதம் 26
பாபுராவ் பதில் சொல்லுகிறார் .. .. பில்மிண்டியா 30
மாயமாய் மறைந்த நிபுணர் 32
துட்டைக் காணும் கருவி 37
சீமாட்டி பேட்டி .. .. .. ஸ்போர்ட் அண்டு பாஸ்டைம் 41
ஊர்வசி .. .. ரவீந்திரநாத் டாகுர் 44
வருவதைச் சொல்லலாம்.. .. கல்கத்தா முனிஸிபல் கெஜட் 47
புகழ் மிகுந்த வைசாலி .. .. பம்பாய்க் கிரானிக்கிள் வீக்லி 51
சர்க்கஸ் விலங்குகள் .. .. ஃப்ரீ இந்தியா 53
நம் புராதனக் கப்பல்கள் .. .. கலைச்சுடர் 55
பானைக்கு உறுதி தரும் பூச்சு .. திருவாங்கூர்-கொச்சி ந்யூஸ் 59
அசுவத்தாமன் கொடுமை 61
ருஷியாவின் புதிய தலைவர்கள்.. .. .. மாடர்ன் ரெவ்யூ 64
'அம்மா, ஒரு கதை சொல்லு' .. .. பேரெண்ட்ஸ் மகஸீன் 69
என்னைக் கேளுங்கள் .. காப்டன் என். சேஷாத்திரிநாதன் 73
க்விஸ் 77
மீண்டும் மனோவசியம் .. .. டைம் 78
திக்கு வாயன் .. .. விபி 82
இலக்கியப் படிப்பு .. .. 3-ஆம் அட்டை